Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 62 • 16.10.2016



## 'எழுக தமிழில் மக்கள் திரள வேண்டுமென மனதார விரும்பினேன்'

வெளிப்படையாக பேசும் மாவை

## குழப்பத்திற்கு யார் காரணம்?



## சூனியத்தால் நடந்த மரணங்களா?

### நடுக்கடலில் சிக்கிய முக்கிய புள்ளி

# சூசை எடுத்த அதிரடி முடிவு

கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான SB TRAVELS AND TOURS PVT LTD இலக்கம் 324 அலுத்மாவத்தை வீதியிலும் அத்துடன் தனது கிளைகளை கதிரேசன் வீதியிலும் தற்போது யாழ் மண்ணில் இலக்கம் 216 கஸ்தூரியார் வீதியிலும் தனது கிளையை விஸ்தரித்துள்ளது



வானில் பறக்கும் கனவுகளை

**SB TRAVELS & TOURS (PVT) LTD.**

உடன் உங்கள் கனவுகளை நினைவாக்கிட எமது சேவைகள்...

IATA | Accredited Agent

- இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களையும் வீசாக்களையும் மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படுகிறது.
- இந்தியாவுக்கான விசாக்கள் வெகு விரைவிலும் மற்றும் மலேசியா, தாய்லாந்து, டுபாய் ஆகிய நாடுகளுக்குமான வீசாக்கள் செய்து தரப்படும் பயணக்காப்புறுதி பிரயாண திகதி மாற்றம் சுற்றுலா ஒழுங்கமைப்பு Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்
- ஐரோப்பிய நாடுகளுக்குமான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும் வீசா ஆலோசனைகளும் வழங்கப்படும்
- மேலும் BUDJECT AIRLINES SPICEJET , AIR ASIA, FLY DUBAI, AIRARABIA , ROTANA , ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணத்தில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்
- அத்துடன் தற்போது விசேட விலைக்கழிவுகளாக சென்னை 19800 மதுரை 17500 டோகா 16000 துபாய் 15000 சாஜா 13000 ஆகிய குறைந்த கட்டணங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

No. 216, Kasthuriyar Road,
Jaffna, Sri Lanka.
0212229555 | 0212228555 |
0766911080 | 0766911081

No. 324, Aluthmawatha Road,
Modara, Colombo - 15.
011 254 0208 | 011 254 0111
077 108 3480 | 077 108 3481/82

No. 132, Sri Kathiresan Street,
Colombo - 13.
011 233 3322 | 011 233 4470
077 108 3483 | 076 691 1090

E-mail : sbtravels216@yahoo.com | sbtravels132@yahoo.com | sbtravels132@gmail.com




அசல் யாழ்ப்பாண சுவை மற்றும் தரம் குன்றாத
அனைத்துப்பாரம்பரிய உணவு வகைகளையும் சுவைத்து
மகிழ தமிழ் மக்களின் அங்கீகாரம் பெற்ற
ஒரேயொரு உணவகம்

**AACHE**

**HOT FOOD RESTAURANT**


**ஆச்சி**

ஹாட் பூட் ரெஸ்ட்ரொரன்ட்

மிகவும் சுத்தமானது அத்தோடு மிக மிக தரமானது, செயற்கை சுவையூட்டிகள் அற்றது, யாழ்ப்பாண பாரம்பரியத்தைக் கொண்டது, குறுகிய காலத்தில் அதிகளவான வாடிக்கையாளரைப் பெற்று யாழ்ப்பாணத்தில் தன்னிகரில்லாது முன்னிலை வகிக்கும் ஒரேயொரு உணவகம்.



புதன், சனி ஞாயிறு
போன்ற நாட்களில்
மதியம் சுவையான யாழ்.
ஒடியல் கூழினை சுவைத்து
மகிழலாம்...



சகல விதமான வைபவங்களுக்குமான அனைத்து உணவு வகைகளையும் ஓடர் செய்து உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.


147, பலாலி வீதி, திருநெல்வேலி.

கிளைகள்
01, நவீன சந்தை, மானிப்பாய்.
102, கண்டி வீதி, சாவகச்சேரி.
கைதடி கிழக்கு, கைதடி.

தொலைபேசி
021 222 5001 | 021 205 7455

HOT LINE 021 222 5010

# மூன்று வயது குழந்தை எந்த வகுப்பில் படிக்கும்?



இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குமரட்ண எழுதிய நந்திக்கடலுக்கான பாதை நூல் அவரை பிரபல்யமடைய செய்துள்ளது. அந்த நூல் வெளியீட்டின்பின் அடிக்கடி ஊடகங்களால் பேட்டியெடுக்கப்படும் நபராக மாறியுள்ளார்.

இப்படியான ஊடகப்பேட்டியொன்றில், கமால் அரசியலுக்கு வருவாரா என கேட்கப்பட்டது. அதற்கு அவர் சொன்ன பதில் 'இராணுவத்தில் பெரிய இடத்தில் இருந்துவிட்டு, புதிதாக அரசியலுக்குள் புகந்து கத்துக்குட்டியாக விரும்பவில்லை' என்றுள்ளார்.

இந்த பதிலின் பின்னர் முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பற்றிய சுவாரஸ்ய சம்பவமொன்று நினைவூட்டப்பட்டு வருகிறது.

பொன்சேகா அரசியலுக்கு வந்த புதிது. கூட்டங்களிற்கு போகும்போது சிறுபிள்ளைகளின் தலையை தடவி, அளவளாவி மகிந்த பாணி அரசியல் செய்யுமாறு அவரது ஆலோசகர்கள் கூறியிருக்கிறார்கள்.

அவர்கள் இதை சொன்னபோது பொன்சேகா மறுத்துள்ளார். 'மகிந்த செய்வதை என்னால் செய்ய முடியாது. எனது பிள்ளைகளை கூட இப்படி தூக்கி அளவளாவியதில்லை. நான் இராணுவ மனிதனாக வாழ்ந்துவிட்டேன்' என்றுள்ளார். அரசியல் என்றால் இப்படியிருந்தால்தான் வெற்றி பெறலாமென ஆலோசகர்கள் விளக்கம் சொல்லியுள்ளனர்.

இந்த விளக்கம் கொடுக்கப்பட்ட பின்னர், விகாரையொன்றில் நடந்த நிகழ்விற்கு பொன்சேகா சென்றுள்ளார். அங்கு நிறைய மக்கள் நின்றனர். ஆலோசகர்களின் கருத்து மூளையில் நிற்க, நேராக மக்களிடம் சென்றார். முன்பகுதியில் நின்ற பெண்மணியொருவர் சிறிய பிள்ளையொன்றை தூக்கி வைத்திருந்திருக்கிறார்.

அந்த பெண்மணியிடமிருந்து குழந்தையை வாங்கியிருக்கிறார். குழந்தைகளை தூக்கி அவர் பழக்கப்பட்டிருக்காததால், தூக்கும் முறையிலும் இயல்பற்ற தன்மை வெளிப்பட்டுள்ளது. பின்னர் 'ஹாய்.. பபாஞ் எத்தனை வயது?' என்றுள்ளார். குழந்தை திருதிருவென விழிக்க, பக்கத்தில் நின்ற தாயார் சொல்லியிருக்கிறார் 'மூன்று வயது சேர்' என.

பின்னர் பொன்சேகா சிரித்தபடி அடுத்த கேட்டுள்ளார். 'பபா எந்த வகுப்பில் படிக்கிறார்?' என. குழந்தையின் தாயார் வெலவெலத்து போய் என்ன பதில் சொல்வதென தெரியாமல் விழித்துள்ளார். உடனே பாதுகாவலர்கள் குறுக்கிட்டு, நேரமாகிவிட்டதாக கூறி பொன்சேகாவை அங்கிருந்து அழைத்து சென்றுள்ளனர்.

பின்னர் அனொமா மற்றும் ஆலோசகர்களிடம் பாதுகாப்பு பிரிவினர் விடயத்தை சொல்லியுள்ளனர். அதன்பின்னர் பொன்சேகா தனது 'இயல்பில் இருக்க இடமளித்துள்ளனர்.

# நாமலுக்கு வகுப்பெடுத்த யாழ் பத்திரிகையாளர்

எப்படியும் விரைவில் ஆட்சியை பிடித்துவிடுவேன் என மகிந்த வெளிப்படையாக கூறினாலும், அவரே அதனை நம்பவில்லையென்பதுதான் உள்வீட்டு தகவல். அடுத்த சில வருடங்களிற்கு ஆட்சி மாற்றம் நடக்க வாய்ப்பேயில்லையென்பதை மகிந்த நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்.

கூட்டு எதிரணி, புதிய கட்சியென்ற பெயரில் மகிந்த நடத்தும் போராட்டங்களின் பின்னணியில் இருப்பது பிள்ளை பாசம் என்கிறார்கள் கால்டன் இல்லத்திற்கு நெருக்கமானவர்கள்.

அவசரப்பட்டு தேர்தலை நடத்தி ஆட்சியை இழந்ததைவிட மகிந்தவிற்கு உள்ள பெரிய கவலை வாரிசை அரசியலில் ஸ்திரப்படுத்தவில்லையென்பதே. ராஜபக்ச குடும்பத்தையே கட்சிக்குள்ளிருந்து வேரறுத்துவிடுவதென தற்போதைய ஆட்சியாளர்கள் செயற்படும் நிலையில், நாமல் தனித்து இந்த சூழலை எதிர்கொள்ள மாட்டார் என மகிந்த நம்புகிறார். பிரேமதாசா திடீரென இறந்த பின்னர், தலைமையை கைப்பற்ற முடியாமல் சஜித் திண்டாடி வருவதை போல நாமலும் சிரமப்படுவார் என நெருக்கமானவர்களிடம் கூறி வருகிறார். இதனால் எப்பாடுபட்டாவது நாமலிற்கு ஒரு வழிகாட்டவே மகிந்த இவ்வளவு இறங்கி வந்துள்ளார்.



கோத்தபாய அரசியலில் முன்னகர்வதை எதிர்ப்பதன் காரணமும் இதுதான். தற்போது நாமல் ராஜபக்சவிற்கு தீவிர அரசியல், பொருளாதார, வரலாற்று பாடங்கள் நடத்தப்படுவதாக தெரிகிறது. பல்கலைகழக விரிவுரையாளர்கள், பத்திரிகையாளர்கள் என பலதரப்பினரையும் கால்டனிற்கு அழைத்து வகுப்புக்கள் நடக்கின்றன. அண்மையில் இப்படி அழைக்கப்பட்டவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றின் முன்னாள் ஆசிரியர். விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாக இருந்தேன் என அடிக்கடி கூறும் இவர், தமிழர் போராட்டம், தமிழ்சிங்கள முரண்பாடுகள் பற்றி கால்டனில் மூன்றுநாள் வகுப்பெடுத்துவிருந்து சாப்பிட்டுவிட்டு வந்துள்ளார்.

11.09.2016 அன்று வெளியான தீபம் (இதழ் 58) வாரஇதழில் வெளியான "கொலை... கொலை...கொலை" என்ற தலைப்பிலான ஈ.பி.டி.பி உறுப்பினரின் வாக்குமூல தொகுப்பு தொடர்பில் வடமாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். முன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர் சுப்பையா பொன்னையாவினால் கூறப்பட்டு, வெளியானதை "எதுவித ஆதாரமுமற்றதும், உண்மைக்கு புறம்பானது, எனது நற்பெயரிற்கு களங்கம் விளைவிக்கும் தீயநோக்கத்துடன் செயற்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளதுமான செய்தி" என குறிப்பிட்டுள்ளார்.

# நச்சுக்குளமாகுமா இராசேந்திரன் குளம்?

வவுனியா இராசேந்திரன் குளத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் அந்தப்பகுதி சூழல் அபாயநிலையை எதிர்நோக்கியுள்ளதாக பரவலாக குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றது.

பிரதேச இளைஞர், யுவதிகளிற்கு வேலை வாய்ப்பு வழங்க உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சாலையிலிருந்து பாதுகாப்பற்றமுறையில் வெளியேற்றப்படும் கழிவு நீரால் சுற்றுப் பகுதியில் உள்ள அரபாநகர், இராசேந்திரன். குளம், விநாயபுரம், பாரதிபுரம் கிராமங்களின் நீர்வளம் பாதிக்கப்படும் அபாயத்தைஎதிர்நோக்கியுள்ளன. முறையற்ற கழிவுநீர் வெளியேற்றத்தால் தொழிற்சாலையை அண்டிய சூழல் துர்நாற்றம் வீசும் பிரதேசமாகியுள்ளது.

முறையற்ற கழிவுநீர் வெளியேற்றத்திற்கு பிரதேசத்தில் எழுந்த எதிர்ப்பையடுத்து, வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் அங்கு நேரில் சென்று பார்வையிட்டார். முறையற்ற கழிவுநீர் வெளியேற்றத்தை சரிசெய்ய இரண்டு வார அவகாசத்தை தருமாறு அமைச்சரிடம் தொழிற்சாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டது. எனினும், பலவாரங்களாகியும் இதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

முறையற்ற கழிவுநீர் வெளியேற்றத்தால் சுற்றயல் பிரதேசவாசிகளிற்கு சுத்தமான குடிநீர் கிடைக்காமை, அருகிலுள்ள இராசேந்திரன்குளம் நச்சுக்குளமாகும் அபாயமுள்ளமை போன்ற ஆபத்துக்கள் நேரலாமென பிரதேசமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



திடீரென ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக கடந்த வார தீபம் வாரஇதழ் வெளிவரவில்லை. இந்த தடங்கலை பொறுத்துக்கொள்ளுமாறு வாசகர்கள், விற்பனை முகவர்கள், விளம்பரதாரர்களை அன்புடன் வேண்டி நிற்கிறோம். - தீபம் குழுமம்

# நடுக்கடலில் சிக்கிய புலிகளின் முக்கிய உறுப்பினர்

தமிழீழ விடுதலையை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட முப்பதுவரையான இயக்கங்களின் தலைவர்களில் மிக அறிவார்ந்தவர்களில் பாலகுமாரனும் ஒருவர். உலக அரசியல், இடதுசாரித்துவ கொள்கை, அரசியல் விஞ்ஞானம் என அறிவுபூர்வ உரையாடல்களிற்கு பாலகுமாரன் பொருத்தமானவர். ஆனால் ஒரு தலைவராக பாலகுமாரன் சோபிக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

ஈரோஸ் அமைப்பு கொண்டிருந்த ஆளணி, ஆயுத தளபாட வசதிகளிற்கு தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அந்த இயக்கம் ஏற்படுத்திய தாக்கம் குறைவானது. பாலகுமாரன் தீவிரமாக ஆயுதவழிமுறையை தலைமைதாங்க பொருத்தமானவரும் இல்லை. ஆளணியில்சிறியஇயக்கங்கள்எல்லாம்பெயர் சொல்லும்விதமாக ஏதாவதொரு தாக்குதலை நடத்தியிருந்தபோதும், ஈரோஸின் வரலாற்றில் அது மிஸ்ஸிங். ஈரோஸ் இயக்கத்தினர் நல்ல கருத்தியல்வாதிகளாக இருந்தார்கள். ஆனால் செயற்பாட்டாளர்களாக இருக்கவில்லை.

1987இல் இந்திய இலங்கை உடன்பாடு எட்டப்பட்டபோது ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளொட் போன்றன இந்திய இராணுவ




ஆதரவுடன் செயற்பட தொடங்கின. புலிகள் எதிராக தாக்குதல் ஆரம்பித்தார்கள். ஈரோஸ் ஆதரவோ, எதிரோ இல்லாமல் பேசாமல் இருந்தது.


இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறிய சமயத்தில்தான் இயக்கங்களிற்கு சிக்கல் உருவானது. இயக்கங்களின் முன்னால் மூன்று தேர்வு இருந்தது. ஒன்று அரசுடன் இணைவது அல்லது இந்தியாவிற்கு செல்வது. இரண்டு புலிகளுடன் இணைவது. மூன்றாவது தனித்து இயங்குவது.

தனித்து இயங்கும் வல்லமை புலிகள் தவிர்ந்த மற்றைய இயக்கங்களிற்கு இருக்கவில்லை. அதற்கு சில வருடங்கள் முன்னரே புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ் இயக்கங்களின் ஆளணியை புலிகள் கணிசமாக அழித்துவிட்டார்கள். ஈழப்போராட்ட வரலாற்றில் நடந்த இந்த சகோதரப்படுகொலையை பின்னணியில் நின்று இந்தியாதான நடத்தி முடித்தது. இயக்கங்கள் நிதானமாக, விழிப்பாக நடந்து இந்த சிக்கலை கடந்து ஒற்றுமையாக செயற்பட்டிருந்தால் ஈழப்போராட்டம் வேறு முடிவுகளை எட்டியிருக்கலாம். ஆனால் அது நடக்காதது உண்மையில் துரதிஸ்டமே.

இந்திய இராணுவம் வெளியேறியபோது ஈரோசும் உறுதியான முடிவெடுக்க வேண்டிய நிலையேற்பட்டது. அரசுடன் இணைந்து இருக்க ஈரோஸ் விரும்பவில்லை. தனித்தும் இயங்க முடியாத நிலை. இயக்கத்தை கலைத்து விட முடிவு செய்தார்கள். வீடு செல்ல விரும்புபவர்கள் வீடு செல்லலாம் என அறிவிக்கப்பட்டது. பாலகுமாரன் புலிகளுடன் இணைந்து கொள்ள முடிவெடுத்தார். அவருடன் சேர்ந்து ஈரோஸ் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் புலிகள் அமைப்பிற்கு வந்தார்கள். சிலர் போராளியாகவும் இருந்தார்கள். புலிகளின் நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளராக இருந்த பரா அவர்களில் ஒருவர். பலர் புலிகள் அமைப்பில் ஊதியம் பெறும் பணியாளர்களாக செயற்பட்டார்கள். வர்ணராமேஸ்வரன், சின்னபாலா, கருணாகரன் போன்றவர்கள் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வர்ணராமேஸ்வரன் பின்னர் கனடாவிற்கு குடிபெயர்ந்தார். சின்னபாலா

பாலகுமாரனிற்கு புலிகள் எந்த பொறுப்பும் வழங்கவில்லை. தமது இயக்கத்தில் இணைந்த இன்னொரு இயக்க தலைவர் என்பதால் முக்கியஉறுப்பினர்என்று அழைத்துகௌரவம் வழங்கி, வீட்டில் உட்கார வைத்தனர். இது புலிகள் பாணி. கொள்கை முடிவு, தாக்குதல் விவகாரங்களில் பாலகுமாரனுடன் புலிகள் ஆலோசிப்பதில்லை. இது பாலகுமாரனிற்கு ஆரம்பத்தில் வருத்தத்தை கொடுத்தது. தனிப்பட்ட உரையாடல்களில் அதை பதிவு செய்தார். என்றாலும், புலிகள் முடிவை மாற்றத்தால் பாலகுமாரனிற்குள் இருந்த வருத்தமே வழக்கமாகிவிட்டது. பேச்சினிடையே வெளிப்படுத்தவும் செய்வார். வன்னிக்கு புலிகள் சென்ற பின்னர் புதுக்குடியிருப்பில் பாலகுமாரனிற்கு வீடு வழங்கினார்கள். சமாதானத்தின் பின்னர், கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் மாடி வீடொன்றை அமைத்து கொடுத்தார்கள்.






பாலகுமாரனின் மனைவி மருத்துவ மாது. இரண்டு பிள்ளைகள். ஒரு மகன். ஒரு மகள்.

இறுதி யுத்தத்தில் உடையார்கட்டு பகுதியில் காயமடைந்ததன் பின்னர் பாலகுமாரன் விடுதலைப்புலிகளின் உயர் மட்ட தொடர்புகள் அனைத்தையும் இழந்து விட்டார். முன்னரும் அரசியல்துறை பொறுப்பாளர் மட்டத்திலான தொடர்பையும், நிகழ்ச்சிகளில் தளபதிகளை சந்திப்பவராகவும் மட்டுமே இருந்தார். பாலகுமாரன் மட்டுமல்ல, அரசியல்த்துறை உயர்மட்ட பொறுப்பாளர்கள் எல்லோருக்குமே இந்தகதிதான். அவர்களால் என்ன நடக்குமென்ற முடிவெடுக்க முடியவில்லை. புலிகளின் தலைமையின் முடிவை அறியவும் முடியவில்லை.

இப்பொழுது இலங்கை அரசியல் யாப்பு தொடர்பாக புத்தகம் எழுதி கூட்டத்தால் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள திருநாவுக்கரசு உள்ளிட்ட புலிகளின் அரசியல் ஆய்வாளர்கள் வலைஞர்மடத்தில் அருகருகாக குடியிருந்தனர். பாலகுமாரன், பரா உள்ளிட்டவர்கள் அருகருகாக குடியிருந்தனர். இவர்கள் அனைவரும் ஒன்றாக கூடி யுத்தம் அப்படி முடியுமா, இப்படி முடியுமா என மண்டையை பிய்த்துக் கொண்டிருப்பது அன்றாட நிகழ்ச்சி. தலைவரிடம் திட்டமுள்ளதா என்பதை அறிவதில் ஆர்வம்காட்டி, சாதாரண களத்திலிருந்து வரும் சாதாரண போராளிகளையும் பேட்டியெடுப்பதில் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்சூழலில் முறையான சிந்தனைக் குழாம் உருவாகததற்கு, முறையான அரசியல் ஆய்வாளர்கள், ஆய்வுமுறைமை உருவாகாததற்கு அந்த சமயங்கள் முழுமையான சாட்சி. புலிகளின் காலத்தில் அடையாளப்படுத்தப்பட்ட அரசியல் ஆய்வாளர்கள் அனைவரும் சம்பவங்களிற்கு பொழிப்பு கூறுபவர்களே. இதே ஆய்வுமுறைதான் இன்றுவரை தொடர்வது தமிழர்களின் துரதிஸ்டமே.

யுத்தம் இறுகிக்கொண்டு வர, புலிகளின் தலைமை என்ன முடிவெடுக்கிறதென்பது தெரியாமலிருக்க பாலகுமாரன் ஒரு ஆபத்தான முடிவெடுத்தார். அது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பிச் செல்வது!

அப்போது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு மக்கள் பெருந்தொகையில் தப்பிச் செல்ல தொடங்கிவிட்டார்கள். ஒன்று தலைமார்க்கமாக. இன்னொன்று, கடல்மார்க்கமாக. கடல்மார்க்கமாக தப்பி சுண்டிக்குளத்தில் நிலைகொண்டிருந்த 55வது டிவிசனிடம் சரணடைபவர்களிற்கு " உயிருத்தரவாதம் உள்ளதாக ஒரு அபிப்பிராயம் செய்திகளின் வழியாக உருவாக்கப்பட்டிருந்தது. புலிகளின் முக்கியஸ்தர்களை குறிவைத்து அரசு உருவாக்கிய அபிப்பிராயமாகவும் இருக்கலாம். அந்த டிவிசன் கட்டளை அதிகாரியாக இருந்த பிரிகேடியர் பிரசன்ன சில்வாவின் இயல்பால் உருவானதாகவும் இருக்கலாம்.

வலைஞர்மடத்திலிருந்து படகில் தப்பித்து சுண்டிக்குளத்தில் தரித்து நின்ற 55வது டிவிசன் படையினரிடம் சரணடைவதென பாலகுமாரன் முடிவெடுத்தார். இதற்காக இரகசிய திட்டம் தீட்டினார். இது 2009 மார்ச் மாதத்தில் ஆரம்பித்த திட்டம். அதாவது தமது கட்டுப்பாட்டிலிருந்து தப்பிச்செல்லும் பொதுமக்களிற்கே மரணதண்டனை வழங்கவும் புலிகள் எத்தனித்த சமயம். தனது உதவியாளர்கள் மூலம் படகொன்றை தயார் செய்தார். படகோட்டிக்கு ஒரு தொகை பணம் வழங்கப்பட்டது. பாலகுமாரன், மனைவி, பிள்ளைகள், நம்பிக்கைக்குரிய ஒரு சிலரின் குடும்பங்கள்தான் படகில் செல்பவர்கள்.

ஏப்பரல் முதல்வாரத்தில் பாலகுமாரனின் தலைமையில் படகில் தப்பிச்சென்றார்கள். வலைஞர்மட கடற்கரையில் மறைந்திருந்து, மக்கள் தப்பிச்செல்லாமல் ஏற்படுத்தப்பட்டிருந்த புலிகளின் காவல்வேலிக்கு டிமிக்கி கொடுத்து படகில் ஏறினார் புலிகளின் முக்கியஸ்தர்.

படகு மெல்லமெல்ல வேகமெடுத்து கரையை கடக்கஎத்தனிக்க, யாரோ தப்பிச்செல்வதை கடற்புலிகளின் படகொன்று அவதானித்துவிட்டது. துரிதகதியில் விரட்ட தொடங்கினார்கள். தப்பிச்செல்பவர்களை பிடிப்பதே அந்த அணியின் பணி. யாரோ பொதுமக்கள் தப்பிச்செல்கிறார்கள் என நினைத்த கடற்புலிகள் விரட்டிச் சென்று, அருகில் சென்று படகு மீது துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். படகிலிருந்து அலறல் சத்தங்கள்.

கிட்ட சென்று வெளிச்சம் பாய்ச்சினால், பாலகுமாரன் தலையை கவிழ்ந்தபடி உட்கார்ந்திருந்தார். அவரது இளவயது மகளின் கையில் காயம். எலும்பு முறிந்திருந்தது. தம்மை தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கும்படி பாலகுமாரனின் மனைவி போராளிகளை மன்றாட்டமாக கேட்டார். போராளிகளிற்கும் சங்கடமாகிவிட்டது.

அந்த படகை தடுத்து வைத்திருந்தபடி, கடற்புலிகளின் தளபதி சூசையை தொடர்பு கொண்டனர். (தொடரும்)

## மாற்றமல்ல; நீக்கமே தேவை!

நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக கொண்டு வரப்படவுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் (Counter Terrorism) வரைபை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இந்தவரைபு பாராளுமன்ற மேற்பார்வைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு, அங்கு திருத்தங்கள் செய்யப்படுமென்றும் அரசு அறிவித்துள்ளது.

ஆக, மிகவிரைவில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம்.

நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடை சட்டம் யுத்தத்தின் பின்னரான இலங்கைக்கு தீட்டான ஒன்றாக மாறிவிட்டது. ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை, சர்வதேச அழுத்தம், புதிய பயணம் என எல்லா திசைகளிலும் அரசு சந்திக்கும் நெருக்கடிகளில் ஒன்று பயங்கரவாத தடை சட்டம். யுத்த குற்றம், மனிதஉரிமை மீறல்கள், பயங்கரவாத தடைச்சட்டம் என்ற வரிசையில்தான் இலங்கை மீதான எல்லா நெருக்கடிகளும் அணிவகுக்கின்றன. யுத்தகால சம்பவங்களிற்கான பொறுப்புக்கூறும் கடப்பாடு புதிய அரசிற்கு உள்ளது.

கடந்த மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் பயங்கரவாத தடை சட்டம் நீக்கம் குறித்த வாக்குறுதிகளை அரசு வழங்கியிருந்தது. யுத்த குற்ற அழுத்தங்களை கலப்பு நீதிமன்ற வாக்குறுதி மூலம் வீரியமிழக்க செய்ததுடன், யுத்தக்குற்றம் உள்ளிட்ட எல்லா குற்றச்சாட்டுக்களையும் வீரியமிழக்க செய்ய பயங்கரவாத தடைச்சட்ட நீக்க முயற்சிகள் நடக்கிறது போல்த்தான் தெரிகிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் இலங்கைக்கு தேவையில்லையென ஆத்மார்த்தமாக ஆட்சியாளர்கள் உணர்ந்திருந்தால் புதிய உத்தேச சட்டமூல வரைபிற்கு இவ்வளவு எதிர்ப்பும், சந்தேகமும் எழுந்திருக்காது. வெளிப்படை தன்மையுடன் அரசு நடந்திருக்கலாம்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல தயாரிப்பு பணிகள் நடந்து கொண்டிருந்தபோது, அது குறித்த எச்சரிக்கைகளை புத்திஜீவிகளும், சிவில் சமூகமும் தொடர்ச்சியாக விடுத்து வந்தனர். சட்டங்களில் பெயர்தான் மாறுகிறதே தவிர, உள்ளடக்கத்தில் மாற்றமில்லை; சில சந்தர்ப்பங்களில் புதிய சட்டமூலம் ஆபத்தான விடயங்களை உள்ளடக்கியுள்ளதென்ற எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுக்களை அரசு இலகுவாக கடந்துள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட வரைபு இறுதியானதல்ல, புதிய ஆலோசனைகளை ஏற்று திருத்தங்கள் செய்யலாமென்ற வழக்கமான பதிலை சொல்லியுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் இலக்காக யார் இருப்பார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான தமிழ் இளைஞர்கள் இன்றும் எதிர்காலம் பற்றிய வெளிச்சங்கள் தெரியாமல் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் போராட்டங்களை நசுக்கவே பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை கையிலெடுத்தது. இனநல்லிணக்கம் ஏற்படாததால், இனங்களிற்கிடையிலான சந்தேகங்கள் நீடிப்பதால்தான் புதிய சட்டமூலமும் தயாராகிறது.

எனினும், தமிழ் சூழலில் இந்த சட்டம் பற்றிய உரையாடல்கள் நடக்கவில்லை. தமிழ் அரசியல் தலைவர்கள் யாரும் அது பற்றி பேசவில்லை. நாடாளுமன்றத்தில் எம்.ஏ.சுமந்திரன்தான் கவனம் கொள்ளத்தக்க உரையொன்றை நிகழ்த்தியிருக்கிறார். "சட்ட ஆணைக்குழுவினால் தயாரித்து வழங்கப்பட்ட வரைபை குப்பைக்கூடைக்குள் போட்டுவிட்டு, பாதுகாப்பு தரப்பினர் அடங்கிய குழுவொன்றின் மூலம் வரைபை தயாரித்ததாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடை சட்டத்தையும் விட, உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஆபத்தானதாக இருக்கும் என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளார். இதை தவிர்த்தால், தமிழ் அரசியல்வாதிகள் எல்லோரும் தமது தேர்தல் தொகுதிகளில் கோழி, ஆடு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உத்தேச சட்டமூலம் பற்றிய பகிரங்க உரையாடல்களை மக்கள் மத்தியில் மட்டுமல்ல, தமிழ் அரசியல்வாதிகள் மத்தியிலும் யாராவது ஆரம்பிக்க வேண்டிய துயரமான காலத்தில் இருக்கிறோம்.

பயங்கரவாதத்திற்கெதிரான போர் என பதினைந்து வருடங்களின் முன்னர் அமெரிக்க நேசப்படைகள் போர்ப்பிரகடனம் செய்தபோது, தத்தமது நாடுகளில் பயங்கரவாதத்திற்கெதிரான கடுமையான சட்டங்களை இயற்றினார்கள். இந்த சட்டங்கள் பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்து நிறுத்துமெனில், இன்று உலகம் அமைதிப்பூங்காவாகத்தான் இருந்திருக்க வேண்டும். யதார்த்தம் நேர்மாறாக உள்ளது. கடந்த பதினைந்து வருடங்களின் முன்னர் இருந்ததைவிடவும், உலகம் ஆபத்தான பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொண்டபடியிருக்கிறது. உலகத்தின் எல்லா பாகங்களும் தாக்குதல் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டபடியிருக்கின்றன. எங்கெல்லாம் பயங்கரவாதத்திற்கெதிரான கடுமையான சட்டமூலங்களை இயற்றுகிறார்களோ அங்கெல்லாம் சிறுபான்மையினமொன்று அதிருப்தியுடன் இருக்கிறது.

தற்போது இலங்கைக்கு தேவை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமல்ல. பயங்கரவாத தீடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதே. இதை தமிழ் மக்கள் பிரதிநிதிகள் இடித்துரைக்க வேண்டும்.

வரலாறு சொல்லும் பாடமிது. இலங்கை வரலாற்றிலிருந்து கற்க மாட்டேன் என எவ்வளவு காலத்திற்கு அடம்பிடிக்கப் போகிறது?

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**மகிந்த ராஜபக்ச**
**– குருணாகல் எம்.பி**

பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது பயங்கரவாதத்திற்கு எதிராக. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை புனர்வாழ்வு அளித்து விடுதலைசெய்துள்ளோம்.இன்று பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் நிலைமையேற்பட்டுள்ளது. பயங்கரவாத செயற்பாடுகளில் இருந்து ஜனநாயகத்திற்கு வந்து முதலமைச்சராக இருந்த பிள்ளையான் மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு தற்போது சிறைச்சாலை உணவு உண்ணுகின்றார்.



**கோவிந்தன் கருணாகரம் (ஜனா)**
**– கிழக்கு மாகாணசபை உறுப்பினர்**

துவிச்சக்கர வண்டியில் விறகு கொண்டு வந்தவர்களை வட்டவான் சந்தியில் வனபரிபாலனசபையினர் அடித்து, சைக்கிள் ரயர் காற்றை திறந்துவிட்டு, விறகையும் பறித்து எறிந்து கலைத்துள்ளனர். அவர்கள் விறகு எடுத்து வந்தது பிழையென்றால் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இப்படி அடாவடியாக செயற்படுவது பிழை.



**பசீர் சேகுதாவூத் தவிசாளர்**
**– முஸ்லீம் காங்கிரஸ்**

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் முஸ்லீம் காங்கிரஸ் ஏன் அவருடன் உறவுகொள்ள வேண்டி வந்தது, ஏன் அவரின் கோரிக்கைக்கு தலைசாய்க்க வேண்டி வந்தது போன்ற கேள்விகளிற்கு விடைசொல்வது, முஸ்லீம் காங்கிரசை இல்லாமல் செய்வதற்கு சமனாகும். எனவே, பகிரங்க நிகழ்வில் இவற்றை பேச விரும்பவில்லை. ஆனால், கட்சி தலைவர் இவ்வாறானதொரு நிகழ்வில் என்னுடன் கலந்து கொண்டால் பேசுவேன்.



**டி.எம்.சுவாமிநாதன்**
**– மீள்குடியேற்ற அமைச்சர்**

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து முக்கிய தளபதிகளையெல்லாம் விடுவித்துள்ள அரசாங்கம் ஏன் சாதாரண உறுப்பினர்களை தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளதென தமிழ் அரசியல்வாதிகள் கேள்வியெழுப்பி வருகிறார்கள். இதற்கான பதிலை என்னால் வழங்க முடியாதுள்ளது. அரசியல்கைதிகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசி விரைவில் உரிய பதிலை வழங்குவேன்.



**பா.அரியநேத்திரன்**
**– தமிழரசுக்கட்சி**

விடுதலைப் புலிகளின் போராட்ட காலத்தில் வடக்கு, கிழக்கு எங்கும் இருந்த ஒழுக்கம் இன்று இல்லாமல் இருப்பதை, எம்மால் அவதானிக்கமுடிகிறது. முள்ளிவாய்க்காலுடன் ஒழுக்கமும் மரணித்துவிட்டது. வடக்கு, கிழக்கில், மதுபானப் பாவனை அதிகரித்துள்ளது. கலாசார சீர்கேடுகளும் இளைஞர்கள் மத்தியில் பழிவாங்கும் மனோநிலையும் அதிகரித்துள்ளமை கவலையளிக்கிறது. ஊடகங்களில் தினமும் வரும் செய்தியில், கொலை, கொள்ளை, தற்கொலை, பாலியல் வன்முறை, வாள்வெட்டு என சமூகசீர்கேடுகள் நிறைந்துள்ளதை, சர்வசாதாரணமாகக் காணக்கூடியதாக உள்ளது. இதை அனுமதிக்கமுடியாது.

## எண்ணிக்கை

**90%** புங்குடுதீவிலுள்ள கிணறுகளில் உவராக மாறியுள்ளவை

**538** புலமைப்பரிசிலில் ஒரு மாணவரும் சித்தியடையாத வடக்கு பாடசாலைகள்

**2,021** புலமைப்பரிசிலில் வடக்கில் வெட்டுப்புள்ளியை கடந்தவர்கள்

**750,000** நண்பேன்டா நிகழ்ச்சிக்கான களியாட்ட வரியாக யாழ் மாநகரசபைக்கு கிடைத்த பணம்

எந்த சீரியசான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk

# 'எழுக தமிழில் மக்கள் திரள வேண்டுமென மனதார விரும்பினேன்'

## வெளிப்படையாக பேசும் மாவை

எஸ்.என்.நிக்ஷன்

***தீபம்:*** *தன்னை கொல்வதற்கு சதி நடப்பதாக வடக்கு முதலமைச்சரே பகிரங்கமாக கூறியிருக்கிறார். இது உண்மையெனில், பாரதூரமான விடயமல்லவா?*

***மாவை:*** முதலமைச்சரின் உயிருக்கு ஆபத்து என்பது பாரதூரமான விடயம். அவர் எங்களுடைய முதலமைச்சர். எங்கள் கட்சியைச் சேரந்தவர். அவரது உயிருக்கு ஆபத்து என அவரே பகிரங்கமாக முறையிட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. முதல்வரின் பாதுகாப்பு தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சியின் தலைவர் இரா.சம்மந்தனைச் சந்தித்து நேரடியாகத் தெரியப்படுத்தியிருப்பதுடன் கடிதமும் அனுப்பி வைத்திருக்கிறேன்.

அத்தோடு நீதியான விசாரணை நடத்தி சூத்திரதாரிகள் யார் எனக் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

***தீபம்:*** *தமிழ்த் தேசியக் கூட்;டமைப்பின் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ள நல்லாட்சி அரசாங்கத்தின் நல்லிணக்கச் செயற்பாடுகள் திருப்திகரமானதாக உள்ளதா?*

***மாவை:*** அதில் நாங்கள் திருப்தியாக இருக்கிறோம் என்று நூற்றுக்கு நூறு வீதம் சொல்ல மாட்டோம். அதற்கான ஆதாரங்களை சொல்லுவேன். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர், மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை என்றும் அதில் சில விடயங்கள் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறதென்றும் மிகப் பெரும்பாலான விடயங்கள் நடைபெறவில்லைஎன்றும் கட்சித் தலைவர் சம்மந்தன் பாராளுமன்றத்திலேயே கூறியிருக்கின்றார்.

அடுத்தததாக ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பல விடயங்களை அரசு செய்யவில்லை என்பதை எடுத்துக் கூறியிருக்கிறோம். பௌத்த மயமாக்கல் தொடர்பிலும், தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அரசு இன்னும் அதிகம் அக்கறை காட்ட வேண்டுமென்பதையும் கூறியிருக்கிறோம்.

***தீபம்:*** *நல்லாட்சியில் அதிருப்தியுடன் இருப்பதாக சொல்கிறீர்கள். வழக்கம் போல இந்த அரசும் தமிழர்களை ஏமாற்றுமென நினைக்கிறீர்களா?*

***மாவை:*** யாழ்ப்பாணத்தில் வைத்து ஐ.நா செயலாளர் பான்கீமூனுக்கு சில விடயங்களை தெளிவாக சொல்லியுள்ளோம். அதாவது இந்த அரசும் தமிழர்களை ஏமாற்றுமாக இருந்தால் வடக்கு கிழக்கு மாநிலங்களில் இலங்கை அரசு ஆட்சி செய்ய முடியாதளவிற்கு நாங்கள் செயற்பட வேண்டியிருக்குமென்று கூறியுள்ளோம். அது ஆயுதப் போராட்டமல்ல. ஆனால் மக்களை அணி திரட்டி போராடுவோம். அதற்கு நீங்கள் ஆதரவாக இருக்க வேண்டுமென்றும்; கேட்டிருக்கின்றோம்.

அரசியலமைப்பு சட்டம் நிறைவேற்றப்படவிருக்கின்ற நிலையில் இந்த அரசில் நம்பிக்கை இழந்து விட்டோமென்ற தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ தமிழரசுக் கட்சியோ இன்னமும் எடுக்கவில்லை.

***தீபம்:*** *அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அந்த அரசியலமைப்பு தொடர்பில் விளக்கமுடியுமா. அந்த அரசியலமைப்பில் வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பில் குறிப்பிடப் படுகின்றனவா?*


***மாவை:*** அரசியலமைப்பு திருத்தத்திற்காக ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கிறன. அந்த ஆறு குழுக்களில் நான் உட்பட கூட்டமைப்பு உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். அந்தக் குழுக்களின் அறிக்கைகள் வந்த பின்னர்தான் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்மதம் இன்றி இடைக்கால அறிக்கையை வெளியிட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அந்த வழிகாட்டல் குழு எத்தகைய அறிக்கையை தயாரிக்கப் போகின்றார்கள் என்பதை எங்களுக்குச் சொல்லும் போது தான் நாங்கள் அதனை ஏற்பதா இல்லையா, திருத்தங்களைச் சமர்ப்பப்பதா என்பதை தீர்மானிக்க முடியும்.

நாங்கள் சமஸ்டி தன்மை வாய்ந்த அரசியலமைப்பு முறை இருக்க வேண்டுமென்று முன்மொழிந்திருக்கின்றோம். அடுத்ததாக வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். எப்படி இணைப்பது என்புது தொடர்பாக ஆராய்கிறோம். இணைப்பு தொடர்பாக நான்கைந்து முன்மொழிவுகள் உள்ளன. அதில் முஸ்லிம்களுடைய உரிமையும் உள்ளடக்கப்பட வேண்டும்.

இப்பொது அதனை சொல்வதன் மூலம் நிறைவு பெறாத அந்த திருத்தத்தில் இணக்கங்களை ஏற்படுத்துவதிலும் முறையான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதிலும் பங்கம் விளைந்துவிடும என்ற காரணத்தால்தான் நாங்கள் அதனைப் பற்றி இப்போது பேசுவதை தவிரத்து வருகின்றோம்.

***தீபம்:*** ***வடக்கு கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம் மக்களின் சம்மதம் இல்லாமல் அல்லது அவர்கள் திருப்திப்படும் அதிகார அலகு வழங்கப்படாது சாத்திவப்படுமா? இணைந்த வடக்கு கிழக்கு என்றால்; அதில் முஸ்லீம் மக்களின் நிலையென்ன? முஸ்லீம் மக்களின் அதிகார அலகு தொடர்பாக***



**எங்களுக்குள்ள கவலை அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும். பின்னர் கருத்துக் கணிப்பிற்கு போக வேண்டும். எந்த வகையிலும் இனவாத சக்திகளுக்கு இடமளிக்காதிருந்தால்தான் கருத்துக் கணிப்பில் வெல்ல முடியும்.**



**தமிழ்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?**

**மாவை:** வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக எல்லா முஸ்லிம் கட்சிகளும் எதிர்த்திருக்கிறார்கள் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்குள்ளும் போட்டா போட்டிகள் இருந்து அவர்களது அரசியலுக்கும் ஏற்ப கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

சந்திரிகா பண்டாரநாயக்கா முன்வைத்த அரசியல் தீர்வில் வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பான ஒரு பகுதி பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது. அஷ்ரப்பின் இணக்கமும் அதற்கு கிடைத்தது. இதுபற்றிய சர்ச்சைகள் சில இப்பொழுது கிளப்பப்பட்டு முள்ளன.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பிலும், இணைப்பை நடைமுறைப் படுத்தியதில்தான் தவறு என்று கூறினார்களே தவிர இணைக்கக்கூடாதென்று கூறவில்லை. மகிந்த ராஜபக்ச காலத்தில் நடத்தப்பட்ட பேச்சில் மாற்று திட்டம் பற்றி பேச்சு நடத்தினோம். மகிந்தவின் காலத்தில் இந்த விவகாரத்தை முன்னகர்த்த முடியவில்லை.

இப்போது எங்களிடமிருக்கின்ற பிரேரணைகளும் எதிர்பார்ப்புக்களும் வடக்கு கிழக்கை இணைக்க வேண்டும். முஸ்லீம் கட்சிகளுடனும் இது பற்றி பேசி வருகிறோம். முஸ்லீம் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, பொருத்தமான அதிகார அலகொன்று உருவாகும். ஏற்கனவே சந்திரிகா பண்டாரநாயக்காவால் முன்வைக்கப்பட்ட சமஷ்டித் தன்மை வாய்ந்த ஒற்றையாட்சியை ஒழித்து பிராந்தியங்களின் ஒன்றியம் அரசியல் தீர்விலே குறிப்பிட்டவாறு அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கிய முஸ்லிம் அலகை உருவாக்குவது போன்றவற்றையெல்லாம் ஆராய்கிறோம்.

**தீபம்: எழுக தமிழ் பேரணி தொடர்பில் தென்னிலங்கையில் வெளியிடப்படும் எதிர்வினைகளை கூட்டமைப்பின் அங்கத் துவக் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சி எவ்வாறு பார்க்கின்றது?**

**மாவை:** எழுக தமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து விட்டோம் சர்வதேசத்தில் நம்பிக்கை இழந்து விட்டோம் என்ற கருத்தை வெளியிட மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாதென்பதற்காகதான் நாங்கள் அதில் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் ஜெயசேகரம் வீட்டில் பேரவையின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபோது தெளிவாக பலவற்றை சொல்லியிருக்கின்றோம். இன்னும் இரண்டு மாதங்கள் பொறுத்தால் இந்த அரசியலமைப்பு எவ்வாறு அமையப் போகின்றதென்ற முடிவிற்கு நாங்கள் வரலாம். அப்பொழுது உங்களுடன் நாங்கள் கலந்து பேசுவோம். ஒத்துப் போகவில்லை என்றால் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்து பேசலாம் என்றும் கூறியிருந்தோம். அதனை அவர்களும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

புத்தர்சிலை வைப்பது தொடக்கம் அரசாங்கத்தின் பல நடவடிக்கைகளில் அவர்களின் நிலைப்பாட்டுடன் நாம் வேறுபடவில்லை. இந்த விடயங்களை எதிர்க் கட்சித் தலைவர் ஊடாக பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறோம். அது சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பொதுமக்கள் இந்த பிரச்சனைகளிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடினால் நாங்கள் எதிர்க்க மாட்டோம். அதனை நாங்கள் மதிக்கின்றோம் என்றும் குறிப்பிடுகின்றோம். மக்கள் பேரவையின் அந்தக் குழு அதனைச் செய்வது நல்லது. தாங்கள் அந்த பேரணியைச் செய்வதானது கூட்டமைப்பிற்கும்; பக்க பலமாக இருக்குமென்றும் கூறியிருக்கின்றார்கள்.

எங்களுக்குள்ள கவலை அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும். பின்னர் கருத்துக் கணிப்பிற்கு போக வேண்டும். எந்த வகையிலும் இனவாத சக்திகளுக்கு இடமளிக்காதிருந்தால்தான் கருத்துக் கணிப்பில் வெல்ல முடியும். இதனால்த்தான் நாம் பேரணியில் கலந்து கொள்ளவில்லை.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். எழுக தமிழ் சமயத்தில் எனக்குள்ளிருந்த ஆதங்கத்தை பலருடன் பேசியிருக்கிறேன். முக்கியமான மக்கள் பிரச்சனைகளை முன்வைத்து, எங்களுக்கும் உடன்பாடான விடயங்களை முன்வைத்து இப்படியொரு போராட்டத்தை நடத்துகிறார்கள், இதில் மக்கள் கலந்து கொள்ளாமல் விட்டால் இந்த விடயங்களை மக்கள் ஏற்கவில்லையென்ற தவறான அபிப்பிராயம் உருவாகி, பெரும் சறுக்கல் ஏற்பட்டுவிடுமென்ற பயமிருந்தது.

மக்களிற்காக நூற்றுக்கணக்கான போராட்டங்களில் ஈடுபட்டு, சிறையிருந்த நான் மக்கள் போராட்டங்களை எதிர்க்கவோ, குழப்பவோ மாட்டேன். அப்படி இப்பொழுது சிலர் குற்றம்சாட்டுவதை நினைக்கதான் கவலையாக உள்ளது.

**தீபம்: முதலமைச்சர் விக்கினேஸ்வரனை இனவாதியாகச் சித்தரித்து தென்னிலங்கையில் போராட்டங்கள் நடக்கிறதே?**

**மாவை:** அவ்வாறான போராட்டங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அவர் கூறிய கருத்துக்கள் இனவாதக் கருத்துக்கள் அல்ல. அதனை நடத்திய முறை அல்லது அந்தக் கூட்டத்தில் அரசியல் தலைவர்களும் கலந்து கொண்டதால்தான் அப்படியானதொரு நிலை வந்திருக்கின்றது. அவ்வாறானதொரு நிலை வந்திருந்தாலும் அவர்கள் எழுப்பிய விடயங்கள் பிழையான விடயங்கள் அல்ல.

---

## 'பேராசிரியர் ரங்கசாமி கார்த்திகேசு மறைந்தார்'



மலேசிய எழுத்தாளரும், மக்கள் தொடர்பாடல் துறைப் பேராசிரியருமான முனைவர் ரங்கசாமி கார்த்திகேசு அவர்கள் கடந்த 11ம் திகதி செவ்வயன்று காலமானார் என்ற துயரச் செய்தி வந்து சேர்ந்திருக்கிறது. மலேசிய விஞ்ஞான பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான அவர், வானொலி தொலைக்காட்சி என்பவற்றில் ஒலிபரப்பாளராக தம் இளவயதில் செயற்பட்டவரும், சிறுகதை,நாவல், இலக்கிய விமர்சனம், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு என்பவற்றில் ஆர்வத்துடன் இயங்கிவந்தவருமான ஒரு முக்கிய எழுத்தாளராவார். அவரது எழுத்துக்கள் பத்துக்கு மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன, சூழலியல் உள்ளிட்ட பல்துறை சார்ந்த பத்திகளையும் தொடர்ந்து எழுதி வந்த பேராசிரியர் சிலகாலம் புற்றுநோயினால் பீடிக்கப்படிருந்தார், மலேசியத்தமிழின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய அவர் நினைவுக்கு செலுத்தும் அஞ்சலியாக, சூழலியல் தொடர்பாக அவர் 2011 இல், இன்று முக்கிய பிரச்சினையாக உயர்மட்டங்களில் பேசப்படுகிற சூழல் வெப்பநிலை மாற்றம் தொடர்பாக எழுதிய பத்திகளிலிருந்து ஒன்றை தீபம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

# வெந்தணலில் வேகும் உலகு!



"விரைவாக உருகும் பனிக்கட்டி ஆறுகளும், பனிக்கட்டி பரப்புக்களும் கடல் மட்டத்துக்குக் கீழுள்ள நாடுகளை இப்போதே மருட்டுகின்றன. தீவு நாடான மால்டிவ்ஸ் போன்றவை கடுமையான அபாயத்தில் உள்ளன. பெரிய நகரங்களான ஷங்ஹாய், லேகோஸ் போன்றவையும் மூழ்கும் அபாயத்தில் உள்ளன" இயற்கைவளப் பாதுகாப்பு மன்றம், அமெரிக்கா.

உலகம் எப்படி அழியும்? படீரென வெடித்துச் சிதறி அழியுமா அல்லது கொஞ்சம் கொஞ்சமாக வாடி வதங்கி மடியுமா?

அறிவியலாளர்கள் கூட பதில் சொல்ல முடியாததாக இந்தக் கேள்வி இருந்தாலும் உலகம் அழிவது என்னவோ உண்மை என்பதை இப்போது பலரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அந்த அழிவும் மனிதர்களின் பேராசையினாலேயே நிகழும் என்பதும் அநேகமாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாக இருக்கிறது. உலகம் அழியும் என்று சொல்வது கூட ஒரு பொருத்தமில்லாத வாதம்தான். அழியப்போவது உலகமல்ல, மனித குலம் மட்டுமே! உல்குக்கு என்ன! அதன் மேல் ஆயிரம் அணுகுண்டுகள் விழுந்தாலும் அது அவற்றை ஏற்றுக் கொண்டு தன் மேற்பாகம் மட்டும் வெந்து தணிந்த பின் சில நூறு அல்லது சில ஆயிரம் வருடங்களுக்குப் பின் புல் பூண்டுகளை உயிர்ப்பித்துத் தான் தழைக்கும். மனிதன் என்றொரு பிராணி இனி பிறக்குமா என்பதுதான் நிச்சயமில்லை.

உலகத்தின் அழிவைக் குறிக்கும் மிக உறுதியான அடையாளங்களில் முக்கியமானது வடதுருவத்தில் பனிப்பாறைகள் உருக ஆரம்பித்திருப்பது. வட துருவத்தின் வெப்ப அளவின் உயர்வு உலகின் பிற பாகங்களின் வெப்ப அளவு உயர்வை விட இரண்டு மடங்காக இருக்கிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்த மாதிரியான வெப்பத்தைக் கண்டிராத பனிப்பாறைகள் விரைவாக உருகுகின்றன. ஆர்க்டிக் துருவத்தின் பனிப்பாறைகள் மெலிந்து விட்டன. உடைந்து மிதக்கின்றன. முன்பு கப்பல்களால் கடக்க முடியாத பனிக்கட்டிக் கடல்களில் கப்பல் வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உலகின் பொதுவான வெப்ப நிலையை சூரிய வெப்பத்துக்கு எதிராகத் தற்காக்கின்றன. அவை இல்லாவிட்டால் சூரிய வெப்பம் உலகெங்கணும் உயர்ந்து விடும். இதன் விளைவாக வடமண்டலம் முழுவதும் பயிர்கள் விளைச்சல் பாதிப்படையும். சூரிய வெப்பம் அதிகரித்தால் காற்றின் ஈரப்பசையும் குறையும். நிலம் வறட்சியடையும். இதனால் மனிதர்களின் தோலுக்கும் பாதிப்பு உண்டு.

கடல் நீர் வெப்பமடைந்தால் கடல் உயிரினங்கள் அழியும். மீன் வளம் வெகுவாகக் குறையும். மீன்களுக்கும் பிற கடல் வாழ் இனங்களுக்கும் ஆதார உணவான பிளாங்டன் என்னும் நுண்ணுயிர்கள் அழிந்தால் வேறு எந்த கடல் இனமும் வாழவோ தழைக்கவோ முடியாது.

உலகம் இந்த அளவு வெப்பமடைவது ஏன்? எல்லாம் மனிதர்களின் பேராசைதான் என்கிறது ஆய்வு. மனிதர்களின் தொழிலியல் உற்பத்திப் பெருக்கத்தினால், தொழிற்சாலைகள் வெளியிடும் கரியமில வாயுவும் மற்ற வாயுக்களும் வான்வெளியில் ஒரு குடை போல் கவிந்துள்ளன. மொத்தமாக இவற்றை க்ளொரோஃப்ளோரோ கார்பன் (chlorofluorocarbons (CFCs)) என்றே கூறுகிறோம்.இவை சூரிய வெப்பத்தை பூமியின் மேற்புறத்திலிருந்து வெளியேற முடியாமல் தடுத்து வைத்துள்ளன. மேலும் கரி, எரிவாயு, எண்ணெய் ஆகியவற்றை எரிப்பதன் மூலம் மனிதர்கள் இந்த வெப்பத்தை மேலும் அதிகப்படுத்தியுள்ளார்கள். காடுகளை அழிப்பதாலும் கரியமில வாயுவை உண்ணும் மரங்களை நாம் அழிக்கிறோம். எல்லாமாகக் கூடி நம்முடைய காற்று மண்டலத்தில் கரியமில வாயுவின் அளவு மிக அதிகமாகி விட்டது. இதுவே வெப்பம் அதிகரிக்கக் காரணம்.

முன்னாள் அமெரிக்கத் துணையதிபர் அல் கோர் வெப்ப மண்டலம் சூடாவது பற்றி அதிக அக்கறையுள்ளவர். இவர் இது பற்றி எழுதிய நூல் "விளிம்பில் உலகு" (Earth in the Balace). இந்த நூலை ஒட்டி பின்னர் அவர் தயாரித்த திரைப்படம் "ஒரு தொல்லைப்படுத்தும் உண்மை" (An Inconvenient Truth). அதாவது இந்த உண்மைகளை எதிர்கொள்வதை மனிதர்கள் ஒரு தொல்லையாக நினைக்கிறார்கள் என்பது அதன் பின் உள்ள பொருள்.

மாறிவரும் பருவநிலை பற்றிய அபாயத்தை மனிதர்கள் எதிர்கொள்ள மறுக்கிறார்கள் என்பதை உலகுக்கு உறைக்கும் வகையில் உணர்த்தியவர் அல் கோர். அந்த முயற்சிக்குப் பிறகுதான் உலகு விழித்துக்கொண்டது என்று சொல்லலாம். 1997இல் ஐக்கிய நாட்டு மன்றத்தின் முயற்சியில் ஜப்பானின் கியோட்டோவில் பூமி வெப்பத்தைத் தணிக்கும் நோக்கத்தில் பெரும் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

அதில் காணப்பட்ட ஒப்பந்தம்தான் "கியோட்டோ ஒப்பந்தம்".

37 உலக நாடுகள் தாங்கள் வெளியிடும் நச்சு வாயுக்களை (கரியமில வாயு, மிதேன், நைட்ரஸ் ஒக்ஸைட் போன்றவை) குறைக்க நடவடிக்கை எடுக்க ஒப்புக் கொண்டன. 1990இன் அளவிலிருந்து 5.2 விழுக்காட்டை குறைப்பதை அவை நோக்கமாகக் கொண்டன.

இந்த வாயுக்களை உற்பத்தி செய்யும் நாடுகள் பட்டியலில் சீனா முதல் இடத்திலும் அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் உள்ளன. சீனா நடவடிக்கைகள் எடுக்க ஒப்புக் கொண்டது. அமெரிக்கா கொள்கையளவில் ஆதரித்தாலும் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.


பொதுவாக இந்த விஷயத்தில் உலகத்தின் அலட்சியம் பற்றி அல் கோர் தனது நூலில் ஓர் அருமையான உதாரணம் தந்திருக்கிறார். ஒரு தவளையைத் தூக்கிக் கொதிக்கும் நீரில் போட்டால் அது துடிதுடித்துத் தாவி வெளியே குதித்து ஓடிவிடும். ஆனால் அதே தவளையை சாதாரண நீரில் போட்டு மெதுவாகச் சூடுபடுத்திக் கொதிக்க வைத்தால் அது தோல் மரத்து, தான் வேகவைக்கப்படுவதை உணராமலே சாகும்.

அப்படித்தான் உலகம் இருக்கிறது, வெந்தணலில் தான் வெந்துகொண்டிருப்பதை அறியாமல்...!

# ஹக்கீமை குறிவைக்கிறதா கிழக்கு தலைமைத்துவ வாதம்?

துறையூர்
ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்

தேர்தல் காலங்கள் வந்துவிட்டால் தங்களது ஊரிலிருந்தே அரசியல் பிரதிநிதித்துவம் வர வேண்டுமென்ற கோரிக்கை முஸ்லீம்கள் மத்தியிலிருந்து கிளம்புவது அண்மைய வழக்கமாகிவிட்டது. இதன் விளைவு எதிர்மறையானது. சிறிய கிராமங்களில் உள்ள சிறந்த தலைவர்கள் பிரதிநிதித்துவம் பெறுவது முடியாததாகி விடும். சிறந்த தலைவர்கள் உருவாகாமல் பிரதேச மக்கள் தொகையினால் மக்கள் பிரதிநிதிகள் உருவாக்கப்படுவதே அரசியல்



அஷ்ரப் மரணித்த சந்தர்ப்பத்தில் கிழக்கு தலைமைத்துவ கோசம் முகாவின் தலைமைத் துவத்தை கைப்பற்றும் நோக்கில் கிளறப்பட்ட தால் அது மக்களிடையே அவ்வளவு தூரம் எடுபடவில்லை. தற்போது கிழக்கு தலைமைத்துவ கோசம் கிழக்கு மக்களிடையே வலுவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக் கோசத்தை முன் வைப்பவர்கள் பலரும் பல்வேறான காரணங்களை முன் வைக்கின் றனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களின் தேவைகளை கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவரால்தான் அறிந்துகொள்ள முடியும் என்பது சிலரது வாதம். சிறந்த தலைமைத் துவப் பண்பு கொண்டவர் ஒரு சமூகத்தின் அனைத்து தேவைகளையும் நன்கு அறிந்தவ ராக இருப்பார். இலங்கை என்பது மிகச் சிறிய நாடாகும். இதில் பத்து சதவீதமாக உள்ள முஸ்லிம் மக்களின் தேவைகளை அறிந்து


என்ற வாதத்திற்கு சில புவியியல் சார் நியாயங்களிருக்கலாம். இலங்கையில் கிழக்கு மாகாணமே முஸ்லிம்கள் செறிந்து வாழும் மாகாணமாகும். இந்த மக்கள் பேரின மக்களுடன் இணக்கரீதியாகசெல்லவேண்டும் என்ற அவசியம் கிடையாது. கிழக்கிற்கு வெளியே வாழ்பவர்களில் அதிகமானவர்கள் பேரின மக்களுடன் ஒத்திசைந்து சென்றால் தான் பிரச்சினைகள் இன்றி இருக்க முடியும். அளுத்கமை பற்றி எரிகிறதென கிழக்கு முஸ்லிம்கள் தங்களது எதிர்ப்புக் களை வெளிக்காட்டும் வண்ணம் ஆர்ப்பாட் டங்களையும், கடை அடைப்புக்களையும் செய்திருந்தனர்.

அச் சந்தர்ப்பத்தில் கிழக்கிற்கு வெளியில் இருந்த அதிகமான கடைகள் பேரின வாதிகளின் பார்வைக்குள் தங்களை அகப் படாது பாதுகாத்துக்கொள்ள திறந்திருந்தனர். அளுத்கமைக்கு அண்மையில் இருந்த பல

மக்களின் எதிர்ப்பை சந்தித்தால் தனது அரசியல் தளம் சரிக்கப்பட்டு விடும் என்ற அச்சம் தான் இது போன்ற விடயங்களில் ஹக்கீமின் மௌனத்திற்கான காரணமாக இருக்கலாம்.

கண்டி மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதம் இருந்தால்தான் கண்டியில் பிரதான கட்சிகளில் ஹக்கீமுக்கு ஆசனம் வழங்கப்படும்.தேர்தல் நெருங்கும் காலப் பகுதியில் மலர்ச் செண்டுகளுடன் சென்று அவர்களை சந்திப்பதை அவதானிக்கலாம். கண்டி மாவட்டத்தை,கண்டி முஸ்லிம்களின் வாக்குகளை கவர பேரினக் கட்சிகளுக்கு அமைச்சர் ஹக்கீம் அவசியமில்லை என்ற நிலைமையே தற்போதுள்ளது. ஒரு கட்சியின் தலைவர் தனது பாராளுமன்ற ஆசனத்திற்கு இன்னுமொரு கட்சியில் தங்கிருத்தல் ஒரு போதும் ஏற்கத்தகுந்ததல்ல.

அதற்காக கண்டியில் இருந்து இலங்கை



ஜனநாய வீழ்ச்சியின் காரணங்களில் மிக முக்கியமானது. இப்படி உருவாக்கப்படும் தலைவர்கள் தம்மை தேர்வு செய்த பிரதேசம், அரசியல் சூழலை இலக்காக வைத்துதான் அரசியல் செய்வார்.

இதன் காரணமாக சிறிய ஊர்களில் வாழும் மக்கள் மிகக் கடுமையான புறக்கணிப் புக்களை சந்திக்க நேரிடும். அண்மை யில் பாலமுனையில் முஸ்லீம் காங்கிரஸிற்கெதிராக மக்கள் எதிர்ப்புக்களை வெளிக் காட்டியமையின் பின்னால் பிரதேசவாத புறக்கணிப்பு இருந்தமை நினைவூட்டத்தக்கது.

முகாவின் ஸ்தாபக தலைவர் அஷ்ரப் மரணித்த நாள் தொடக்கம் இன்று வரை இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமை கிழக்கு மாகாணத்தை சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கோசம் கிழக்கு மாகாண மக்களிடையே நிலவி வருகிறது.

கொள்ளும் ஒரு அரசியல் தலைவனை உருவாக்குவதொன்றும் பெரிய விடயமல்ல. கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் சிறந்த அரசியல் பிரதிநிதிகளை உருவாக்கும்போது அப் பிரதிநிதிகள் கிழக்கு மாகாணத்தின் தேவைகளை தங்களது தலைமையிடம் எடுத்து ரைத்து நிறைவேற்றிக்கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்திற்கு வெளியே மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் வசிக்கின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்றில் ஒரு பங்கினருக்குள் சிறந்த தலைமைத்துவம் கொண்ட ஒருவரை பெறுவதற்கான நிகழ்த கவை விட கிழக்கிற்கு வெளியே மூன்றில் இரண்டு பங்கினர் வசிப்பதால் அவர்களுக் குள்ளிருந்து சிறந்த தலைமைத்துவமிக்க ஒருவரை பெற்றுக்கொள்வதற்கான நிகழ்தகவு அதிகமாகும்.

கிழக்கிற்கு தலைமைத்துவம் வேண்டும்

ஊர்களில் கூட இந்த நிலையை அவதானிக்க முடிந்தது. அவர்கள் தங்களது கடைகளை திறந்தமையை பிழை எனக் கூற முடியாது. அதுதான் அவர்கள் வசிக்கும் இடத்திற்கான பொருத்தமான போக்கு.

அரசியலமைப்பு மாற்றத்திற்கான முயற்சிகள் இடம்பெறும் இந்த சமயத்தில் மு.காவினால் அஷ்ரப் காலத்திலிருந்து வலியுறுத்தப்படும் கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கை பற்றி அமைச்சர் ஹக்கீம் வாய் திறக்க முடியாத நிலையிலேயே இன்று உள்ளார். இது பற்றி இத்தனை நாளும் மு.காவின் செயலாளர் ஹசனலியே மு.கா சார்பாக கதைப்பார். இப்போது அவரையும் மூக்குடைத்து மூலையில் உட்கார வைத்துவிட்டார்கள். கரையோர மாவட்டம் பற்றி ஹக்கீம் கதைக்கும் போது பேரினவாத எதிர்ப்பை சம்பாதிக்க நேரிடும். பேரின

முஸ்லிம்களை தலைமை தாங்கக்கூடிய ஒருவர் வரக்கூடாது என்பதல்ல. கண்டியில் இலட்சக்கணக்கான முஸ்லிம் வாக்குகள் உள்ளன. ஹக்கீம் கண்டி மக்களை கவர்ந்தி ருந்தால் இன்று யாரும் அவரை புறக்கணித்து கதைக்க முடியாது. கண்டி மாவட்டத்தில் இவரோடு சேர்ந்து போட்டியிட்ட சக ஐ.தே.க வேட்பாளர் ஹலீம் இவரை விட பத்தாயிரம் வாக்குகள் அதிகம் பெற்றிருந்தமை ஹலீமின் வாக்குகளில் (ஐ.தே.க வாக்குகளில்) ஹக்கீம் அரசியல் முகவரி பெற்றுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது. இதன் மூலம் ஹக்கீம் கண்டி முஸ்லிம்களின் வாக்குகளைக் கவர ஐ.தே.கவிற்கு தேவையில்லை என்ற விடயமும் புலனாகிறது.

பேரினக் கட்சிகளின் கொள்கையில் முரண்பட்டு ஒரு கட்சி எதிர்த்து போராட வேண்டுமாகவிருந்தால் குறித்த கட்சியின்

தலைமைத்துவமுள்ள பிரேதேசத்தில் அக் கட்சியின் தலைவர் தனித்து கேட்கும் நிலை இருக்க வேண்டும். ஹக்கீமால் கண்டியில் தனித்து தேர்தல் கேட்டு வெற்றிபெற முடியாது. இதனால் பேரினக் கட்சிகளின் கொள்கையில் முரண்பட்டாலும் தனது தேர்தல் வெற்றியை கருத்திற் கொண்டு அமைதியாகவே இருக்க வேண்டும். இதுதான் இன்று ஹக்கீம் தலைமையிலான மு.காவின் நிலையாகும். ஹக்கீம் தேர்தல் வருவதற்கு முன் எக் கட்சியுடன் இருந்தாலும் தேர்தல் வந்துவிட்டால் ஐ.தே.கவுடன் தேனிலவு கொண்டாடச் செல்லுவதே இதுவரை காலமும் நடந்தேறி வருகிறது. இதற்கு ஹக்கீமின் அரசியல் வாழ்வு ஐ.தே.கவில் தங்கி இருப்பது பிரதான காரணமாகும்.

இலங்கை முஸ்லிம்களை அரசியல்ரீதியாக தலைமை தாங்கும் ஒருவர், தான் வசிக்கும் இடத்தில் தனித்து வெற்றிபெறக் கூடிய சாதகமான நிலை இருக்க வேண்டும் என்பதை மேலுள்ளவைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். கிழக்கிற்கு வெளியிலும் இச் சாதகமான புவியியல் போக்குடைய இடங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஒரு பக்கம் சாய்ந்தால் அம் மாவட்டத்தை வெற்றிகொள்ள முடியும். முஸ்லிம்கள் தனித்து வெற்றிகொள்ள சாத்தியமான ஒரே ஒரு மாவட்டம் அம்பாறையாகும்.இம் மாவட்டத்தை ஒரு கட்சி வெற்றி கொள்ள வேண்டுமாக இருந்தால் அதற்கு முஸ்லிம்களின் ஆதாவு தேவை. ஒரு கட்சி ஒரு மாவட்டத்தை வெற்றிகொள்வது சாதாரண விடயமுமல்ல.இதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் இலங்கை முஸ்லிம்களை தலைமை தாங்கும் ஒருவர் வந்தால் அக் கட்சி மிகப் பலமிக்கதாக மாறும்.

பேரினக் கட்சிகள் அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம் கட்சிகளின் வாக்குகளில் நனைந்து கொண்டு வெற்றி கொள்ள, கிழக்கு மாகாண சபையை கைப்பற்ற, அங்குள்ள முஸ்லிம் கட்சிகளுக்கு சில விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இவ்வாறான விட்டுக்கொடுப்புக்களில் ஒன்றாகத் தான் ஹக்கீமிற்கு கண்டியில் வழங்கப்படும் ஆசனத்தையும் பார்க்கலாம். எனினும்,இந்த நிலை றிஷாத்திற்கில்லை. வன்னி மாவட்டம் சிறு பான்மையினரை பெரும்பான்மையாக கொண்டதொரு மாவட்டம். தமிழ் மக்கள் ஒரு போதும் பேரினக்கட்சிகளை ஆதரிக்கப்போவதில்லை.

இம் மாவட்டத்தில் த.தே.கூ பலமிக்கதாக திகழ்வதால் பேரினக் கட்சிகளிற்கு முஸ்லிம் மக்கள் வாக்குகள் தேவை. இன்று வன்னியில் மு.கா தனது வாக்கு வங்கியை வெட்டுப்புள்ளியைக் கூட நெருங்க முடியாதளவு இழந்து

**முஸ்லிம் அரசியலின் அடித்தளம் கிழக்கில் உள்ளது. உணர்ச்சியுடன் கூடிய கிழக்கு தலைமைத்துவ எண்ணம் அங்கு எழுப்பப்படுவது இலகு. கரையோர மாவட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளில் ஹக்கீமின் மௌனம், கிழக்கு தலைமைத்துவ கோசத்தை வலுப்பெறவே செய்யும்.**

விட்டது.இதன் காரணமாக பேரினக் கட்சிகளுக்கு வன்னியில் றிஷாத் தேவை என்ற நிலை உள்ளது. பாராளுமன்ற தேர்தலில் வன்னியில் சு.க ஒரு ஆசனத்தை பெற்றிருந்தாலும் அதில் போட்டியிட்டவர்கள் மிகக் குறைவானளவு விருப்பு வாக்குகளையே பெற்றுள்ளனர். மஸ்தான் பெற்றது 7298 வாக்குகள். இதுதான் றிஷாத் ஹக்கீமிலிருந்து வேறுபடும் இடம்.

கிழக்கிற்குவெளியில்வாழும்முஸ்லிம்களில் அதிகமானவர்கள் பேரின கட்சிகளுடன் ஒத்திசைந்து செல்லும் பண்பைக் கொண்டவர்கள். கிழக்கிற்கு வெளியில் வாழ்பவர்களில் ஐந்து சதவீதத்திற்கும் குறைவானோரே மு.காவை ஆதரிக்கின்றனர்.கடந்தமுறை மு.கா தனது தேசியப் பட்டியலில் ஒன்றை களுத்துறைக்கு வழங்கியிருந்தது. இந்த இடத்தில் பணியிரண்டாயிரம் வாக்காளர்கள் இருந்தும் கடந்த தேர்தலில் மு.காவிற்கு கிடைத்தது வெறும் நானூறு அளவிலானவையே.


ஆரம்பத்தில் பெரு விருட்சமாக இருந்த மு.கா, இன்று மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டத்திற்குள் சுருங்கி விட்டது. மு.கா பல இடங்களில் பிடியை நழுவவிட்டுக் கொண்டிருக்கும்போது பேரினக்கட்சிகளுக்கு வாக்களித்து பழக்கப்பட்டவர்கள் இந்த கட்சியை ஆதரிப்பார்களா?

முஸ்லிம் அரசியலின் அடித்தளம் கிழக்கில் உள்ளது. உணர்ச்சியுடன் கூடிய கிழக்கு தலைமைத்துவ எண்ணம் அங்கு எழுப்பப்படுவது இலகு. கரையோர மாவட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளில் ஹக்கீமின் மௌனம், கிழக்கு தலைமைத்துவ கோசத்தை வலுப்பெறவே செய்யும். ஹக்கீம் கிழக்கை சேராதவர் என்பதால் மௌனமாக இருக்கிறார் என்ற கருத்தும் பரப்பப்பட தொடங்கியுள்ளது. அமைச்சர் றிஷாத்தின் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களது பதவிகளில் மிக முக்கியமான மூன்று பதவிகள் அம்பாறை மாவட்டத்திற்கே வழங்கப்பட்டுள்ளன. ஹக்கீம் இவ்வாறு கிழக்கு மாகாணத்தவர்களுக்கு ஒருபோதும் முன்னுரிமை வழங்குவதில்லை என்ற அபிப்பிராயமும் அண்மையில் வலுப்பெறத் தொடங்கியுள்ளது.

மு.கா கடந்த பாராளுமன்ற தேர்தலில் கிழக்கிற்கு வெளியே ஒரு ஆசனத்தையே பெற்றுள்ளது. பல தசாப்தங்களாக மு.கா தக்க வைத்து வந்த திருகோணமலை மாவட்ட ஆசனம் இம்முறை இழக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் ந.தே.மு உடன் கூட்டிணைந்து ஆசனத்தை தக்க வைக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. அம்பாறையில் தயா கமகே முஸ்லிம் வாக்குகளையும் தன் பக்கம் ஈர்த்து முதல் இடத்தைப் பிடித்துள்ளார். இவை மு.காவின் முன்னாலுள்ள வெளிப்படையான சவால்கள். முஸ்லிம் காங்கிரசுடன் முட்டி மோதும் அ.இ.ம.கா திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தனது ஆசனத்தை பெற்றுள்ளதோடு அம்பாறையிலும் நுழைந்துவிட்டது.மு.காவை உடைத்துக்கொண்டு அ.இ.ம.காவினால் முன்னேற முடிவது எதனால்? மு.காவின் சாணக்கிய சறுக்கலா?

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவரே கிழக்கு மாகாணத்தை ஆழ வேண்டும் என்ற கோசத்தை கிழக்கின் எழுச்சி அமைப்பு இப்பொழுது தூக்கிப் பிடித்துள்ளது. இந்த அமைப்பின் பிரதான கோரிக்கை கிழக்கிற்கு தலைமைத்துவம் வேண்டும் என்பதை விட ஹக்கீமை மு.கவை விட்டும் துரத்துவதே எனக் கூறலாம். இதன் பின்னணியில் செயற்படுபவர்கள் யார் என்றால் அவர்கள் கூட ஹக்கீமின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள்தான்.இன்று மு.காவின் தலைவரை மு.காவின் யாப்பின் அடிப்படையில் அவ்வளவு இலகுவில் மு.காவை விட்டும் துரத்திட முடியாது.


கிழக்கு மாகாண தலைமைத்துவம் போன்ற உணர்ச்சியூட்டும் சிந்தனைகளை மக்களின் உள்ளங்களில் விதைத்தால் மக்கள் இலகுவாக ஹக்கீமை விட்டும் பிரித்தெடுக்கலாம். ஹக்கீம் மு.காவை விட்டு வெளியேற வேண்டியிருக்கலாம் என அவர்கள் கணக்கிட்டிருக்கலாம். கிழக்குத்தலைமைத்துவ கோசம் ஹக்கீமிற்கு வந்த சோதனை போலத்தான் இருக்கிறது. ●







மட்டக்களப்பு மாவட்டத்தின் வேலையில்லா பட்டதாரிகள் கடந்தவாரம் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தியுள்ளனர். காந்தி பூங்காநிலையத்தில் காலையில் ஒன்று கூடிய பட்டதாரிகள் மாவட்ட செயலகம் வரை சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜரை அரச அதிபர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸிடம் ஒப்படைத்தார்கள்.





மலையகத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள உயர்வு கோரிக்கையை நிறைவேற்றக் கோரியும் அவர்களது தொடர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் வவுனியாவில் பொது அமைப்புகளினால் கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.







# திரும்பிப்பார்க்கப்படாத சின்னத்தட்டுமுனை

குகதர்சன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசம் யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. உயிர் இழப்புக்கள், காணாமல் போனமை, உடமை இழப்புக்கள் என ஒவ்வொரு குடும்பமும் கொடுத்தவிலைகள் ஏராளம். இந்தப்பகுதியிலுள்ள

ஊரியன்கட்டு கிராமசேவகர் பிரிவிற்குட்ட சின்னத்தட்டுமுனை கிராமமம் அடிப்படைவசதிகளே பூர்த்திசெய்யப்படாமல் உள்ளது.

இக்கிராமத்தில் சுமார் 395 குடும்பங்களை சேர்ந்த 1620 பேர் வாழ்ந்து வருகின்றனர். 2006ம் ஆண்டு யுத்தத்தால் இடம்யெர்ந்து வாழைச்சேனை முதல் மட்டக்களப்பு வரை இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம் மற்றும் உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து பின்னர் 2007ம் ஆண்டு மீண்டும் குடியேறினர். ஆனால் இவர்களுக்கு இதுவரை எந்தவித உதவிகளும் முற்றுமுழுதாக வழங்கப்படவில்லை.

இங்கு யுத்த வேளையில் கிட்டத்தட்ட 17 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், ஒன்பது பேர் காணாமல் போயுள்ளனர். 42 கணவனை இழந்தவர்களும், 12 மாற்றுத்திறனாளிகளும் உள்ளனர். அதில் ஐந்து பேர் யுத்தத்தால் அங்கங்களை இழந்தவர்களாக காணப்படுகின்றனர்.

குடிநீர் பிரச்சனை, போக்குவரத்துப் பிரச்சனை், வீதிப் பிரச்சனை, தொழில் பிரச்சனை என பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு சளைக்காமல் வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு வாழ்பவர்கள் பிரதான தொழிலாக மீன்பிடித் தொழில் மற்றும் விவசாயம் என்பவற்றை நம்பியே தங்களுடைய வாழ்க்கையை நடாத்தி வருகின்றார்கள்.

## குடிநீர் பிரச்சனை

கிராமத்தில் 64 கிணறுகள் மாத்திரமே உள்ளன. அதிலும் சில கிணற்று நீர் உவர் தன்மையாகவும், சில கிணற்று நீர் காவி நிறமாகவும் காணப்படுகின்றன.

இந்த நீரையை மக்கள் தினமும் வடி கட்டி அருந்தி வருகின்றனர். குறுகிய கிணறுகள் இப்பிரதேசத்தில் காணப்படுவதால் ஏனையவர்கள் இந்த கிணற்று நீரையே பாவிக்கின்றனர். கோடை காலத்தில் கிணறுகள் வற்றும் நிலைமை காணப்படுகின்றது.

அருகில் ஆறு இருப்பதால் கிராமத்தின் ஒரு பகுதி நீர் உவர் தன்மையை கொண்டுள்ளது. உவர், காவி நீரை அருந்துவது மக்களை நோயாளியாக்கியுள்ளது.

'பாடசாலை பிள்ளைகளின் சீருடையை காவி நீரில் கழுவி காய வைத்தால் காவி சட்டைதான் வருகிறது. காவிச்சட்டையுடன் வெளிப்பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் கேலி செய்யப்படுகிறார்கள். பிள்ளைகள் எங்களுடன்தான் கோபப்படுகிறார்கள்' என வேதனையாக பேசினார் ஒரு தாயார். நீர் பிரச்சனை தொடர்பாக வாகரை பிரதேசசபை, மாகாண விவசாய, மீன்பிடி, நீர்பாசன அமைச்சர் துரைராஜசிங்கத்துக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித பதிலோ அல்லது நடவடிக்கையோ எடுக்கவில்லையென்பது மக்களின் குற்றச்சாட்டு.

## வீட்டு வசதி

கிராமத்தில் 97 குடும்பங்கள் ஓலை, தகரத்தால் ஆன குடிசை வீடுகளில் வாழ்கின்றனர். வெப்ப காலங்களில் குடிசைக்குள் இருக்க முடியாததால் ' பகல்பொழுதில் மரத்தடியில் இருந்து சமைத்து, சாப்பிட்டு பொழுதை கழித்துவிட்டு, இரவு நேரங்களில் மாத்திரம் வீட்டுக்கு செல்கின்றனர்.

தற்போது அரசாங்கத்தால் சிலருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வீடுகள் ஒரு குடும்பம் வாழ்வதற்கு போதுமானதாக இல்லை. மழை காலங்களில் குடிசைகளிற்குள் நீர் புகுந்தும்விடும்.

## கல்வி வசதி

தட்டுமுனை மாணிக்க விநாயகர் வித்தியாலயம் கிராமத்திலுள்ள பாடசாலை. ஒரு நிரந்தர கட்டடத்தையும், தகரத்தால் கூரை பொறுத்தப்பட்ட இன்னொரு கட்டடத்தையும் கொண்ட பாடசாலை இது. தரம் 0105 வரை வகுப்புக்கள் உள்ளன. தரம் 06க்கு மேல் செல்வதாயில் வாகரை மகா வித்தியாலயத்திற்கு செல்ல வேண்டும்.

வெயில் காலத்தில் மாணவர்கள் தகரக்கூரையின் கீழ் கல்வி கற்பதில் பெரும் சிரமப்படுகிறார்கள். பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட மைதானமும் புனரமைக்காமல் பற்றைக்காடாக காட்சியளிக்கின்றது.

'புனரமைப்புக்கான நிதியை கிழக்கு மாகாணசபை உறுப்பினர் நாதிரவியம் வழங்கிவிட்டு பின்னர் அதனை வேறு திட்டத்திற்கு மாற்றியதால் எங்களுக்கு கிடைக்கவில்லை. இதற்கு பல அரசியல்வாதிகளிடம் உதவிகள் கேட்டும் இதுவரை எங்களுக்கு வழங்கவில்லை'யென மக்கள் கூறுகின்றனர்.


'எங்களது பிள்ளைகளை தரம் 06க்கு மேல் கல்வி கற்பதானால் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வாகரை மகா வித்தியாலயத்திற்கு நடையாகவும், முச்சக்கர வண்டி மூலமும் செல்ல வேண்டும். முச்சக்கர வண்டியில் செல்வதானால் ஒரு பிள்ளைக்கு எண்ணூறு ரூபாய் தேவை. நடந்து சென்றால் அங்கு பிள்ளைகள் செல்லும் போது பாடசாலை கதவு மூடப்படுகின்றது' என்பது பெற்றோரின் பிரதான கவலைகளில் ஒன்று.


'இங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் நாங்களே சம்பளம் வழங்க வேண்டும். பிள்ளைகளுக்கு தினமும் சத்துள்ள உணவு கொடுத்து அனுப்பி வைக்க வேண்டுமென்கிறார்கள். ஆனால் எமது பொருளாதாரத்தில் அது முடியாது. அதனால் முன்பள்ளிக்கு அனுப்பாமல் மறித்து விடுகிறோம்' என்கிறார்கள் சில பெற்றோர்கள்.


## வீதிகள்

கிராமத்தின் வீதிகள் பல மணல் வீதிகளே. சில வீதிகளில் வாகனங்களே செல்ல முடியாது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...









குப்பிளான் ஐ.சண்முகன்




# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 6

நண்பர் பேராசிரியர் யோகராசாவின் மணிவிழா நடந்து முடிந்திருக்கிறது. மட்டக்களப்பில் நடந்த நிகழ்வில் என்னையும் பேச அழைத்திருந் தார்கள். அந்த சமயத்தில் உடல்நலம் குன்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததால், அதில் கலந்து கொள்ள முடியவில்லை.

1970 களின் தொடக்கத்தில் "சமூகதீபம்" சஞ்சிகையில் வந்த அவரது ஒரு கவிதையில் ஈடுபாடு கொண்டு நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். அப்போது எனக்கு அவருடன் நேரடியான பழக்கம் கிடையாது. நான் கொழும்பில் வேலை செய்த காலத்தில் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவராக இருந்தார். அப்போதுதான் நேரடியான பழக்கம் ஏற் பட்டது. அவ்வப்போது சந்தித்து ஈடுபாடுள்ள விடயங்களைப் பற்றி உரையாடுவோம்.

நான் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம், கல்முனை, என ஊடாடி மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு ஆசிரிய நியமனம் பெற்று வந்தேன். அப்போது மலைநாட்டில் ஆசிரியராக கடமை புரிந்த நண்பர் யோகராசாவும், இடமாற்றம் பெற்று ஊருக்கு வந்தார். அவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், நான் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், ஆசிரியராகக் கடமை புரிந்தோம். இக்காலத்தைப் பொற்காலம் என்றே சொல்வேன்.

தனது கற்பித்தற் செயற்பாடுகள் முடிய அனேகமாக ஒவ்வொரு முன்னிரவுப் பொழுதுகளிலும் அவர் எனது வீட்டிற்கு வருவார். பல விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடுவோம். பரஸ்பரம் ஒருவருக் கொருவர் ஆலோசனை வழங்குவோம். சில விடயங்களில் இடித்துரைப்போம். ஆசிரியர் அனுபவங்களைப் பற்றி, கையாள வேண்டிய உத்திகளைப் பற்றி எல்லாம் எங்களுக்குள் பேசித் தீர்மானித்துக் கொள்வோம்.

இதற்கும் மேலாக கிடைக்கின்ற புத்தகங்களை எங்களுக்குள் பரிமாறி வாசிப்போம். இலக்கியம் மட்டுமல்லாது போராட்டங்கள், பெரியார்களின் வரலாறும், நாடுகளின் எழுச்சி, வீழ்ச்சிகள் என எங்கள் வாசிப்பும் பரந்திருக்கும். அவை பற்றி மேலும் மேலும் தேடிக்கொண்டே இருப்போம். உண்மையில் ஏறத்தாழ பத்து வருடங்கள் எங்கள் வாழ்வின் அற்புதமான காலங்களாகும்.

இந்தக் காலத்தில் வாசித்த ஒரு புத்தகத்தைப் பற்றி நான் குறிப்பிட வேண்டும். அதை எங்கிருந்தோ நண்பர் யோகராசா தான் கொண்டு வந்தார். அமெரிக்காவில் வாழ்ந்த சுதேசிகளைப் பற்றிய, அவர்களது பழக்கவழக்கங்கள் பற்றிய, அவர்களது நாகரீகம் பற்றிய "ஆர்க்கண்ட் யாத்திரை" என்ற அந்தப் புத்தகம் ஒரு அற்புதமான புத்தகமாகும். எவ்வாறு குடியேறிகள் அந்த சுதேச மக்களை அழித்தொழித்தார்கள் என்பதை விபரமாகக் கூறுகின்ற புத்தகம் அதுவாகும்.

1990 இன் தொடக்கத்தில் யோகராசா மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றுவிட்டார். அங்கிருந்தும் பரஸ்பரம் கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளுவோம். அக்காலங்களில் இணையம், செல்போன் ஒன்றும் நடைமுறைக்கு வரவில்லை. கடிதங்களே உயிர்ப்புள்ள தொடர்பாடல் ஊடகங்களாக இருந்தன. அப்போதும் ஒரு கடிதத்தில் ஒரு புத்தகத்தைப் பற்றி நண்பர் எழுதிய வாக்கியம் எனக்கு இப்போதும் நினைவில் இருக்கின்றது. "ஏழு தலைமுறைகள்" என்ற புத்தகத்தைப் பற்றி, "இந்த புத்தகத்தை வாசிக்காதவன் மனிதன் என்று சொல்லத் தகுதியற்றவன்" என்று எழுதியிருந்தார். ஏழு தலைமுறையினர் என்ற நூல் எப்படி அமெரிக்கக் குடியேறிகள் ஆபிரிக்கக் கறுப்பின மக்களை ஆடுமாடுகளைப் போல அடிமைப்படுத்தி அமெரிக்காவிற்குக் கொண்டு வந்து குடியேற்றிய கதையைக் கூறும் நூலாகும்.

இதனைப் போலவே அழகிய பெரிய நாயகி அம்மா எழுதிய "கவலை" என்ற நூலைப்பற்றியும், கடிதத்தில் எழுதியிருந்தார். அந்த நூல் அக்காலப் பெண்களின் அடிமைத் தனத்தைப் பற்றிப் பேசுகின்ற நூலாகும்.

யோகராசாவும் நானும் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தோம். அவர் மறைந்த போது நேரடியாகச் சென்று அவருக்கு அஞ்சலி செய்ய முயன்றோம். ஆனால் குறிப்பிட்ட தினத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு அசம்பாவிதத்தால் எங்களால் அவ்வாறு செய்ய முடியாது போய்விட்டது. பண்டிதமணியின் மறைவிற்குப் பிறகு தனது முதுமாணிப்பட்ட ஆய்வுக்காக பண்டிதமணியின் வாழ்வையே தேர்ந்தெடுத்து முதுமாணிப்பட்டம் பெற்றார்.

இந்த முதுமாணிப்பட்டமே அவருக்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் நியமனத்தைப் பெற்றுக் கொடுத்தது. மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பக்காலங்களில் யோகராசா என்றால் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்றும், மட்டக்களப்பு பல்கலைக்கழகம் என்றால் யோகராசா . என்றும் பலரும் கூறும் விதத்தில் அவரது செயற்பாடுகள் அமைந் திருந்தன.

அத்தகைய சிறப்புக்கள் பொருந்திய யோகராசா ஒரு சமூக சீர்திருத்தவாதியு மாவார். தனது வாழ்க்கைத்துணையை மலைநாட்டிலேயே தேர்வு செய்திருந்தார். எடுத்த பணியை நிறைவு செய்வதில் அலுப்புசலிப்பில்லாதவர். ஒரு வகையில் அவரை உறங்காவிரதம் பூண்டவர் என நான் சொல்லுவதுண்டு. எத்தகைய பாரதூரமான விடயங்களையும் தனது நகைச்சுவை பாணியில் மேவிச் சொல்வார்.

அவர் தனது பணியில் இருந்து உத்தியோகரீதியாக ஓய்வு பெற்றிருந்தாலும் இயங்கிக் கொண்டே இருப்பார். மேலும் ஆய்வுகள் செய்து தன்னையும் தன் சார்ந்த சமூகத்தையும் மேன்மைப்படுத்துவார். அவர் தனது மனைவியுடனும், மகளுடனும் நிறைவான வாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

---

வாகனத்தை வேறு இடங்களில் நடந்து செல்பவர்களும் உள்ளனர். கிராமத்தில் சுமார் 25 கிலோமீற்றர் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. வீதி சீரின்மையால் கிராமத்தில் பொதுபோக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை.தற்போது கிழக்கு மாகாணசபையினால் வீதிகள் புனரமைக்கப் படுகிறது. அதிகாரிகள் கண்களில் இந்த கிராமத்தின் வீதிகளும் தென்பட வேண்டு மென்பதே கிராமமக்களின் பிரார்த்தனை!

## தொழில் பிரச்சனை

கிராமத்திலுள்ளவர்களின் பிரதான தொழில்கள் விவசாயமும், மீன்பிடியும். வுலீகரையில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட் டுள்ள இறால் வளர்ப்பு திட்ட அறிவிப்பு கிராமமக்களின் தலையில் இடியை இறக்கி விட்டுள்ளது. இறால் பண்ணை திட்டத் தால் ஆற்றுநீர் மாசுபட்டு, மீன்பிடி பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்சம் முழு மட்டக்களப்பையும் அச்சுறுத்திவரும் நிலையில், அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் காக்கும் மௌனம் மக்களை நிம்மதியிழக்க வைத்துள்ளது.

'இறால் பண்ணையால் பிரதேசத்தில் வேலைவாய்ப்பு வருமென்கிறார்கள். வட்ட வானிலும் இதைதான் கூறினார்கள். அதிகாரி களின் கதையை நம்பிய வட்டவான்வாசிகள் நடுத்தெருவில் நிற்கிறார்கள். வேறு பிரதேசங்களை சேர்ந்தவர்கள்தான் அங்கு தொழில் செய்கிறார்கள். இறால் பண்ணை எங்களது வயிற்றில் அடிக்கும். இந்த திட்டம் எமக்குவேண்டாம். ஆற்றில் மீன்பிடித்தேநமது வாழ்வை கொண்டு செல்கிறோம்' என்பதே கிராமமக்களின் ஏகோபித்த கருத்தாக உள்ளது.

விவசாயிகள் எதிர்கொள்ளும் குளங்கள் புனரமைக்கப்படாதது. கோடைகாலத்தில் மட்டுமே விவசாயம் செய்ய முடிகிறது. காவேரிகுளம், கூழாவடிகுளம், வண்ணாகிரி மிச்சைகுளம் ஆகியன அருகில் உள்ளன. இவை புனரமைக்கப்படவில்லை. காவேரிகுள புனமைப்பிற்காக 12 மில்லியன் ஒதுக்கப்பட்டும், முழுமையான புனரமைப்பு நடக்கவில்லை. குளங்களை புனரமைத்தால் 2,500 ஏக்கர் வயல்நிலங்களில் இரண்டு போகமும் விவசாயம் செய்யலாம்.

## பாலம் அமைப்பு


இக்கிராமத்தில் இருந்து காவேரி குளம், கட்டுமுறிவுகுளம், மதுரங்கேணிகுளம், ஓமடியாமடு, வெலிக்கந்தை ஆகிய பிரதேசங் களுக்கு செல்வதாயில் ஆற்றில் தோணி மூலம் செல்ல வேண்டும். இல்லையெனில் பல மைல் தூரம் சுற்றித்தான் செல்ல வேண்டும். விவசாயம், கல்வி, இதர தேவைகளிற்கும் செல்பவர்கள் தோணி மூலமாகவும், வேறு வழியால் வாகனம் மூலமாகவும் செல்கின்றனர்.

1979ம் ஆண்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த தேவநாயகம் பாலம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். பாலம் அமைக்க இடம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை பாலம் அமைக்கப்படவில்லை,

கிராமத்திலுள்ள ஒரே ஆலயமான விக்னேஸ்வரர் ஆலயமும் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட நிலையில் உள்ளது. அதனையும் புனரமைத்து தர வேண்டுமென்ற கோரிக்கையையும் விடுக்கிறார்கள்.

'ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும்தான் அரசியல்வாதிகள் இங்கு வருகிறார்கள். ஏதேதோ சொல்லி வாக்கு கேட்கிறார்கள். அவர்கள் கூறும் பொய்களை நம்பி வாக்களிக்கிறோம். ஆனால் இறுதியில் தலையில் மிளகாய்தான் அரைக்கிறார்கள்' என்று கிராமமே வேதனைப்படுகிறது.

கிழக்கு முதலமைச்சர் அடிக்கடி கூறு கின்றார் கல்குடா தொகுதியை முற்றுமுழுதாக அபவிருத்தி செய்வேன் என்றும், எந்தவித இன பாகுபாடுமின்றி சேவையை வழங்குவேன் என. ஆனால் கல்குடாத் தொகுதிக்குட்பட்ட சின்னத்தட்டுமுனை கிராமமோ யாராலும் திரும்பிப்பார்க்கப்படாமல் உள்ளது.



# நூல் வெளியீடு: குழப்பத்திற்கு யார் காரணம்?

நிதர்சன்

இந்தியாவில் வசிக்கும் மு.திருநாவுக்கரசின் இலங்கை அரசியல் யாப்பு தொடர்பான நூல் வெளியீடு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்தபோது பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. குழப்பங்கள், சர்ச்சைகளுடன் கூட்டம் நிறைவுபெற்றுள்ளது. இந்த நிகழ்வு தமிழ் அரசியல்சூழல் பற்றிய பல்வேறு அச்சங்களையும் உருவாக்கிவிட்டுள்ளது. தமிழர்களால் ஜனநாயகம், பன்மைத்துவம் என்பவற்றை கற்றுக்கொள்ளவே முடியாதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

காங்கேசன்துறை வீதியிலுள்ள நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையிலிருக்கின்ற ராஜா திருமணமண்டபத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் புத்தக வெளியீடு நடைபெறுமென விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்வு மேடையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், கஜேந்திரகுமார், அனந்தி, சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் அமர்ந்திருந்தார்கள். அரசியல் மேடையில் இவர்கள் எதிர்எதிர் நிலைப் பாட்டில் இருப்பவர்கள். ஆனால் மனிதர்கள். எதிரெதிர் அரசியல் நிலைப்பாட்டில் இருப்பவர்கள் நேரில் சந்திக்கும்போது குசலம் விசாரிப்பதும், சாதாரணமாக உரையாடுவதும் சாதாரணமானது. ஆனால் நம்மவர்கள் காலையிலிருந்தே முகப்புத்தகத்தில் அலப்பறை பண்ண தொடங்கிவிட்டார்கள். சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் அருகருகில் இருக்கும் புகைப்படங்களை நிகழ்வு ஆரம்பிக்க முன்னரே பதிவேற்றி, 'இரண்டு துருவங்கள்', 'அருகருகில் சிங்கங்கள்' என்பது மாதிரியான சினிமாபாணி வசனங்களை அடித்துவிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த ரசிக மனோபாவத்தின் வெளிப்பாடு என்னவென்றால், இருவரும் சந்தித்தால் மோதல்தான். அது இன்னும் சற்று நேரத்தில் ஆரம்பித்துவிடும் என்பதே.

**தமிழர்கள் பிரிந்திருப்பது கையாள்பவர் களிற்கு இலகு. தமிழர்கள் தமது உரிமை விவகாரத்திலாவது ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக எதிர்எதிர் கட்சி அரசியல்தான் நடத்துகிறார்கள். கொள்கை, அரசியல் நிலைப்பாடுகள் குறித்த பகிரங்க விவாதமெல்லாம் தமிழ் சூழலில் அறவே இல்லை.**

இந்தவகையான அரசியல் தமிழர்களிற்கு உதவாது. தனிநபர் அரசியல் அல்லாது இனத்தை முன்னிலைப்படுத்திய அரசியல் பார்வையை வளர்த்து இந்தவகையான பார்வையுள்ளவர்கள் மாறிக்கொள்ள வேண்டும். சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் சாதாரணமாக அருகருகாக அமர்ந்து,பேசி தமது அரசியல் முதிர்ச்சியை வெளிக் காட்டினாலும், மோதலை எதிர்பார்த்து ஒருகுழு செயற்படுகிறதென்பதே உண்மை.

நிகழ்வின் தலைமையுரையை யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிற்றம்பலமும், வரவேற்புரையை விரிவுரையாளர் க.அருந்தாகரனும், நூலாய்வினை ஊடகவியலாளர் வ.தேவராஜாவும் நிகழ்த்தினர்.

இந்த சமயத்தில், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், பேச்சாளர்களின் முக்கிய பொறுப்புணர்ச்சியொன்று பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். சர்ச்சையை ஏற்படுத்தும், எதிர் அரசியல் போக்குள்ள கட்சி பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடல் நிகழ்த்துவதெனில், அதிக அக்கறையெடுத்துக் கொள்ள வேண்டும். எந்தெந்த பரப்பிற்குள் பேச்சாளர்கள் நுழையலாம், சர்ச்சையை தோற்றுவிக்கும் உணர்வுபூர்வ விடயங்களிற்குள் நுழையாமல் விடுவதை உறுதி செய்ய வேண்டும். ஏனெனில், தமிழ் மேடையென்பது இன்னும் ஜனநாயகப்படாதது. அந்த ஜனநாயகப்பண்பை கட்டியெழுப்புவதெனில் சிறுகச்சிறுகத்தான் முன்னகரலாம்.

ஐரோப்பிய தேர்தல்களின் முன் போட்டியாளர்கள் பகிரங்க விவாதத்திற்கு செல்வதெல்லாம் நமக்கு சரிப்படாது. தேவையெனில் வேட்பாளர்களிற்குள் தலையணை சண்டை, ஆதரவாளர்களிற்குள் கயிறுழுத்தல் போட்டி வைக்கலாம். இந்த பண்பை வளர்த்தெடுப்பது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் பொறுப்பு. அன்றைய நிகழ்ச்சியில் அது இருக்கவில்லை. ஆலய திருவிழாக்காரர்கள் 'முதன்முறையாக ஒரே மேடையில் ஒன்பது இசைக்குழு' என விளம்பரம் செய்வது மாதிரியாக அரசியல்மேடைகளிற்கு விளம்பரம் செய்வது முக்கியமல்ல. அதனை சிறப்பாக நடத்தியும் முடிக்க வேண்டும். ஏற்பாட்டாளர்களிடம் அந்த வல்லமை இல்லையென்பதே சிக்கல்களின் முதற்காரணம்.

அதேபோல, பேச்சாளர்களின் பொறுப்புணர்வும் முக்கியம். அவர்கள் மக்கள் பிரதிநிதிகள். அல்லது பிரதிநிதித்துவத்திற்காக காத்திருப்பவர்கள். ஆரோக்கியமான ஜனநாயக வெளியை உருவாக்கும் பெரும் தார்மீக பொறுப்புணர்வு வாய்ந்தவர்கள். தேவையெனில் குத்தல் பேச்சுக்கள் விசிலடிச்சான் குஞ்சுகளை உசுப்பேற்றலாம். அல்லது, இந்த மாதிரி எதிர்பாளர்களை உசுப்பேற்றும். இதற்கப்பால் வேறெந்த பலனையும் தராது. தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லது பிரதிநிதிகளாக வர முயல்பவர்கள் இந்தவகை அரசியலை கடந்து வெளியில் வர வேண்டும். இன்னும் கட்சி அரசயலை நடத்தாமல், மக்களை அல்லது தேசத்தை முன்னிறுத்திய அரசியல் செய்பவர்களின் மேடையில் இந்தவகை சர்ச்சைகள் தோன்றாதென்பதே உண்மை.

இரண்டாவதாக,பார்வையாளர் தரப்பில் உட்கார்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது. எதிரான நிலைப்பாடுடையவர் எனினும், கருத்தை சொல்வதற்கு அவருக்குள்ள உரிமையை மதிக்க வேண்டும். நீ பேசிக் கொண்டிருக்கும் ஒரு வார்த்தையும் எனக்கு சம்மதமில்லை, ஆனால் அதை பேசும் உன் உரிமைக்காக உயிரையும் கொடுக்கவும் சம்மதம் என்பார் பிரெஞ்ச் தத்துவாசிரியர் வோல்ட்ரேயர்.

ஆனால் அன்றைய நிகழ்ச்சியின் பார்வையாளர்கள் நடந்து கொண்டது மாறாக. குறிப்பாக சுமந்திரன் உரையாற்றியபோது எழுப்பப்பட்ட எதிர்ப்பு புரிந்து கொள்ளவே முடியாதது. தமிழ்தேசிய மக்கள் முன்னணியுடன் அடையாளப்படுத்தப்பட்ட சில இளைஞர்கள் எழுந்து கண்மூடித்தனமாக எதிர்ப்பை வெளியிட்டனர். அறிவுபூர்வ உரையாடல்கள், எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட வில்லை. சுமந்திரனிற்கு எதிர்ப்பு வெளியிட்ட இளைஞர் எழுகதமிழ் மேடையிலும் தோன்றியவர். ஒரு மாபெரும் மக்கள் போராட்ட மேடையில் தலைகாட்டிய இளைஞர், அந்த மக்கள் எழுச்சிக்கும் மரியாதை செய்ய வேண்டும். இப்படி கூட்டங்களில் குழப்பங்கள் ஏற்படுத்தினால், அந்த நபர்களை கொண்டு எழுக தமிழ் மக்கள் எழுச்சியையும் கொச்சை செய்ய வாய்ப்பாகிவிடும். இந்த குழப்பத்தை அல்லது எழுக தமிழை கட்சி விவகாரமாக சுருக்கிவிடவும் முடியும். கருத்துக்களை செவிமடுக்க பழகிக்கொள்வதும் மாபெரும் கலையே.

தமிழர்கள் பிரிந்திருப்பது கையாள்பவர்களிற்கு இலகு. தமிழர்கள் தமது உரிமை விவகாரத்திலாவது ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக எதிர்எதிர் கட்சி அரசியல்தான் நடத்துகிறார்கள். கொள்கை, அரசியல் நிலைப்பாடுகள் குறித்த பகிரங்க விவாதமெல்லாம் தமிழ் சூழலில் அறவே இல்லை. எதிரெதிர் நிலைப்பாடெனிலும் ஒரே மேடையில் விவாதிக்கும் புதிய சூழலை ஏற்படுத்த வேண்டிய அவசிய தேவை உள்ளது. அப்படியென்றால்த்தான் தமிழ் ஜனநாயகப் பரப்பு செழிக்கும். ஆனால், அன்றைய நிகழ்வு அதற்கு சாம்பல்தான் போட்டுள்ளது. இன்னொரு பல்கட்சி மேடையென்றதும் தலைவர்களிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் விதமாக அன்றைய புத்தக வெளியீடு முடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு நிலைப்பாடுடையவர்கள் பேசும் மேடையை வளர்க்க, தமிழ் ஜனநாயகத்தை செழிக்க செய்ய வேண்டும். அதற்கு பார்வையாளர்கள் மட்டும் பங்காளிகள் அல்ல. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், தலைமை வகிப்பவர், பொறுப்புணர்ந்து பேசுபவர்கள் என எல்லோருடைய பங்கும் அவசியம்.

இந்த நிகழ்ச்சி சர்ச்சையில் தொடர்புபட்ட ஒவ்வொருவரும் எற்பாட்டாளர்கள், பேச்சாளர்கள், அரங்கிலிருந்து சர்ச்சையில் ஈடுபட்டோர் சுயவிமர்சனம் செய்து கொள்வது அவசியம். அன்றையதினம் நாங்கள் சரியாக நடந்து கொண்டோமா என. அதிலிருந்தே தெளிவு பிறக்க முடியும்.





# நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

## ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 5



என்னை பெற்றோர் புரிந்துகொள்ள வில்லையென்றபோது ஆரம்பத்தில் கோபமும், வேதனையும் இருந்தது. இப்போது இல்லை. இந்த சமூகம் எப்படியானது, அவர்கள் என்னவிதமாக உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டுவிட்டேன். பதினெட்டு வயது முடிவதற்குள் எனக்கு உலகம் கற்றுத்தந்தது அனேகம்.

மோனிஷா

ஒரு திருநங்கையாக இந்த வாழ்க்கையையும், சூழலையும் பாதுகாப்பற்றதாகவே நான் உணர்ந்து கொண்டிருந்தேன். இதில் எழுதுவதைவிட சிரமமானது அந்த வாழ்க்கை. சில வலிகளிற்கும் அவமானங்களிற்கும் நிகரான வார்த்தைகள் கிடையாது. அந்த வலிகளையும், அவமானங்களையும் வார்த்தைகளில் சொல்ல முடியாது. அதிகமேன், நடந்த முடிந்தபின்னர் மீண்டுமொருமுறை முழுமையாக நினைவுகொள்ளவும் முடியாது. அவ்வளவு கனதி, கொடூரமானது.

அப்படியான கனத்த அனுபவங்களை நான் தினமும் சந்தித்து கொண்டிருந்த பருவம். உலகத்தின் முன் திருநங்கையாக நான் காலடியெடுத்து வைத்த காலம். அவமானங்கள், கேலிகள், வசைகளை எதிர்கொள்ளத் தொடங்கியிருந்தேன்.

ஒவ்வொரு வசைச்சொல்லை உதிர்க்கும் உதடுகளையும், கேலி பேசும் வாய்களையும் மிக நன்றாகவே மனது பதிந்து வைத்திருந்தது. அதனால் சிலரை பார்த்தாலே வேறுதிசையில் சென்றுவிடுவேன்.

எங்கள் வீட்டுக்கருகில், வீதியில், சுற்றயலில் இருந்த எண்ணற்ற முகங்கள் அசிங்க முகங்களாக மனதில் பதிந்துவிட்டது. அவர்களை எதிர்ப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நான் காயப்படுத்தப்படுவேன்.

இப்படியான சிலர் மிக அசிங்கமாக என்னை கேலி செய்தபடி பின்னாலேயே சுற்று வார்கள். பாலியல் உறவிற்கு அழைப்பார்கள். இதில் எங்கள் கிராமத்தை சேர்ந்த இருவர் முக்கியமானவர்கள்.

அப்பொழுது நான் என்னளவில் மாற்றத்தை உணர்ந்து கொண்டிருந்த சமயம். தோற்றத்திலல்லாமல் செயற்பாட்டில் பெண்மை வெளிப்பட்ட காலம் அது. ஒருநாள் நான் தனிமையில் சென்று கொண்டிருக்க, பின்னால் வந்து பாலியல் உறவிற்கு அழைத்தார்கள். நான் அவர்களை தவிர்த்துவிட்டு, விரைவாக சென்றுவிட்டேன்.

மறுநாள், நல்லூரடியில் சென்றுகொண்டிருந்தேன். ஆள்நடமாட்டம் குறைவான நேரம். இருவரும் சைக்கிளில் வந்து மறித்தார்கள். தங்களுடன் வரச்சொன்னார்கள். நான் அவர்களை தவிர்த்து வேகமாக செல்ல முயல, கையை பிடித்து இழுத்தார்கள். உதறிவிட்டு ஓடினேன். ஆனால் அவர்கள் என்னை பிடித்துவிட்டனர். சைக்கிளின் முன்பக்கத்தில் என்னை இருத்திக் கொண்டு சென்றார்கள். பாடசாலையொன்றிற்கு முன்பாக உள்ள பற்றைக்குள் கொண்டு சென்று, என் கை,கால், வாயை கட்டி அவர்கள் குரூர எண்ணத்தை செயற்படுத்தினார்கள்.

விடயம் முடிய அவர்கள் தப்பியோடி விட்டனர். நான் வீட்டுக்கு சென்று நடந்ததை சொன்னேன். பின்னர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டேன். மறுநாள் யாழ்ப்பாண பத்திரிகை, இணையங்கள் பரபரப்பு செய்தி வெளியிட்டன. எல்லா ஊடகங்களும் பாதிக்கப்பட்ட நான் யார் என்பதை துப்பறிந்து, என்னை நெருங்கவே முயன்றன. வைத்திய சாலை, சட்டபாதுகாப்பு இருந்தபடியால் தப்பித்தேன். இல்லையென்றால், என் சிறுபராயத்திலேயே ஊடகங்கள் என்னை கொன்றிருக்கும். என் படம் கிடைத்திருந்தால் நிச்சயம், படத்துடன் செய்தி பிரசுரித்திருப்பார்கள். அவர்கள் யாருக்கும் இந்த அசிங்கத்தை செய்தவர்கள் யார் என்பதிலோ, அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதிலோ துளியும் ஆர்வம் கிடையாது.

என்னுடன் அத்துமீறி நடந்தவன் ஒருவனிற்கு எச்.ஐ.வி தொற்றுள்ளதென்ற அதிர்ச்சி தகவல் பின்னர்தான் தெரியவந்தது. மருத்துவமனையில் எனக்கு தொடர்சிகிச்சை, பரிசோதனை நடத்தப்பட்டது. நல்ல வேளையாக, அப்படியொரு அபாயத்தில் சிக்கவில்லை. இப்பொழுது மகிழ்ச்சியாக இரத்ததானமும் செய்கிறேன்.

யாழில் பாலியல் தொழிலாளிகள் இருக்கிறார்கள். உலகத்தின் எல்லா மூலையிலும் அவர்கள் இருக்கிறார்கள். திருநங்கைகளும் பாலியல் தொழிலாளிகளாக உள்ளனர். ஏன், யாழ்ப்பாணத்தில்கூட அப்படியிருக்கிறார்கள். ஆனால், பெண்களையே பாலியல் பிண்டங்களாகவும், திருநங்கைகள் என்றாலே பாலியல் தொழிலாளிகள்தான் என்பதை போலவும் சமூகம் தவறாக கருதுகிறது. தென்னிந்திய சினிமாவில் திருநங்கைகள் என்றால் பாலியல் தொழில் செய்பவர்கள், கேலிக்குரியவர்கள் என்பதை போன்ற சித்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் வீட்டிலும், சமூகத்திலும் சவால்களை சந்திக்க இதுதான் பிரதான காரணம். திருநங்கைகளும் மனிதர்களே, பால்நிலை வேறுபாட்டால் அவர்களை கேலிக்குரியவர்களாக பார்ப்பது தவறென்பது நமது சமூகத்தில் சொல்லிக்கொடுக்கப்படவில்லை. அதனால்த்தான் ஒவ்வொரு திருநங்கையும் வீட்டிலும், சமூகத்திலும் சிக்கல்களை சந்திக்கிறார்கள்.

நான் எனது வீட்டில், பெற்றோர்களுடன் வசிப்பதில்லை. எனது வீட்டில், பெற்றோர்களால் இழைக்கப்பட்ட கொடுமையிலிருந்து காவல்த்துறைதான் காப்பாற்றியது. அவர்களின் பார்வையில் நான் வேண்டாத பிள்ளை. நான் இருப்பதை அவமான சின்னமாக கருதினார்கள். நான் செத்துப்போவதையே விரும்பினார்கள். தினம்தினம் அடித்தார்கள், சித்திரவதை செய்தார்கள், வார்த்தைகளால் கொன்றார்கள். இனி தாங்கவே முடியாதென்றபோது காவலநிலையத்திற்குதான் ஓடினேன். அவர்கள்தான் பெற்றோரை அழைத்து கண்டித்து, ஆலொசனை சொல்லி அனுப்புவார்கள்.

என்னை பெற்றோர் புரிந்துகொள்ள வில்லையென்றபோது ஆரம்பத்தில் கோபமும், வேதனையும் இருந்தது. இப்போது இல்லை. இந்த சமூகம் எப்படியானது, அவர்கள் என்னவிதமாக உருவாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டுவிட்டேன். பதினெட்டு வயது முடிவதற்குள் எனக்கு உலகம் கற்றுத்தந்தது அனேகம். இந்த சமூகத்தின் ஒரு அங்கம்தான் எனது குடும்பமும். இந்த சமூகம் எப்படி உருவாக்கப்பட்டதோ, அப்படித்தான் அவர்களும் உருவாக்கப்பட்டனர். இந்த சமூக அமைப்பு மாறும்வரை குடும்பத்தில், வீட்டில் மாற்றம் வருமென எதிர்பார்க்க முடியாது.

அதனால் யார் மீதும் இப்போது கோபம் கிடையாது.

தொடரும்...



# பூனை குறுக்கே போனால் கெட்ட சகுனமா?

பூனைகள் எப்போதும் குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளில்தான் இருக்கும். மன்னர்கள் காலத்தில் போருக்குப்படை திரட்டிச் செல்லும் வழியில் பூனையைப் பார்த்தால், இந்த வழியில் குடியிருப்புகள் இருக்கிறது. அங்கே இருக்கும் ஆண்மகன்கள் அனைவரும் போர்க்களத்திற்குச் சென்றிருப்பார்கள். அங்கே சிறுவர்கள், வயதானவர்கள், பெண்கள் மட்டுமே இருப்பார்கள். ஆகவே இந்த வழியாக சென்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக, அவர்கள் வந்த திசையை மாற்றி வேறு திசையில் செல்வார்களாம். மேலும் அக்காலத்தில் போக்குவரத்துக்குப் பெரும்பாலும் குதிரையைத்தான் பயன்படுத்தினர். பூனையைப் பார்த்தால் குடியிருப்புகள் இருக்கும் என உணர்ந்து, யாரும் அடிபட்டுவிடக் கூடாது என்பதற்காகக் குதிரையில் மெதுவாகச் செல்வார்களாம்.

அதனால்தான் பூனை குறுக்கே போனால் அந்த வழியாகச் செல்லக்கூடாது என்றார்கள். இந்த உண்மை தெரியாமல், மூட நம்பிக்கையாக, பூனை குறுக்கே போனால், கெட்ட சகுனம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.



## பிஸியான பிரியா!

பிரியா ஆனந்த் நினைத்த மாதிரி திரையுலகம் இல்லை. எவ்வளவு முயன்றும் முன்னணி நடிகையாக முடியவில்லை. பெரிய ஹீரோக்களின் கடைக்கண் பார்வையும் கிட்டவில்லை. இரண்டாம் நிலை ஹீரோக்களுடன்தான் ஜோடி சேர முடிகிறது. மலையாளத்தில் இருந்து வரும் இளம்நாயகிகளின் தாராள கவர்ச்சிதான் தனக்கு வினையாகிறதென முணுமுணுக்கும் பிரியா, இந்திப்பக்கம் முயற்சி செய்ய ஆரம்பித்துள்ளார். இதற்கு உடனடி பலனும் கிடைத்துள்ளது. இதற்காக 90 நாள் கால்சீட் கொடுத்துள்ளாராம்.

## இதையெல்லாம் பார்ப்பாராம்!

ஆஷ்னா சவேரியென்றால் உடனடியாக நினைவிற்கு வராது. சந்தானத்தின் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் ஹீரோயின். பணம்தான் குறியென எல்லா படத்தையும் இழுத்துப்போடும் நாயகிகள் மத்தியில் நான் வித்தியாசமானவள் என்கிறார் இவர். ஒரு படத்தை தேர்வு செய்வதில் ஏராளம் விதிமுறைகளை பார்க்கிறார். கதை பிடிக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனை. நிறையப்படம் நடிப்பது முக்கியமல்ல, பெயர் சொல்லும் படம் வேண்டும் என தத்துவம் வேறு பேசுகிறார். அதுதவிர, தயாரிப்பாளர், இயக்குனர் யாரென்றும் பார்ப்பேன் என்றுள்ளார். இவ்வளவும் சரியாக அமைந்தால்தான் படத்தை தேர்வு செய்வாராம்.

## வரலாற்றில் விஜய் சேதுபதி!

விஜய் சேதுபதி நடிப்பில் 'றெக்க' படம் வெளியானது. அந்த படத்தோடு விஜய் சேதுபதி நடிப்பில் இந்த வருடம் 6 படங்கள் வெளியாகியுள்ளது. அதில், முக்கால்வாசி படங்கள் நல்ல வசூலை பெற்றுள்ளன. இந்நிலையில், எந்த நடிகருக்கும் கிடைக்காத பெருமை ஒன்று அவருடைய படங்களுக்கு கிடைத்துள்ளது. அது என்னவென்றால், விஜய் சேதுபதி நடித்த 'தர்மதுரை' படம் கடந்த ஒகஸ்ட் 19ந் தேதிகதி ரிலீஸ் ஆனது. அதைத் தொடர்ந்து அவர் நடித்த 'ஆண்டவன் கட்டளை' படம் செப்டம்பர் 23ந் திகதி வெளியானது. கடந்த 7ந் திகதி 'றெக்க' படமும் வெளியானது. இரண்டு மாதங்களுக்குள் அவர் நடிப்பில் மூன்று படங்கள் வெளியாகியுள்ள நிலையில், சென்னை சத்யம் திரையரங்கில் க, 'றெக்க' படடன. சத்யம் திரையரங்க வரலாற்றிலேயே ஒரு நடிகர் நடித்த மூன்று படங்கள் திரையிடப்படுவது இதுதான் முதல்முறை என்று கூறப்படுகிறது.



# டூரிங் டாக்கீஸ்

## திருமணத்தை தள்ளிவைக்கும் நடிகைகள்

சினிமா பணம் கொழிக்கும் தொழில். அதனால்தான் பல நடிகைகள் திருமணத்தையே தள்ளிவைத்து நடித்துக் கொண்டிருக்கிறார்கள். திருமணம் செய்யும்படி குடும்பம், காதலர்கள் வற்புறுத்தியும் நடிகைகள் திருமணத்தை தள்ளிவைப்பதன் காரணம் பணம். சினிமாவில் கிடைக்கும் புகழ் இன்னொரு காரணம். எங்கு சென்றாலும் புகழ் வெளிச்சம் விழும். அது இல்லாமல் இருப்பது மிக சிரமம். இதனால்தான் வயது ஏறினாலும் திருமணத்தை தள்ளிவைத்துக்கொண்டிருக்கிறார்கள் நடிகைகள். அனுஷ்காவிற்கு 34 வயதாகிறது. த்ரிஷாவிற்கு 33 வயதாகிறது. நயன்தாராவிற்கு 31 வயதாகிறது. காஜலுக்கும் இதே வயதுதான். ஆனால் இவர்களிற்கு உடனடியாக திருமணம் செய்யும் உத்தேசமில்லை. காஜல் இரண்டு வருடத்தின் பின்னர்தான் திருமணம் என அறிவித்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

## தாராளமயமாகும் அஞ்சலி!

நல்ல நடிகையென பெயர் வாங்கிக்கொண்டிருந்த சமயத்தில் சித்தியுடன் சச்சரவுப்பட்டு வீட்டைவிட்டு ஓடி தலைமறைவானார் அஞ்சலி. இதன்மூலம் சினிமா வாய்ப்பையும் சேதமாக்கிக் கொண்டார். ஆந்திரா பக்கம் போய் தெலுங்குப்படங்களில் நடித்தார். பின்னர் தமிழுக்கு வந்து சூர்யா படத்தில் கவர்சி நடனம் ஆடினார். அதன்பின் நடித்த சகலகலாவல்லி, இறைவி படங்களில் குடும்பப்பாங்காக நடித்தார். அதன்பிறகு ஒப்பந்தமான படங்களிலும் குடும்பகுத்துவிளக்குத்தான். ஆனால் இந்தப்படங்கள் இன்னும் வெளியாகவில்லை. இதற்குள் அஞ்சலி வேறு முடிவெடுத்துள்ளார். இனி கலகலப்பான கவர்ச்சி பெண்ணாக நடிக்கவுள்ளாராம்.

## சமந்தா மாறினாரா?

சமந்தா, நாகசைதன்யா காதல் ஊரறிந்தது. அடுத்த வருடம் இருவரும் திருமணம் செய்யவுள்ளனர். புதிய படங்களில் ஒப்பந்தமாகவதையும் சமந்தா தவிர்த்து வருகிறார். கிறிஸ்தவரான சமந்தா, இந்துவான நாகசைதன்யாவை திருமணம் செய்வதும் இப்போது பரபரப்பை தோற்றுவித்துள்ளது. யார் மதம் மாறுவார்கள்? மதம் மாறாமலேயே திருமணம் செய்வார்களா? என்ற சர்ச்சைகள் நீடித்துவந்த நிலையில், சமந்தா இந்துவாக மதம் மாறிவிட்டார் என்ற தகவல் இணையத்தில் பரவியது. அது பற்றிய புகைப்படங்களும் பரவின. இந்த தகவலை நாகசைதன்யா மறுத்துள்ளார். இருவரும் அவரவர் மதத்தை பின்பற்றியபடியே வாழவுள்ளதாக கூறியுள்ளார்.

## பெண்ணாக மாறிய நடிகர்!

பொலிவூட்டின் பிரபல நடிகர், மொடல் கவுரவ் அரோரா. இவர் இப்பொழுது பெண்ணாக மாறிவிட்டார். கவுரி அரோரா என பெயரையும் மாற்றிவிட்டார். தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோது தான் பெண்ணென்பதை உணர்ந்ததாக கூறியுள்ளார். பெண்ணாக மாற தேவையான அறுவை சிகிச்சைக்காக உடல்ரீதியாக தயாராகிவிட்டதாகவும், தேவையான மருந்துகள் சாப்பிட்டு வருவதாகவும் கூறியுள்ளார். பெண்ணாக மாற பலமுறை முயற்சித்ததாகவும், பெற்றோர் மற்றும் சமூகத்திற்கு பயந்து அந்த முடிவை கைவிட்டதாகவும் கூறியுள்ளார். இந்த மனஉளைச்சலில் தற்கொலைக்கு முயன்றதாகவும் கூறியுள்ளார்.

## ரஜினிக்கு பின் சிவகார்த்திகேயனா?

தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர் உரிமையாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகிவிட்டார் சிவகார்த்திகேயன். அவரது படமென்றால் கண்ணை மூடிக்கொண்டு காசை கொட்ட தயாராக உள்ளனர் அனைவரும். இதனால்த்தான் ரெமோ படத்தை பெரியளவில் தயாரித்தார்கள். இந்தபடத்தை ஜப்பானில் வெளியிடும் உரிமையை மெட்ராஸ் மூவிஸ் நிறுவனம் டோக்கியோ பெற்றுள்ளது. ரஜினி தவிர்ந்த மற்றைய நடிகர்களின் படங்கள் யொகோயமா (Yokoyama), டோக்கியோ (Tokyo) பிரதேசங்களில் மட்டும்தான் வெளியாகும். ரஜினி படம் மட்டும்தான் நகோயா பிரதேசத்தையும் சேர்த்து மூன்றாவது இடத்திலும் வெளியாகும். சிவகார்த்திகேயன் படமும் இந்த இடத்தில் வெளியாகவுள்ளதாம்.




# நியாயமா... நல்லெண்ணமா?

## பிரதி அவைத்தலைவர் பதவி யாருக்கு?

நம்மாழ்வார்

மீண்டும் ஒருமுறை சூடுபிடித்துள்ளது வடமாகாண அரசியல் களம். வெளியில் புகை வராமல் உள்ளுக்குள் இப்பொழுதுதான் சூடு பரவ ஆரம்பித்துள்ளது. அதனால்தான் இணையங்கள், பத்திரிகைகள்ஞ் ஏன், அரசியல் -மேடைகளிலும் இந்தப்பேச்சு இன்னும் வெளியாகவில்லை.

அடுத்த, பிரதி அவைத்தலைவர் யார்?

இதுதான் சூட்டை கிளப்பியுள்ள விவகாரம். காலைவாருதல், ஆளையாள் உள்குத்து குத்துதல் எல்லாம் ஆரம்பித்துள்ளது. அடுத்து வரவுள்ள நாட்களில் இதன் உச்சத்தை தொட்டு அதகளம் பண்ணுவார்கள்.

ஏற்கனவே ஒருமுறை இப்படி சூடு பறந்தது. அது வடக்கு மாகாணசபையை கைப்பற்றியதும் நடந்தது. யார் யார் அமைச்சர்களாவது என்பற சர்ச்சையை தொடர்ந்து எழுந்த அக்கப்போர் அது

தமிழ்தேசிய` கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிகளும் நான்கு திசையில் நின்று கயிறிழுக்க, பார்த்துக் கொண்டிருந்த மக்களிற்கு சலிப்புத்தான் மிஞ்சியது. முதலமைச்சர், அவைத்தலைவர், நான்கு அமைச்சர்களை நான்கு கட்சிகள் எப்படி பிரிப்பதென்பதில் உடன்பாடு காண முடியாமல் குடுமிச்சண்டையிட்டார்கள் தமிழர்களின் பிரதிநிதிகள்.

வரலாறு மீண்டும் திரும்பியுள்ளது.

வடமர்காணசபையின் உப தவிசாளராக இருந்த அன்ரனி ஜெகநாதன் அண்மையில் மரணமானார். அந்த வெற்றிடத்தை யார் நிரப்புவதென்பதில் சர்ச்சை தோன்றியுள்ளது.

கடந்த மாகாணசபை தேர்தலின் பின்னர் பதவிகள் பகிரப்பட்ட விதத்தில் கூட்டணிக்கட்சிகளிற்குள் முழுமையான திருப்தியிருக்கவில்லை. குறிப்பாக புளொட் அமைப்பிற்கு குறிப்பிடத்தக்க பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை. சித்தார்த்தனின் நீண்ட அரசியல்செயற்பாடு, அவர் பெற்றுக்கொண்ட வாக்குகளை கணக்கெடுக்கவில்லையென்ற வருத்தம் அந்த கட்சிக்குள் இருக்கிறது.

அவைத்தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு சித்தார்த்தனை அந்த சமயத்தில் கூட்டணி தலைமை கேட்டுக்கொண்ட போதும், அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சீனியாரிட்டி அடிப்படையிலாவது அமைச்சு வழங்கியிருக்க வேண்டுமென்பது புளொட்டின் நிலைப்பாடு. அதன்பின்னர் தான் சீ.வீ.கே.சிவஞானத்திடம் அவைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது.

அமைச்சு உள்ளிட்ட பதவிகள் பகிரப்பட்டபோது மன்னார் மாவட்டத்தில் பெரும் கொந்தளிப்பே நிகழ்ந்தது. மன்னாரை சேர்ந்த டெனிஸ்வரனிற்கு அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும் என்று பகிரங்க கோரிக்கை வைக்கப்பட்டது. அதன் பின்னர் மாவட்டரீதியான நியமன கோரிக்கையும் வலுத்தது. கட்சிகளிற்கும் கொடுக்க வேண்டும், மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற நெருக்கடியை கட்சித்தலைமை கச்சிதமாக கையாண்டு நியமனங்கள் வழங்கியது. யாழ்ப்பாணத்தில் ஐங்கரநேசன், கிளிநொச்சியில் குருகுலராஜா, வவுனியாவில் சத்தியலிங்கம், மன்னாரில் டெனிஸ்வரன் என்று நியமனங்கள் வழங்கப்பட்டபோது, முல்லைத்தீவு மிஸ்ஸிங்.

அந்த சமயத்தில் புளொட்டிடம் முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதித்துவம் இருந்திருந்தால் பிரதி அவைத்தலைவர் பதவி அவர்களிடம் சென்றிருக்கலாம். ஆனால் அவர்களிடம் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. இந்த சமயத்தில் ஈ.பி.ஆர். எல்.எவ் அதில் குறிவைத்தது. முல்லைத்தீவில் ரவிகரன் இருக்கிறார், அவருக்கு வழங்கலாமென சிபாரிசு செய்தது. ஆனால் தமிழரசுக் கட்சி பிரதி அவைத்தலைவர் பதவியையும் எடுத்துக் கொண்டது. அன்ரனி ஜெகநாதன் பதவியேற்றுக்கொண்டார்.

கடந்தமுறையை போல பெரும் அக்கப்போராக இல்லாமல் சிறியளவில் இம்முறையும் குழப்பம் ஆரம்பித்துள்ளது. வெற்றிடமாக இருப்பது அமைச்சர் பதவியென்றால் குழப்பம் அதிகரித்திருக்கும். உதவி அவைத்தலைவர் பதவி கிட்டத்தட்ட சமாளிப்பு பதவியென்பதை போலத்தான் இதுவரையான வடமாகாணசபை செயற்பாடு அமைந்திருந்தது. "சபையை தலைமை தாங்க என்னை அனுமதிக்கிறார்களே இல்லை" என்ற குற்றச்சாட்டுடனேயே மரணித்திருக்கிறார் அன்ரனி ஜெகநாதன். வடமாகாணசபையை பொறுத்தவரை உதவி அவைத்தலைவர் என்பது சம்பிரதாய பதவியென்பதால் சர்ச்சையின் வீரியம் குறைவாக இருக்கிறது.

பிரதி அவைத்தலைவர் பதவிக்கு இன்னும் பகிரங்க மோதல்கள் ஆரம்பிக்கவில்லை. ஆனால் சிலர் குறிவைத்துள்ளனர். சிலர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர். சிலர் பொருத்தமானவர்களாக இருப்பார்கள் என்ற அபிப்பிராயங்கள் எழுந்துள்ளன. அந்த விபரம் இது அரியரட்ணம், கமலேஸ்வரன், ரவிகரன், சிவநேசன், லிங்கநாதன், யாராவதொரு முஸ்லீம் பிரதிநிதி. இவர்களில் யாராவதொருவர் உதவி அவைத்தலைவராகுவதற்கே வாய்ப்புக்கள் அதிகம்.

இவர்களில் யார் பொருத்தமானவர் என்பதே இப்பொழுது கேள்வி.

கூட்டணிக்குள் தமிழரசுக்கட்சிக்குத்தான் குரலும், பலமும் பெரிது. தமிழரசுக்கட்சியின் ஒருபகுதியினர் பசுபதி அரியரட்ணத்தின் பெயரை முன்மொழிந்துள்ளனர். ஆனால் இதிலுள்ள சிக்கல், அரியரட்ணம் தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவானவர். தமிழரசுக் கட்சிக்கு முதல்வர், அவைத்தலைவர், இரண்டு அமைச்சுக்கள் உள்ள நிலையில் மேலதிகமாக பிரதி அவைத்தலைவரையும் வழங்குவது கொஞ்சமும் கூட்டணி நாகரிகத்தை மதிக்காததாகிவிடும். தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அப்படியொரு முடிவிற்கு போவார் என கருத வாய்ப்புக்கள் குறைவு. முல்லைத் தீவு மாவட்டத்திற்குரிய நியமனத்தை எனக்கு வழங்கி சிக்கல்படுத்த வேண்டியதில்லையென அரியரட்ணமே சொன்னதாகவும் ஒரு தகவலுண்டு.

அன்ரனி ஜெகநாதன் தமிழரசுக்கட்சிக்காரர், எனவே முல்லைத்தீவில் தமிழரசு கட்சியை சேர்ந்த கமலேஸ்வரனிற்கு வழங்க வேண்டுமென ஒருசாரார் வலியுறுத்துகிறார்கள். என்றாலும், இதற்கான வாய்ப்பு கிட்டத்தட்ட இல்லையென்றுதான கூற வேண்டும்.

முல்லைத்தீவை சேர்ந்த ஈ.பி.ஆர். எல்.எவ் பிரதிநிதி ரவிகரன் அந்த பதவியை குறிவைத்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும், தமிழரசுக்கட்சியுடன் முரண்டுபிடித்துவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அந்த பதவியை பெற்றுக்கொள்வது குதிரைக்கொம்புதான்.

தற்போது புளொட்டிற்கு முல்லைத்தீவு பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. அந்த அமைப்பின் சிவநேசனிற்கு பிரதி அவைத் தலைவர் பதவி கிடைப்பதுதான் முறையானதென்ற கருத்து பரவலாக உள்ளதுடன், அவருக்கு அதிக வாய்ப்புள்ளதாக தெரிகிறது. இதற்குள், புளொட்டின் வவுனியா உறுப்பினர் லிங்கநாதனின் பெயரையும் சிலர் பிரேரிப்பதாக தெரிகிறது. புளொட்டிற்குள் சர்ச்சையை தோற்றுவிக்க சிலர் திரி தூண்டி விடுவதாகவும் அது அமையலாம். எனினும், சிவநேசனின் தெரிவிற்கே புளொட் தலைமை ஆதரவு தெரிவிக்குமென தெரிகிறது.

இதற்குள் இன்னொரு கருத்தும் எழுந்துள்ளது. நல்லெண்ண அடிப்படையில் முஸ்லீம் பிரதிநிதியொருவரிற்கு இதனை விட்டுக்கொடுக்கலாமென்ற கருத்தும் முன்வைக்கப்படுவதாக தெரிகிறது. அப்துல் றிப்கான், முகமது றியாஸ், யாசீன் ஜவாகீர் ஆகியவர்கள் தற்போது தமிழ்தேசிய கூட்டமைப்பை தவிர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள். இவர்களில் ஒருவருக்கு பதவியை கொடுத்து, நல்லெண்ணத்தை வெளிப்படுத்தலாமென்ற அபிப்பிராயமும் எழுந்துள்ளது. அனேகமாக முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதிக்கே அந்த வாய்ப்பு கிட்டலாம்.

நியாயப்படி புளொட்டிற்கா, நல்லெண்ண அடிப்படையில் முஸ்லீம் காங்கிரசிற்கா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி.

எதுவானாலும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர ஆலோசித்து முடிவெடுத்தால் சர்ச்சைகளை தவிர்க்கலாம்.


அன்ரனி ஜெகநாதன்


இரவிகரன்


முகமது றியாஸ்


அப்துல் றிப்கான்


அரியரட்ணம்


சிவநேசன்


யாசீன் ஜவாகீர்



எம்.ஜி.ஆருடன் பழனி ஜி.பெரியசாமி.

# மென்மையான உள்ளம் கொண்டவர்!

✎ ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** தன்னால் ஒரு மனிதர் கூட வருத்தப்படக் கூடாது என்ற மென்மையான உள்ளம் கொண்டவர். தவிர்க்க இயலாத நிலையில், தன் நடவடிக்கையால் யாராவது பாதிக்கப்பட்டாலோ, மனம் புண்பட்டாலோ, உடனே அதற்கு பரிகாரம் தேடிய பிறகே அமைதி அடைவார் என்பதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு. சிலம்புச் செல்வர் என்று அழைக்கப்பட்டவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான ம.பொ.சி தொடர்பான சம்பவம் அதில் ஒன்று.

'மந்திரி குமாரி, 'மலைக்கள்ளன்', 'குலேபகா வலி', 'மதுரை வீரன்' போன்ற சூப்பர் ஹிட் படங்களில் நடித்து புகழ் பெற்று 1956ம் ஆண்டிலேயே எம்.ஜி.ஆர் தமிழ் 'திரையுலகின் உச்ச நட்சத்திரமாக திகழ்ந்தார். அந்த ஆண்டு ஜூன் 26ம் தேதி ம.பொ.சி.யின் பொன்விழாவை முன்னிட்டு சென்னையில் அவருக்கு நடந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்ள எம்.ஜி.ஆர் அழைக்கப்பட்டிருந்தார். விழாவில் எம்.ஜி.ஆர் பேசும்போது, ம.பொ.சி.யின் தமிழறிவை பாராட்டி, "தமிழை மழை போல் பொழியும் சிவஞானம்" என்று கூறவும்... கூட்டம் ஆர்ப்பரித்தது.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது திருத்தணி ஆந்திராவுடன் சேர்க்கப்பட்டது. வடக்கு எல்லை போராட்டம் நடத்தி திருத்தணியை தமிழகத்துக்கு மீட்டார் ம.பொ.சி. பின்னாளில் அவர் குடல்புண் நோயால் பாதிக்கப்பட்டபோது, அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை. அவருக்கு தைரியம் சொல்லி மருத்துவமனையில் சேர்த்து, அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகளையும் செலவுகளையும் செய்து குணப்படுத்தி கடும் வயிற்று வலியில் இருந்து ம.பொ.சியை மீட்டார் எம்.ஜி.ஆர்.


எம்.ஜி.ஆருடன் ம.பொ.சி.

1986ம் ஆண்டு வரை தமிழகத்தில் மேல்சபை இருந்து வந்தது. சட்டசபைத் தேர்தலில் தோற்றவர்களை கொல்லைப்புற வழியாக பதவிக்குக் கொண்டு வரவே மேல்சபை பயன்படுகிறது என்று பொதுவாக ஒரு விமர்சனம் இருந்தது. இந்நிலையில், 1986ல் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது தமிழகத்தில் மேல்சபை கலைக்கப்பட்டது. அதுகுறித்து பல்வேறு சர்ச்சைகளும் வருத்தங்களும் நிலவின.

1984ம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக தலைவர் கருணாநிதி போட்டியிடவில்லை. அப்போது அவர் மேல்சபை உறுப்பினராக இருந் தார். அரசியல் காரணங்களுக்காக சபை கலைக்கப்பட்ட தாகவும் பேச்சு உண்டு. ஆனால், அரசுக்கு தேவையில்லாத வீண் செலவு என்பதால் மேல்சபை கலைக்கப்பட்டதாக அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அரசுக்கு வீண் செலவு என்று கூறி ஆந்திராவிலும் மேல்சபை கலைக்கப்பட்டது. அங்கே அப்போது எதிர்ப்பு தெரிவித்த காங்கிரஸ், தமிழகத்தில் அதுதொடர்பான வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தது.

காங்கிரஸில் செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கிய ஜி.கே.மூப்பனார், "மேல்சபை கலைப்பை நாங்கள் எதிர்க்கிறோம். ஆனால், கூட்டணிக் கட்சியான அதிமுகவுக்கு சங்கடம் ஏற்படுத்த விரும்பவில்லை என்பதால் காங்கிரஸ் நடுநிலை வகித்தது" என்றார். பாம்புக்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டுவதாக காங்கிரஸை திமுக குற்றம் சாட்டியது.

இந்த சர்ச்சைகளுக்கு நடுவே, மேல்சபை கலைக்கப்பட்டதில் மிகவும் வருத்தமடைந்தவர் ம.பொ.சி! அப்போது, மேல்சபைத் தலைவராக அவர்தான் இருந்து வந்தார். அரசின் முடிவை கடுமையாக எதிர்த்தார். முதல்வர் எம்.ஜி.ஆரை யும் விமர்சித்தார்.

எம்.ஜி.ஆரின் நண்பரான டாக்டர் பழனி ஜி.பெரியசாமி, ம.பொ.சி.க்கும் நெருக்கமானவர். அவரை அடிக்கடி சந்தித்துப் பேசுவார். அவர் ம.பொ.சியை சந்தித்தபோது, "மேல்சபை கலைப்பு முடிவுக்காக எதற்காக எம்.ஜி.ஆரை விமர்சிக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

பொதுவாழ்வில் ம.பொ.சி. தூய்மையானவர். தனக்கென்று எந்த சொத்து சுகமும் சேர்க்காதவர். "மேல்சபைத் தலைவர் பதவி போய்விட்டால் மாதம்தோறும் எனக்கு கிடைக்கும் சம்பளமும் போய்விடும். எனக்கு இப்போது அரசாங்க கார் இருக்கிறது. அந்தக் காரும் இருக்காது. வயது முதிர்ந்த காலத்தில் வெளியே செல்ல வேண்டுமானால் என் பாடு திண்டாட்டம்" என்று பழனி பெரியசாமியிடம் கூறி ம.பொ.சி. வருத்தப் பட்டிருக்கிறார். ம.பொ.சி. யாரிடமும் எதுவும் கேட்டுப் பழகாதவர். எம்.ஜி.ஆர் வீட்டுக்கு சென்றால் அவரிடம் எதுவும் கேட்கக் கூடாது என்று தனது மகள் மாதவி பாஸ்கரனிடம் சொல்லி அனுப்புவாராம்.

ம.பொ.சி. தன்னிடம் வருத்தப்பட்ட அன்று இரவே எம்.ஜி.ஆரை பழனி பெரியசாமி சந்தித்தார். விஷயத்தைச் சொன்னார். எம்.ஜி.ஆர். "அப்படியா?" என்று கேட்டுக் கொண்டாரே தவிர, எதுவும் சொல்லவில்லை.

அந்த சமயத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்கு ம.பொ.சி. சென்றார். அங்கு, பழனி பெரியசாமியின் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது, எம்.ஜி.ஆரிடமிருந்து தொலைபேசி அழைப்பு. போனை எடுத்த பழனி பெரியசாமியிடம் பேசிவிட்டு ம.பொ.சியிடம் கொடுக்கச் சொன்னார் எம்.ஜி.ஆர்.


ம.பொ.சியிடம் நலம் விசாரித்து விட்டு, அமெரிக்காவை நன்கு சுற்றிப் பார்க்கும் படியும் 'ஷாப்பிங்' சென்று தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ளும்படியும் இதுகுறித்து பழனி பெரியசாமியிடம் சொல்லியிருப்பதாகவும் எம்.ஜி.ஆர். கூறினார்.

பின்னர், அமெரிக்காவில் இருந்து ம.பொ.சி. திரும்பிய பின் ஒருநாள், கோட்டையில் இருந்து வீட்டுக்கு காரில் புறப்பட்ட எம்.ஜி.ஆர், திடீரென ம.பொ.சியின் வீட்டுக்குச் சென்றார். முதல்வரின் எதிர்பாராத வருகையால் ம.பொ.சி. மகிழ்ச்சி அடைந்தார். அவரிடம் அமெரிக்க சுற்றுப் பயணம் பற்றி விசாரித்துவிட்டு புறப்படத் தயாரானார் எம்.ஜி.ஆர்.

ம.பொ.சியும் வழியனுப்ப எழுந்து கொள்ள, அவரின் கையில் ஒரு சாவியை எம்.ஜி.ஆர். திணித்தார். புரியாமல் பார்த்த ம.பொ.சியிடம், "இது கார் சாவி. உங்களுக்கு அரசாங்கம் கார் கொடுத்திருக்கிறது. மேல்சபை தலைவராக இருந்தபோது உங்களுக்கு வழங்கப்பட்ட மாதச் சம்பளமான ரூ.15,000 தொடர்ந்து கிடைக்கும். அந்த பதவியில் இருந்த எல்லா சலுகைகளும் வசதிகளும் உங்களுக்கு தொடரும். உங்களை தமிழ் வளர்ச்சித்துறை தலைவராக நியமித்திருக்கிறேன்" என்று எம்.ஜி.ஆர் கூறினார். உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்க நின்றார் ம.பொ.சி.

சிலருக்குத்தான் சில பட்டங்கள் பொருத்தமாக அமையும். அப்படி எம்.ஜி.ஆருக்கு என்றே மிகப் பொருத்தமாக அமைந்தது, திருமுருக கிருபானந்த வாரியார் வழங்கிய பட்டமான 'பொன்மனச் செம்மல்.'

தொடரும்...


ஜி.கே.மூப்பனார் மகிழ்ச்சி பொங்க கூறுவதை எம்.ஜி.ஆர். கேட்கிறார். அருகே ஆர்.எம்.வீரப்பன், சென்னை கமலா தியேட்டர் உரிமையாளர் மறைந்த வி.என்.சிதம்பரம்.


ம.பொ.சியின் பிறந்த நாள் விழா ஒன்றில் அவரை கவுரவிக்கிறார் எம்.ஜி.ஆர்.




# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

கேள்விகளுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கை வைப்பதை, நவீன பகுத்தறிவுவாதம் மிகக்கடுமையாக எதிர்க்கின்றது. இறை நம்பிக்கை, மரபு வாழ்வியல் எல்லாம் "வெறும் நம்பிக்கைகள்" என்பது அதன் குற்றச்சாட்டு. அதே நவீனப் பகுத்தறிவு செய்துவரும் "அறிவுபூர்வமான தொழில்" ஒன்றைப் பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஊட்டச்சத்து தொழில்நுட்பம் எனும் துறை மனிதர்களின் உடல்நலத்துடன் ஆடும் விளையாட்டிற்கு அளவேயில்லை. ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னர், தைராய்டு எனும் சுரப்பியில் உருவாகும் நோய்களைப் பற்றி, நவீன மருத்துவத்துறை பேசத்தொடங்கியது. அந்தக் காலத்தில், தைராய்டு நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. நமது மக்களில் பெரும்பகுதியினருக்கு தைராய்டு எனும் சொல்லே தெரியாது. "அயோடின் சத்துக் குறைபாட்டால், தைராய்டு நோய்கள் வரும் வாய்ப்பு உள்ளது. ஆகவே உணவுக்கான உப்பில் அயோடின் கலக்க வேண்டும்." என்ற அறிவிப்பு சுகாதார அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.

'இனி உணவுக்கான உப்பு, அயோடின் கலக்கப்பட்டதாக மட்டுமே இருக்கவேண்டும்' என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏறத்தாழ 20 ஆண்டுகளாக, அயோடின் கலக்கப்பட்ட "அறிவுபூர்வமான" உப்பைத் தான் நாம் சாப்பிடுகின்றோம். உங்கள் குடும்பத்திலும் சுற்றத்திலும் தைராய்டு மாத்திரை விழுங்குவோரின் பெயர்களை ஒரு தாளில் எழுதுங்கள். எவ்வளவு பெரிய பட்டியலாக இருக்கிறது!

இதுமட்டுமா! தைராய்டு அறுவைசிகிச்சை செய்து கொண்டோர், "தைராய்டு புற்று நோயால் இறந்துபோனோர், தைராய்டு சீர்கேடுகளால் உடல்பருமனுக்கு ஆளாகித் துன்புறுவோர், தைராய்டு மாத்திரையில் தொடங்கி கருப்பைச் சீர்கேடுகளுக்கும் சேர்த்து மாத்திரை விழுங்குவோரின் பெயர்களை, தனிப்பட்டியலில் எழுதுங்கள். இவ்வாறான பட்டியல்களை அயோடின் உப்புக்களின் வருகைக்கு முன்னர் உங்களால் எழுதியிருக்க முடியாது.

உப்புத்தொழில் செய்வோரை, சங்க காலத்தில் "உமணர்" என அழைத்தனர். வலுவான எருதுகள் பூட்டப்பட்ட வண்டியில் உப்பு மூட்டைகளை அடுக்கிவைத்து உமணர் குழு பயணம் செய்த காட்சிகள், சங்க இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. எருதுகள் பூட்டிய அந்த வண்டிகளை, பெண்கள் ஓட்டினர். ஆண்கள் வண்டியின் இரு புறங்களிலும் காவல் காத்தனர். என்ற விவரணை அந்தப் பாடல்களில் காணக் கிடைக்கின்றது. அதே மரபுத்தொடர்ச்சியில் பிறந்த பெண்கள்தான் இப்போது தைராய்டு நோய் காரணமாக மருத்துவமனைகளில் மூச்சிரைக்க அமர்ந்திருக்கின்றனர்.

"அயோடின் பற்றாக்குறையை நீக்குவதற்காக உப்பில் அதைச் சேர்த்தீர்களே, அதன் பின்னர் ஏன் தைராய்டு நோயாளிகளின் எண்ணிக்கை இவ்வளவு மோசமாகப் பெருகியுள்ளது?" என நாம் கேட்க வேண்டும். ஆனால், இதுவரை அந்தக் கேள்வியை எவரும் எழுப்பவில்லை.

விற்றமின் (vitamin) எனும் மற்றொரு சத்துப்பொருளை, பல்வேறு விளம்பரங்களில் பார்த்திருப்பீர்கள். விற்றமின் டி (vitamin-D) எனும் அதன் ஒரு வகையைப் பற்றிய "அறிவுபூர்வமான" உடல்நல விளைவுகளைக் காண்போம்.

இந்த விற்றமின் டி, மனித உடலில் சுண்ணாம்புச் சத்துக்களை சேர்ப்பதற்கான வளர்சிதை மாற்றங்களை உருவாக்குகின்றது. விற்றமின் டி குறைந்தால், எலும்பு மற்றும் பற்கள் தொடர்பான நோய்கள் உருவாகும். "ஆஸ்டியோமலாசியா" (osteomalacia) என்பது, விற்றமின் டி குறைந்தால் உருவாகும் நோய்த் தொகுப்பு. ஆஸ்டியோமலாசியா எனும் சொல்லின் பின்னால் இருக்கும் நோய்களின் பட்டியல் மிகப்பெரியது. "எலும்புகள் உறுதியிழத்தல், எலும்புகளில் வலி, மூட்டுக்களில் வலி, முதுகு வலி, தசைகள் தளர்ச்சி அடைதல் ஆகியவை இவற்றில் சில நோய்கள். பெரும்பாலான உணவு நிறுவனங்கள் தம் உணவில் விற்றமின் சத்துக்களைச் சேர்த்துத்தான் விற்பனை செய்கின்றன. சுருக்கமாக, உங்கள் அன்றாட உணவுப்பட்டியலில் பெரும்பாலானவை விற்றமின் சேர்க்கப்பட்டவைதான்.

மீண்டும் அதே தாளில் எழுதத் தொடங்குங்கள். ஆண்டுக்கணக்கில் மூட்டுவலி, பற்சிதைவு, முதுகுவலி, ஆகியவற்றுக்காக மருத்துவமனையை நாடும் மனிதர்கள் உங்களைச் சுற்றிலும் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதை பதிவு செய்யுங்கள். "வீடுகளில் தயாரிக்கப்பட்ட உணவுகளை மட்டுமே கூடுதலாக உட்கொண்ட காலத்தில், இவ்வளவு எலும்பு நோயாளிகள் இருந்தனரா?" எனச் சிந்தியுங்கள். நோயாளிகளின் பட்டியல் எழுதும் அந்தத் தாளைச் சற்றுப் பெரிதாக எடுத்துக் கொள்ளுங்கள். விற்றமின் டி இன் சாதனைகள் இன்னும் உள்ளன.

உடலில் விற்றமின் டி அதிகரித்தால் உருவாகும் நோய்கள்: "தீராத தலைவலி, பசியின்மை, செரிமானமின்மை, பேதியாகுதல், சிறுநீரகங்களில் சுண்ணாம்புக்கற்கள் உருவாகுதல், இரத்தநாளங்களில் சுண்ணாம்புக் கட்டிகள் அடைத்தல், இவற்றை எல்லாம் விட முக்கியமாக, இரத்தத்தில் சுண்ணாம்புக் கட்டிகள் அடைத்து மாரடைப்பு உருவாகுதல்"

அதாவது, சிறுநீரகமும் இதயமும் செயலிழந்து மரணம் நேரும் சூழலைக் கூட மிகையான விற்றமின் டி எனும் ஊட்டச் சத்து உருவாக்கும். அந்தத் தாளில், மேலும் பலருடைய பெயர்களை இப்போது உங்களால் எழுதமுடிகிறது அல்லவா!

உணவுப் பொருட்களில் சத்துக்களைச் சேர்த்தல் எனும் தொழில்நுட்பம் உருவாக்கியுள்ள நோய்களை, மனிதகுலத்தால் சமாளிக்கவே இயலாது. ஏனெனில், இந்தச் சத்துக்கள் யாவும் எப்போதோ ஒரு முறையல்ல, நமது உடலுக்குள் அன்றாடம் இறங்கியவை.

விற்றமின் டி எனும் சத்து, வெயில் வழியாக ஒவ்வொரு கணமும் இந்தப் பூமியின் மீது இறங்குகிறது. வெயில், நம் மீது விழுகிறது புல் மீது விழுகிறது ஆடுகள் மீது, பயிர்கள் மீது, கோழிகள் மீது எல்லாம் விழுந்து கொண்டேயுள்ளது. இவை அனைத்தினுள்ளும் வெயில் தனது ஊட்டச்சத்துக்களை எல்லாம் இறக்கிக் கொண்டுள்ளது.

மேலை நாடுகளில் வெயிலின் அளவு குறைவு என்பதால், அவர்களுடைய தோலில் விற்றமின் டி யின் அளவு மிகையாக இருக்கின்றது. அதிகம் வெயில் அடிக்காத சூழல் அங்கே இருப்பதால், கிடைக்கும் வெயிலில் இருந்து விற்றமின் டி யை அவர்களது தோல் சேமித்து வைக்கிறது. நம் நாட்டில் மிகுதியான வெயில் இறங்குகிறது. ஆகவே

**இந்தியாவில் உள்ள சுமார் 70 சதவிகிதம் பேருக்கு, விற்றமின் டி சத்து குறைவாக உள்ளது என, ஓர் ஆய்வறிக்கை இப்போது வெளியாகியுள்ளது. இதுதான் இங்கே உள்ள மருத்துவத்துறைக்கும் உணவுத்துறைக்கும் காட்டப்படும் சமிக்ஞை.**

நம்முடைய தோல் விற்றமின் டி யை மிகக் குறைவாக சேமிக்கின்றது.

"மேற்கத்தைய நாடுகளில் எவராவது கூச்சலிட்டால், அதுதான் உண்மையான இசை. அங்கே எவராவது கிறுக்கினால், அது தான் சரியான ஓவியம். வெள்ளைக்காரர்கள் உளறினால் அதுதான் மந்திரம். மிக முக்கியமாக ஆங்கிலத்தில் ஏதேனும் எழுதப்பட்டால், அதுதான் அறிவியல்" என்பது நவீனப் பகுத்தறிவின் அடிப்படைக்குணம்.

இந்தியாவில் உள்ள சுமார் 70 சதவிகிதம் பேருக்கு, விற்றமின் டி சத்து குறைவாக உள்ளது என, ஓர் ஆய்வறிக்கை இப்போது வெளியாகியுள்ளது. இதுதான் இங்கே உள்ள மருத்துவத்துறைக்கும் உணவுத்துறைக்கும் காட்டப்படும் சமிக்ஞை. இதை மருத்துவத் துறையும் உணவுத்துறையும் புரிந்து கொண்டு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...




# குழந்தைப் போராளி

அப்பாவின் நண்பரின் வீட்டில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்த நான், ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்தேன். எனது மூத்த சகோதரி ஹெலன் ஒரு நீல நிறக் காரிலிருந்து இறங்கினாள். ஹெலனா அது? அவளை என்னால் அடையாளமே காண முடியவில்லை. அவளது சப்பாத்து அழகாகவும் புது மாதிரியாகவும் இருந்தது. தலை முடியை நீளமாக வளரவிட்டிருந்தாள். நான் துள்ளிக் குதித்துக் கொண்டு அவளிடம் ஓடினேன். காருக்குள் ஒரு புதிய மனிதன் அமர்ந்திருந்தான். வழமைபோல அப்பாவும் வாசலில் வந்து நின்றிருந்தார். ஹெலன் தன்னுடன் வந்தவனைப் பற்றிச் சொல்வதற்கு முன்னமே

"காரில் இருப்பவர் யார்?" என அப்பா கேட்டார்.

"அவரைத்தான் நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்" எனக் ஹெலன் சொன்னாள்.

"அவன் என்ன மொழி பேசுகிறவன்?" அப்பா அறிய விரும்பினார்.

"அவர் கிழக்கில் இருப்பவர்"

"மேற்கில், இங்கே எனது வீட்டில் அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"நான் அவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்பியதால் தான் அவர் இங்கு வந்திருக்கிறார்."

அப்பா உடனடியாகவே "நீ அவனைத் திருமணம் செய்வதில் எனக்குச் சம்மதமில்லை" என்றார்.

"அவர் என்னை நன்றாகவே நடத்துகிறார், அவரைத் திருமணம் செய்து கொண்டால் எனது வாழ்க்கை மகிழ்சியாக அமையும்" ஹெலன் வாதம் செய்தாள்.

"நீ எனது மகளாகத் தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்றால் அவனைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது!" அப்பா பயமுறுத்தினார். எனது சகோதரி அழத்தொடங்கினாள். காருக்குப் போவதற்குத் திரும்பிய அவள் ஏதோவொரு பெரும் சுமையைச் சுமப்பவள் போலத் துவண்டிருந்தாள். காரின் கதவத் திறந்துகொண்டு திரும்பி அப்பாவைப் பார்த்து "குறைந்தபட்சம் இவருக்கு முகமனாவது கூறமாடீர்களா?" என அப்பாவைக் கேட்க "இல்லை" என உறுமிய அப்பா "ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்! அவனை நீ திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் என் வாசற்படி மிதிக்கக் கூடாது" என்றார். நான் அப்பாவைப் பார்த்தேன். அவரோ அரவமேயில்லாது ஒரு பாம்பைப் போல வீட்டினுள் நுழைந்தார்.

காரில் இருந்தவனை அனுப்பி விட்டு மெதுவாக நடந்து வீட்டிற்குள் வந்த ஹெலன் அழுது கொண்டேயிருந்தாள். அவளின் நடத்தையை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. என்னுள் துக்கமும் கோபமும் மாறி மாறி வந்து போயின. "அப்பா கோபக்காரர் என்பது உனக்கு நன்றாகவே தெரியும். வந்த மனிதனுடன் சந்தோசமாக இருந்தாயென்று நீ சொல்கிறாய், பின்பேன் என்னையும் கூட்டிக்கொண்டு அவனுடன் நீ போகவில்லை?" அவள் அமைதியாக எனக்குப் புரிய வைக்க முயன்றாள்.

"ஒரு பெண்ணிற்குத் திரும்பிச் செல்ல ஒரு வீடில்லாவிடின் அவள் தனது கணவனிடம் எந்த மதிப்பையும் பெறமாட்டாள்"

"இனி என்ன செய்யப் போகிறாய்?"

"என்ன செய்வதென்றே தெரியவில்லை, எனக்குப் போக் இடமில்லை.... "

எங்களுடனேயே இருக்குமாறு நான் அவளைக் கேட்டுக் கொண்டேன். சிற்றன்னையின் வெறுப்புக் கொப்பளிக்கும் அதிகாரத்திற்கு அவள் தன்னை அர்பணித்துக் கொள்ள வேண்டிய பரிதாப நிலை. அன்றிரவு தூங்குவதற்கு முன்னதாகப் பற்றீசியாவைப் பற்றிச் சொல்லி அவர் எங்களுக்கு எங்களது உண்மையான அம்மாவைக் கண்டு பிடிக்கச் சிலவேளை உதவலாமெனச் சொன்னேன். அடுத்த நாள் காலையில் ஹெலன் தலை நிமிர்ந்து துணிவாக நின்றாள். "இனி ஒரு போதும் நான் இங்கு திரும்பிவரப்போவதில்லை" எனப் போகும் போது சொல்லிவிட்டுப் போனாள். அவள் எங்கள் அம்மாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென என் உள்ளத்திலிருந்து வாழ்த்தினேன்.

அப்பா குறை கூறத்தொடங்கினார். "எல்லோரும் வீட்டைவிட்டுப் போவதும் பிரச்சனைகள் வந்ததும் மீண்டும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பி வருவதும் வழமையாகிவிட்டது." இன்றும் அந்தச் சொற்கள் ஏதோ நேற்றுச் சொன்னது போல எனக்கு ஞாபகமிருக்கிறது. அவரது மடைமைக்கும் குழந்தைகளை விளங்கிக் கொள்ள முடியாத தன்மைக்கும் எதிராக என்னால் தலையை ஆட்டி அதிருப்தியைத் தெரிவிக்கத்தான் முடிந்தது அதுவும் அவரின் முதுக்குப் பின்னால். **தொடரும்...**

---

செயலாற்றுகின்றன. "பாலில் விற்றமின் டி கலப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்" என்ற குரல்கள் இப்போது ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

வெயிலின் மூலம் அன்றாடம் கிடைக்கும் ஒரு சத்தை, உணவில் கலந்தால் உடலால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. ஏற்கெனவே, தேவைக்கு அதிகமான சத்துக்களை உணவில் கலந்து தான் இப்போதைய சமூகம் மாரடைப்பிற்கும் சிறுநீரக செயலிழப்பிற்கும் இலக்காகிக் கொண்டுள்ளது.

தேவைக்கு அதிகமான சத்துக்களை நம்மிடம் வழங்கிவிட்டு நம்மை நோயாளிகள் ஆக்குகின்றனர். பின்னர் அந்த நோய்களுக்கான மருந்துகளையும் இதர சிகிச்சைகளையும் முன்வைத்து நம் உடல்நலனையும் மனநிம்மதியையும் பொருளாதாரத்தையும் பறித்துக்கொள்கிறார்கள்.

எலும்பு நோய்களுக்கான சிறப்பு மருத்துவமனைகளின் எண்ணிக்கையைப் பாருங்கள். சிறுநீரக சிறப்பு மருத்துவமனைகள், இதய நோய்ச் சிறப்பு மருத்துவமனைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை உயர்வு அச்சுறுத்துவதாக இல்லையா உங்களுக்கு? ஏன் நாம் இவ்வளவு மோசமாக நோயுற்றோம்? என்ற கேள்வியை எழுப்புங்கள். மரபுவழிப்பட்ட நம் மெய்யறிவு, "எதையும் கண்மூடித்தனமாக நம்மவேண்டாம்" என்கிறது. 'மெய்ப்பொருள் காண்பதே அறிவ' என்ற அறிவுரையை ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உரைத்தவர் திருவள்ளுவர்.

நவீன உணவுத்துறையினர், ஊட்டச் சத்து தொடர்பான அறிக்கைகளை வழங்குகிறார்கள். மருத்துவத் துறையினர், அந்தச் சத்துக்களால் உருவாகும் நோய்களை வைத்துக் கொழிக்கின்றனர். இது நவீன அறிவியலின் கூட்டுச் செயல்திட்டம்.

நாம் எவற்றைச் சாப்பிட வேண்டும், எவ்வளவு சாப்பிட வேண்டும் என்ற கணக்குகளை எல்லாம் அவர்கள் தான் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். அவற்றை எல்லாம் சாப்பிட்டால் நமக்கு என்னென்ன நோய்கள் வரும் என்பதை அவர்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள்.

நமது உணவுவகைகளின் எண்ணிக்கை இப்போது சுருங்கிவிட்டது. ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாடம் பயன்படுத்தும் காய்கள், தானியங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

வைகுண்ட ஏகாதசிக்கு மறுநாள் சமைக்கப்படும் மரபு உணவில் ஏறத்தாழ 32 காய்கள் சேர்த்து சமைக்கப்படுவதை, இரண்டு ஆண்டுகளுக்குமுன்னர் கண்டேன். நம்மிடம் ஏறத்தாழ 40 வகையிலான கீரைகள் இப்போதும் இருக்கின்றன. இவை போக, ஒவ்வொரு கிராமத்துக்குமான காட்டுக்கீரைகளின் எண்ணிக்கையோ மிக அதிகம். நமது பொங்கல் சமையலில் ஏறத்தாழ 10 வகையான கிழங்குகள் பயன்படுத்தப்படுகின்றன. காய்களில் ஒவ்வொரு வகையிலும் எண்ணற்ற உட்பிரிவுகள் உள்ளன. கத்திரிக்காயில் மட்டும் ஏறத்தாழ 20 வகைகள் உள்ளன. இவற்றை எல்லாம் உணவாக்கினால் கிடைக்காத சத்துக்களை எந்த நிறுவனமும் தர இயலாது.

உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் உணவின் வழியே மட்டும் கிடைப்பதில்லை. வானில் இருந்து இறங்கும் ஆற்றல் வகைகள், எல்லா உயிர்களையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. விலங்கினங்களின் கொம்புகள் இவ்வாறான ஆற்றல் வாங்கிகள் தான். அதாவது, கொம்புகள் வழியாக வான் ஆற்றல் விலங்குகளுக்குள் இறங்குகிறது.

உம்பளச்சேரி காளைக் கன்றுகளின் கொம்புகளைத் தீய்க்கும் வழக்கம், நம்மரபில் உள்ளது. இயல்பாக, மிக அதிகமான ஆற்றல் கொண்ட உம்பளச்சேரி காளைகளின் கொம்புகளை வளரவிட்டால், கொம்புகள் வழியாக மேலும் ஆற்றல் சேகரமாகும் என்பதும், எளிதில் முட்டித் தள்ளும் என்பதும் காரணங்கள். இந்த முறையில் வேர்களை அழிப்பது இல்லை. ஆற்றலானது, குறைந்த அளவு உள்ள கொம்புகள் வழியாக மாட்டின் உடலுக்குள் செல்ல வேண்டும் அல்லவா! அதற்காக, மிகச் சிறிய அளவில் அடிக்கொம்புகளை விட்டுவைப்பார்கள்.

இறந்த மாடுகளின் கொம்புகளை வெட்டி அவற்றின் உள்ளே இயற்கை எருவை இட்டு நிலத்தில் புதைத்து மிக வீரியமான எருவைத்தயாரிக்கும் தொழில்நுட்பமும் நமது மரபில் உள்ளது. 'வானில் இருந்து இறங்கும் ஆற்றல் வகைகள் உடலுக்குள் சேகரமாகின்றன' என்ற உண்மையைதெரிந்துகொண்டதால் நம் மரபு தேர்ந்தெடுத்த அறிவியல் பூர்வமான தொழில்நுட்பங்கள் இவை.

நவீன கால்நடைத்துறையினர் அயல்வகை மாட்டுக் கன்றுகளின் கொம்புகளை அழித்து விட்டு, கொம்புகளின் வேரைத் தோண்டி எடுத்துவிடுவார்கள். பின்னர், நிறுவனங்களின் தீவனங்களை அந்த மாடுகளுக்கு வாங்கித் தரும்படி பரிந்துரைப்பார்கள். கொம்புகள் அழிக்கப்பட்ட பின்னர் அந்த மாடுகளுக்கு நிறுவனங்கள் வழங்கும் தீவனங்கள் தான் சத்துணவு. அந்தச் சத்துணவு மூட்டைகளில் விற்றமின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும். இயற்கையாகக் கிடைக்கும் ஆற்றலைத் தடுத்துவிட்டு, நிறுவனங்களைச் சார்ந்து வாழும் நிலைக்கு மாடுகள் தள்ளப்பட்டுகின்றன.

நம்மனங்களில் இப்போது திமிலும், கொம்புகளும் உள்ளன. நிச்சயமாக நாம் நவீனத்தின் அடிமைகள் அல்லர். நம்மால் இயற்கையின் மடியில் பால் அருந்தவும் முடியும். கதிரவனின் ஒளியில் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சவும் முடியும்!

# தமிழ் எண் கணித பலன்கள்

ஜோதிடமணி பண்டிட். சேதுராமன்

**எண் கணித பலன்கள் அறியும் முன்...**

ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோள்களின் ஆதிக்கமுடையவை. இந்த கோள்களின் செயல்பாட்டிற்கேற்ப அந்த எண்களுக்கு உரியவர்களின் வாழ்க்கையில் பொதுவான குணங்களும், நிகழ்வுகளும் அமைகின்றன என்கிறது எண் கணித சாஸ்திரம்.

ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட எண்கள் என்று எப்படி தேர்வு செய்யப்படுகிறது? ஒவ்வொருவர் பிறந்த தினத்தின் கூட்டுத்தொகையைக் கொண்டு அதற்கான எண்கள் கண்டறியப்படுகிறது.

### ஆங்கில எழுத்துக்களுக்கான எண்கள்

A,I,J,Q,Y-1
B,K,R,-2
C,G,L,S-3
D,M,T-4
E,H,N,X-5
U,V,W-6
O, Z - 7

### தமிழ் நியுமராலஜி

தமிழ் நியுமராலஜி என்பது தமிழில் எழுதப்பட்ட ஆங்கில எண்கணித முறை அல்ல. முழுக்க முழுக்க தமிழ் முறைப்படி எழுதப்பட்ட எண்கணிதம் ஆகும். உலகிலேயே முதல் முறையாக ஆங்கிலம் அல்லாத பிற மொழியில் எழுதப்பட்ட எண்கணித முறை தமிழ் எண்கணித முறை ஆகும். ஆங்கில எண்கணித முறை தவறானது என்று இங்கே நிறுவப்பட்டுள்ளது. தமிழ் எண்கணித முறை எவ்வாறு சரி என்பதும் இங்கே விளக்கப்பட்டுள்ளது. ஆங்கில எண் கணிதம் முறையினை இதுநாள் வரையிலும் பின்பற்றி வந்த தமிழ் மக்கள் அனைவரும் அந்த தவறை மேலும் செய்யாமல் நமது பண்பாட்டிற்கு ஏற்ற தமிழ் எண்கணிதத்தினை பின்பற்றுவதே அறிவுடைமை ஆகும்.

### ஆங்கில எண்கணிதமுறையின் தவறுகள்

இம்முறையில் ஆங்கில எழுத்துக்களுக்கு எவ்வித அடிப்படையும் இன்றி மதிப்பெண்களை வழங்கி உள்ளனர். ஆங்கில எழுத்துக்களுக்கு மேல்நாட்டு அறிஞர்கள் பலரும் பலவிதமான மதிப்பெண்களை வழங்கி உள்ளனர். நாம் பயன்படுத்துகின்ற ஆங்கில எண்கணித முறையான சீரோ எண்கணித முறையிலும் கூட மதிப்பெண்கள் எவ்வித அடிப்படையும் இன்றி எதேச்சையாக வழங்கப்பட்டு உள்ளன. சான்றாக 'b' க்கு மதிப்பு 2 ஆகவும் 'l' க்கு மதிப்பு 3 ஆகவும் கொடுக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு கொடுத்ததற்கு எவ்வித அடிப்படை விதிகளும் பின்பற்றப்படவில்லை. சரியான அடிப்படை இல்லாததால் இம்முறையினை போலியான முறை என்று கூறலாம்.

ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களுக்கு இம்முறையில் ஒரே மதிப்பெண் வழங்கப்பட்டு உள்ளது. சான்றாக, வெற்றியும் தோல்வியும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஆனால் இம்முறையில் இந்த இரண்டு சொற்களுக்கும் ஒரே மதிப்பெண் (26) வருகிறது. இது இம்முறையில் உள்ள குளறுபடியினைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஒரே இடத்தில் பிறக்கின்ற வேறு வேறு ஒலிகளுக்கு வேறு வேறு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு உள்ளன. சான்றாக 'l' உம் 'n' உம் ஒரே இடத்தில் பிறப்பவை. இவற்றுக்கு வேறுவேறு மதிப்பெண்கள் வழங்கி உள்ளனர். இது தவறாகும். ஏனென்றால் ஒரு உண்மையான தாய் தனக்குப் பிறந்த எல்லா குழந்தைகளையும் ஒன்றாகவே மதிப்பாள். அடிப்படை மட்டுமின்றி வழங்கிய முறையிலும் தவறு உள்ளது என்பதற்கு இது சான்றாகும்.

ஆங்கில எண்கணித முறையில் ஒவ்வொரு மதிப்பெண்ணுக்கும் ஒரு ஆட்சிக்கோள் இருக்கும். சான்றாக எண் 1 க்கு சூரியன், 2 க்கு சந்திரன், 6 க்கு சுக்கிரன். ஆனால் கோளுக்கும் எண்ணுக்கும் உள்ள தொடர்பு வரையறுக்கப்படவில்லை. அதாவது எவ்விதமான அடிப்படையும் இன்றி கோள்களுக்கு எண்கள் வழங்கப்பட்டு உள்ளன. கோள்களின் ஆங்கிலப் பெயரின் அடிப்படையிலாவது எண்களை வழங்கி இருக்கலாம். சான்றாக சனி கிரகத்தின் ஆங்கிலப் பெயரான 'SATURN' என்பதில் உள்ள எழுத்துக்களின் மதிப்பெண்களைக் கூட்டினால் 21 அதாவது 3 வரும். எனவே சனி கோளுக்கு எண் 3 ஐ வழங்கி இருக்கலாம். இவ்வாறே ஏனைய கோள்களுக்கும் வழங்கி இருக்கலாம். ஆனால் அவ்வாறு வழங்கப்படவில்லை. எவ்வித அடிப்படையும் இன்றி கோள்களுக்கு எண்கள் வழங்கப்படிருப்பது ஆங்கில எண்கணித முறையின் 'கண்மூடித் தனமான' போக்கை காட்டுகிறது.

இம்முறையில் பெயரின் முதல் எழுத்தாக வரும் ஆங்கில எழுத்தின் வடிவத்தின் அடிப்படையில் அந்த எழுத்தை தனது பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களுடைய குணநலன்கள் இன்னவாறு இருக்கும் என்றும் கூறியுள்ளனர். சான்றாக 'A' என்ற எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்களின் குணங்கள் இவ்வாறு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும். ஏனென்றால் ஆங்கிலத்தில் ஒரு ஒலிக்கு இரண்டு வகையான வரிவடிவங்கள் உள்ளன. சான்றாக 'ஏ' என்ற ஒலிக்கு 'A', 'a' என்று இரண்டு வரிவடிவங்கள் உண்டு. இவற்றில் ஒரு வடிவத்தின் அடிப்படையில் பலன்களைக் கூறினால் தவறாகும். இரண்டு வடிவங்களின் அடிப்படையில் இருவிதமான பலன்களைக் கூறுவது அறிவின்மை ஆகும். எப்படிப் பார்த்தாலும் இரண்டு வரிவடிவங்களைக் கொண்ட ஆங்கில மொழியில் வரிவடிவ அடிப்படையில் ஒருவரது குணநலன்களைக் கூறுவது பொருந்தா ஒன்றாகும்.

### நடைமுறைச் சிக்கல்கள்

மேற்கண்ட தவறுகள் மட்டுமின்றி, தமிழர்கள் இம்முறையினை பின்பற்றுவதில் கீழ்க்காணும் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. தமிழ் எழுத்துக்கள் பலவற்றிற்கு சரியான ஆங்கில எழுத்துக்கள் இல்லை. சான்று: த்,ச்,ற்,ங்,ஞ்,ண்,ந்,ழ்,ள் ஆகியவற்றுக்கு சரியான ஒற்றை ஆங்கில எழுத்துக்கள் இல்லை. இந்த சிக்கல் இருப்பதால், தமிழ்ப் பெயர்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதி மதிப்பெண் வழங்குவதில் தவறு நேர்கிறது. சான்றாக, முத்துக்கமலம் என்ற தமிழ்ப் பெயருக்கு மதிப்பெண் காணலாம். முத்துக்கமலம் என்ற பெயரை ஆங்கிலத்தில் எழுதும் போது 'muthukamalam' என்று எழுதுகின்றனர். இது தவறாகும். ஏனென்றால் இந்த ஆங்கிலப் பெயரின் உண்மையான ஒலிப்பு 'முட்ஹுகமலம்' ஆகும். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணருங்கள். ஒலிப்பு தவறாகும் போது ஒலிகளின் மதிப்பும் தவறாகி பெயருக்கான மதிப்பெண் முழுக்க முழுக்க தவறாகி விடுகிறது. இவ்வளவு சிக்கல்கள் நிறைந்த போலியான ஒரு எண்கணித முறையினை நாம் இன்னமும் ஏன் பின்பற்ற வேண்டும்?. வாருங்கள், நமது பண்பாட்டிற்கு ஏற்ற தமிழ் எண்கணித முறையினைப் பற்றி காணலாம்.

### தமிழ் எண்கணித முறை

இந்த முறைப்படி, தமிழ் ஒலிகளுக்கு கீழ்க்காணும் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு உள்ளன.

அ,ஆ,இ,ஈ,உ,ஊ3
எ,ஏ,ஒ,ஓ7
ஐ5
க்,ர்,ங்,ஹ்,ஃ1
ச்,ஞ்,ய்,ஸ்,ஷ்,ஜ்7
ட்,ண்,ள்4
த்,ழ்,ந்8
ப்,வ்,ம்,ஸ்ப்6
ற்,ல்,ன்2

(* இரண்டு எழுத்துக்களால் எழுதப்படுவதால் 'ஔ' என்னும் எழுத்துக்கு மதிப்பெண் இல்லை. இதனை 'அவ்' என்று எழுதி மதிப்பிடலாம்)

மு த் து க் க ம ல ம் = ம் + உ + த் + த் + உ + க் + க் + அ + ம் + அ + ல் + அ + ம் =6+3+8+8+3+1+1+3+6+3+2+3+6=53=8

முத்துக்கமலம் தமிழ் வழியிலான பெயர் எண்=8

மேற்காணும் மதிப்பெண்களின் அடிப்படையில் வாரக்கோள்களின் தமிழ்ப் பெயர்களுக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பெண்கள் அமையும்.

ஞாயிறு-ஞ்+ ஆ + ய் + இ + ற் + உ-7 + 3 + 7 + 3 + 2 + 3 = 25 = 7

திங்கள்- த் + இ + ங் + க் + அ + ள் - 8 + 3 + 1 + 1 + 3 + 4 = 20 = 2

செவ்வாய்- ச் + எ + வ் + வ் + ஆ + ய் - 7 + 7 + 6 + 6 + 3 + 7 = 36 = 9

அறிவன் (புதனின் தமிழ்ப் பெயர்) அ + ற் + இ + வ் + அ + ன் - 3 + 2 + 3 + 6 + 3 + 2 = 19 = 1

அந்தணன் (வியாழனின் தமிழ்ப் பெயர்) அ + ந் + த் + அ + ண் + அ + ன் - 3 + 8 + 8 + 3 + 4 + 3 + 2 = 31 = 4

வெள்ளி - வ் + எ + ள் + ள் + இ - 6 + 7 + 4 + 4 + 3 = 24 = 6


காரி (சனியின் தமிழ்ப் பெயர்) - க் + ஆ + ர் + இ - 1 + 3 + 1 + 3 = 8

ராகுவும் கேதுவும் நிழல் கோள்கள் என்பதால் அவற்றுக்கு வேறுமுறையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. இனி தமிழ் முறைப்படி,

எண் 1க்கு ஆட்சிக்கோள் 'புதன்' என்றும்
எண் 2க்கு ஆட்சிக்கோள் 'சந்திரன்' என்றும்
எண் 3க்கு ஆட்சிக்கோள் 'கேது' என்றும்
எண் 4க்கு ஆட்சிக்கோள் 'குரு' என்றும்
எண் 5க்கு ஆட்சிக்கோள் 'ராகு' என்றும்
எண் 6க்கு ஆட்சிக்கோள் 'சுக்கிரன்' என்று
எண் 7க்கு ஆட்சிக்கோள் 'சூரியன்' என்றும்
எண் 8க்கு ஆட்சிக்கோள் 'சனி' என்றும்
எண் 9 க்கு ஆட்சிக்கோள் 'அங்காரகன்' என்றும் அறிக.

### அடிப்படைகள்

தமிழ் எண்கணித முறையானது கீழ்க்காண்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



1. தமிழ் ஒலிகளின் பிறப்பு முறைப்படி அவற்றுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு உள்ளன.

2. ஒரே இடத்தில் பிறக்கும் வல்லின, மெல்லின ஒலிகளுக்கு ஒரே மதிப்பெண் வழங்கப்பட்டு உள்ளது. சான்று: (க்-ங்),(ச்-ஞ்) முதலானவை.

3. இடையின ஒலிகளுக்கும் ஏவல் வினைகளில் அவற்றின் மாற்றாக வரும் வல்லின ஒலிகளுக்கும் ஒரே மதிப்பெண் வழங்கப்பட்டு உள்ளது. சான்று: (வ்-ப்), (ழ்-த்), (ய்-ச்) முதலானவை.

4. தமிழரின் காலமுறையான நாழிகைக் கணக்கினை இது அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

### ஆதாரங்கள்

தமிழ் எண்கணித முறையானது கீழ்க்காண்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டுள்ளது.

1. விண்வெளியின் பால்வீதி மண்டலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் கோள்களின் இருப்பு நிலையினை இது முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

2. கோள்களின் பண்பிற்கும் எண்களுக்குமான தொடர்பினை இது துணை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

(தொடரும்)



# கல்குடா மரணங்கள் சூனியம்தான் காரணமா?

✒ குகதர்சன்

கடந்த மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை. மட்டக்களப்பின் கல்குடா பிரதேசம் பெரும் சோகத்தை சந்தித்தது. ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரின் மரணமும், அதனை தொடர்ந்து ஊரில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையும் அந்த பிரதேசத்தையே உலுக்கிவிட்டுள்ளது.

கடலில் குளிக்கச் சென்ற சகோதரர்கள் இருவர் மரணமாகியதுடன், அவர்களின் பெற்றோர் தூக்கிட்டு தற்கொலை செய்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவதினத்தன்று மாலை. கடலில் குளிக்கச் சென்ற இளைஞர்கள் சிலர் கடலில் மூழ்கிவிட்டார்கள் என்ற செய்தி காட்டுத்தீயாக பரவியது. கல்குடாவே கதிகலங்கியது. மூழ்கியது யாரென்பது தெரியாத நிலையில் தமது பிள்ளைகள், சகோதரர்கள்தான் மூழ்கியிருப்பார்களோ என்ற சந்தேகத்தில் சம்பவம் நடந்த கல்குடா கடற்படை முகாமிற்கு அருகிலுள் கடற்கரைக்கு கிராமமே பதைபதைப்புடன் ஓடிச்சென்றது.

உடனடியாக செயற்பட்ட பிரதேச மீனவர்கள் மூழ்கியவர்களை தேட ஆரம்பித்தார்கள். கடற்படை சுழியோடிகளும் இணைந்து கொண்டனர். உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ரஜிதன் (16), டிலக்ஸன் (16) இருவரையும் மீட்டெடுத்தனர். 'உடனடியாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டனர். இவர்கள் கல்குமா நாமகள் வித்தியாலய மாணவர்கள்.

சகோதரர்களான சண்முகம் சதீஸ்குமார் (21), சண்முகம் சுரேஸ்குமார் (18) என்பவர்களே காணாமல் போயிருந்தனர். தொடர்ந்த தேடுதலில் மறுநாள் (19) இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

வைத்தியசாலையிலிருந்து திரும்பிய டிலக்ஸன் இந்த சம்பவம் பற்றி விபரிக்கையில் 'காலம்;சென்ற சதீஸ்குமார் பட்டியடிச்சேனை கல்குடாவிலிலுள்ள சிகைஅலங்கரிப்பு நிலையத்தில் வேலை செய்கிறார். அன்று வீட்டிற்கு வந்து, கதைப்பதற்காக எம்மை சிகைஅலங்கரிப்பு நிலையத்திற்கு அழைத்து சென்றார்.

வழக்கமாக இந்த கடையில் நண்பர்கள் சேர்ந்து கதைப்பது வழக்கம். கதைத்துக்கொண்டிருந்தபோது, சதீஸ் குமாரின் மனைவிக்கு வீட்டில் மின்சாரம் தாக்கியதாக தொலைபேசி அழைப்பு வந்தது. மனைவி கர்ப்பவதியாக இருந்தார். என்னையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றார். அது சிறிய தாக்கம். இளநீர் வெட்டிக்கொடுத்தார். பிறகு இருவரும் கடைக்கு திரும்பி வந்தோம்.

கதைத்துக் கொண்டிருந்தபோது, கடலுக்கு செல்வோமா எனக் கேட்டார். உடனே எல்லோரும் கிளம்பினோம். இறந்த இருவருடன் இன்னும் மூவருமாக ஐந்து பேர் சென்றோம்.

கடலுக்கு போகும்போது நாவல்மரத்தடியில் எங்கள் சைக்கிள்கள் மோதி விபத்து நடந்தது. இது ஒரு எச்சரிக்கைபோல. நாங்கள் அதை கவனிக்காமல் சோடாவும், சீவல் பக்கட்டும் வாங்கிக்கொண்டு போனோம்.

கடற்கரையோரமாக இருந்து அதை சாப்பிட்டுவிட்டு குளித்தோம். நான் கரையில் நின்றேன். மற்றவர்கள் கொஞ்சம் ஆழமாக சென்றுவிட்டார்கள். சதீஸ் ஒரு பக்கமாகவும், மற்றையவர்கள் ஒரு பக்கமாகவும் பிரிந்து நின்றார்கள்.

அப்போதுதான் விபரீதம் நிகழ்ந்தது. சதீஸ்குமார் அலையில் அடித்து செல்லப் பட்டார். தனது சகோதரன் அடித்து செல்லப் படுவதை பார்த்த சுரேஸ்குமார் காப்பாற்று வதற்காக அவரை நோக்கி சென்றுள்ளார். அவரும் அலையால் இழுத்து செல்லப்பட தொடங்கினார்.

கரையில் நின்று இவற்றை அவதானித்த நான், காப்பாற்றும்படி உரத்த குரலில் சத்தமிட தொடங்கினேன். அந்த இடத்தில் யாரும் இருக்கவில்லை. காப்பாற்ற யாரும் வரமாட்டார்கள் என்பதை தெரிந்ததும் நான் அவர்களை காப்பாற்ற முயன்றேன்.

அலையில் அடித்து செல்லப்பட்டவர்களை காப்பாற்ற முடியவில்லை. மற்றைய இருவரையும் கரைக்கு கொண்டு வந்தேன். சுரேஸை காப்பாற்ற முயன்றேன். முடியவில்லை. கையில் சிறிய கொடி இருந்திருந்தாலாவது அவர்களை காப்பாற்றியிருப்பேன்' என்றார் உடைந்த குரலில்.

பின்னர் காப்பாற்றிய இருவருடன் இணைந்து தோணியில் தேடும் முயற்சி செய்போதும், மற்ற இருவரும் சோர்வடைந்திருந்ததால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டதாகவும் கூறினார்.

அதன்பின்னரே பொலிஸ் அவசர இலக்கத்தை தொடர்பு கொண்டுள்ளனர். உடனடியாக கல்குடா பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்து தேடுதல் மேற்கொண்டுள்ளனர். பின்னர் கடற்படையினரும் தேடுதலில் இணைந்தனர்.

மறுநாள் சடலங்கள் மீட்கப்பட்ட பின்னர் கல்குடாவே சோகமயமானது. இந்த சோகத்தை மேலும் அதிகமாக்கியது உயிரிழந்த சகோதரர்களின் பெற்றோரின் தற்கொலை.

வேலுப்பிள்ளை சண்முகம் (49), சண்முகம் யோகலட்சுமி (46) ஆகியோர் மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை வீட்டு முற்றத்திலுள்ள முந்திரி மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

பிள்ளைகள் கடலில் மூழ்கிய செய்தி வெளியானதும் அன்றையதினமே கடலில் குதிக்கஇருவரும்பலமுறைமுயற்சித்துள்ளனர். எனினும், அவர்களின் மூத்த மகள் அதை கண்டு தடுத்துள்ளார். அவர்களிற்கு நிறைய ஆறுதல் வார்த்தைகள் கூறி, வீட்டில் படுக்க வைத்துள்ளார். அறையில் அவர்கள் தூங்கிய பின்னர் மகள் உறங்கியுள்ளார். அவர் உறங்கிய பின்னர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர்.

அந்த குடும்பத்தில் இப்பொழுது எஞ்சியுள்ளது மூத்தமகள் மாத்திரமே. அவர் திருமணம் முடித்து கணவன், இரண்டு குழந்தைகளுடன் வாழ்கிறார். அவரது மூத்த சகோதரி ஏற்கனவே அகால மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த அனர்த்தங்கள் சூனியத்தால் நிகழ்ந்தென்றும் ஊரில் பேசப்பட்டது. இதனையடுத்து இறந்தவர்களின் வீட்டு வளவில் பூசாரியொருவரை கொண்டு கழிப்பு கழிக்கப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் கூறுகிறார்கள்.

இதனைவிட, கல்குடாவில் இன்னொரு வதந்தியும் பரவுகிறது. இந்த சம்பவத்தில் பின்னர் அங்கு பேய் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக மக்கள் அச்சப்படுகின்றனர். இந்த வதந்தி அச்சம் முழு ஊரையும் பிடித்துள்ளது. இதனால் மாலை ஆறுமணிக்கே வீடுகளில் அனேகமானவர்கள் தஞ்சமடைந்து விடுகிறார்கள்.

மொத்தத்தில், மனதை கனக்க வைக்கும் நான்கு மரணங்களும் கல்குடாவை நிலை குலைய வைத்துள்ளதென்பதே உண்மை. ●







விழாக்களின் போது சிறுமியர்களுக்கு பாட்டி புறக் அல்லது சோலிசெட் போன்ற ஆடைகளை அணியும் பொழுது இந்த ஸ்ரைலை கொஞ்சம் செய்து பாருங்கோ. மிகவும் அழகாக இருக்கும்.

# வாழைப்பழம் சாப்பிடுங்கள்



பழங்கள் ஊற்றுணாக்களுக்குள் சிறந்தவை எனலாம். ஏன்ன தான் ஐஐஸ்கிறீம் பாயாசம் கடித்தாலும் பழங்கள் உட்கொள்வதை போல் வருமா? அதவும் நமது ஊருக்கே உரித்தான வாழைப்பழம் போல் எதுவுமே வருவதில்லை. பெரும்பாலான நோய்களுக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்வதும் வாழைப்பழத்தை தான். அப்படி இருக்கையில் உங்கள் பிள்ளைகளுக்கும் வாழைப்பழத்தை தாராளமாக கொடுங்கள். அதற்கு முன்னர் வாழைப்பழத்தின் பயன்கள் பற்றி கொஞ்சம் அறிந்து கொள்ளுங்கள்.

### போசாக்கு மட்டம்.

வாழைப்பழங்களில் அதிகளவில் விற்றமின்களும் கனிப்பொருட்களும் கூட இருக்கின்றன. அளவில் சற்றுப்பெரிய வாழைப்பழமொன்றில் விற்றமின் ஏ உட்பட தயமின் 1.5 மில்லிகிராமும் இறைபோபிலேவின் 0.82 மில்லிகிராம்,23 மைக்ரோகிராம் போலிக்கமிலம் என்பன உள்ளன. கர்பிணித் தாய்மார்களும் குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்திருக்கும் பெண்களும் தினமும் 3 வாழைப்பழங்களைச் சாப்பிடுவதால் ஒரு நாளைக்குத் தேவையான போலிக்கமிலம் அவர்களுக்குக் கிடைக்கின்றது. மேலும் கற்பிணிப் பெண்களின் வாந்தியைக் கட்டுப் படுத்தவும் வாழைப்பழம் உதவுகின்றது.

### குருதி அழுத்தம்.

வாழைப்பழத்தில் உள்ள பொற்றாசியமும் அளவான உப்பும்,குருதி அழுக்கத்தைக் கட்டுப் படுத்துகின்றன. மேலும் உளவியல் பிரச்சினைகளால் அவதியுறுபவர்களும் வாழைப்பழம் உண்பதால் நிவாரணம் பெறுகின்றனர்.

### ஞாபகசக்தி, கிரகிக்கும் ஆற்றல்

ஒருவரின் ஞாபகசக்தியை மேம்படுத்தவும், கிரகிக்கும் ஆற்றலை விருத்தி செய்யவும், வாழைப்பழம் மிகவும் துணைபுரிகின்றது. இங்கிலாந்தில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்விலிருந்து இது புலனாகின்றது.

### புகைப்பிடித்தல்

புகைப்பிடித்தலுக்கு அடிமைப்பட்டுள்ளவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கும், வாழைப்பழம் துணைபுரிகின்றது. இதில் உள்ள விற்றமின் ஏ, சீ, பீ6, பீ12 போன்றவற்றின் செயற்பாட்டினால் புகைப்பிடிப்பவர்களுக்கு தாம் எதிர்பார்க்கின்ற நிம்மதியும் சந்தோசமும் கிடைக்கின்றனவாம். எனவே நாளடைவில் அவர்கள் புகைப்பிடிப்பதைக் கைவிடுவர். இதை நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும். அப்போது தான் அதன் முழுமையான அனுகூலத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். அத்துடன் வாழையிலுள்ள மெக்னீசியம் பொற்றாசியம் என்பவற்றின் செயற்பாட்டினால் உடலிலுள்ள நிக்கொட்டினின் அளவும் குறைந்து விடும்.

### மாரடைப்பு

தினமும் வாழைப்பழம் உட்கொள்வதனால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு 40 வீதத்தால் குறைவடையச் சாத்தியம் இருப்பதாக இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

### மூலவியாதி

மூலவியாதியால் அவதிப்படுபவர்கள் தினமும் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் அதன் தாக்கத்திலிருந்து ஓரளவுக்கேனும் தம்மை காத்துக் கொள்ளலாம். குருதியில் ஏற்படக்கூடிய பல்வேறுபட்ட நோய்களுக்குமான எதிர்ப்பு சக்தி இதில் அடங்கியுள்ளது. வாழைப்பழத்திலுள்ள 2.6 வீதமான தாதுப்பொருட்களினால் இந்நிலை கட்டுப் படுத்தப்படுகின்றது.

சாம்பல் வாழை, பழமாகவும் சமைத்துச் சாப்பிட உகந்தது. இதிலும் மேற்குறிப்பிட்ட நோய்களை எதிர்க்கக் கூடிய சக்தி இருக்கின்றது. எனவே தினமும் உணவு உட்கொண்டபின் வாழைப்பழமொன்று சாப்பிடுவதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இது உங்கள் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

# நெற்றிப் பொட்டு பத்திரம்



சின்ன வயதில் இருந்தே வீட்டில் அம்மா காய்ச்சும் சாந்திப் பொட்டுகளை வைத்து பழகியவர்களுக்கு கடையில் வாங்கி வைக்கும் ஸ்ரிக்கர் பொட்டு அலேர்ஜியை ஏற்படுத்த கூடும். சிலருக்கு நாளடைவில் நெற்றிப் பகுதியில் அரிப்பும் கரும்புள்ளியும் ஏற்பட்டு அந்த இடமே புண்ணாகிவிடும். அவர்களுக்கு தான் இந்த மருந்து.

வறுத்த உளுத்தம் பருப்பு 100 கிராம்
கொட்டை நீக்கிய புங்கங்கொட்டை 10
கொட்டை நீக்கிய கடுக்காய் தோல் 5.

இவற்றை அரைத்து வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பொடியை தினமும் குளிப்பதற்கு முன் தண்ணீரில் குழைத்து அரிப்பு இருக்கிற பகுதியில் தேய்த்துக் கழுவிவர அரிப்பும் கருமையும் ஓடிப் போகும். 2 வாரத்தில் மாற்றம் தெரிவதை காண்பீர்கள்.

# ஆண்களின் அழகை கூட்டுவதற்கு



### உதடு

சில ஆண்கள் சிகரெட் குடித்து உதடுகள் கருமையாக இருக்கும் அதனை போக்க பீட்ரூட் சாறு அல்லது மாதுளை சாறு எடுத்து உதடுகளில் பூசி வர உதடுகள் சிகப்பாக மாறிவிடும்.

### தலைமுடி

தலைமுடி நன்றாக கருகருவென்று வளர்வதற்கு நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் மூன்றும் சமமாக எடுத்து தலைக்கு தேய்த்து ஊரிய பின்பு குளிக்க வேண்டும்.

### பற்கள்

எலுமிச்சை சாறுடன் உப்பு கலந்து அல்லது புதினா இலையை காய வைத்து அதனை தூளாக்கி இந்த தூளில் பல் தேய்த்தால் பற்கள் பளிச்சென்று இருக்கும்

# தாயின் மனநிலையே சேயின் மனநிலை

ஒரு பெண் எப்போது கருவுறுகிறாளோ? அந்த ஒவ்வொரு மாற்றமும் கருவில் இருக்கும் குழந்தைக்கும் ஏற்படும். இவ்வாறு ஏற்படும் பாதிப்புக்கள் அல்லது மாற்றங்கள் குழந்தை பிறந்த பின் 2 அல்லது 3 ஆண்டுகள் வளர்ந்த பின் கூட ஏற்படும்.

- கருவுற்ற பெண்கள் குளிர்ந்த நீரில் குளிக்கக் கூடாது. ஈரத்தலையுடன் இருப்பதைத் தவிர்ப்பது நல்லது.
- மழையிலோ, மழைச்சாரலிலோ நனையைக் கூடாது. அவ்வாறு நனைய நேரிட்டால் வீட்டிற்கு வந்தவுடன் வெந்நீர் வைத்து இளம் சூடான நீரில் குளித்து உடலையும், தலையையும் நன்கு துடைக்க வேண்டும்.
- எப்போதும் நன்கு காய்ச்சி ஆறிய நீரைப்பருகுவது நல்லது. அதிக நீர் அருந்த வேண்டும். அதற்காக ஒரே நேரத்தில் அதிக நீர் அருந்தக் கூடாது. இடைவெளி விட்டு நீர் அருந்த வேண்டும்.
- அதிக சூடான நீரை அருந்துதல் நல்லதல்ல, குளிர்சாதனப் பெட்டியில் வைத்த குளிர்பானங்கள், குளிர்ந்த நீர் மற்றும் குளிர்ந்த உணவுப்பொருட்களைத் தவிர்க்க வேண்டும். இதனால் சளி பிடிக்காமல் பார்த்துக் கொள்ளலாம். கருவுற்ற பெண்ணுக்கு சளி பிடித்தால் அது கருவில் இருக்கும் குழந்தையையும் பாதிக்கும்.
- கருவுற்ற பெண்கள் சிலபேர் குமட்டல், வாந்தி காரணமாக உணவை தவிர்ப்பார்கள். அப்படித் தவிர்ப்பதால் குழந்தைக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போகும்.
- அதிககாரம், புளிப்பு உள்ள உணவுகளைத் தவிர்க்க வேண்டும், எளிதில் ஜீரணமாகும் உணவுகளை உண்ண வேண்டும்.
- சத்து மாத்திரைகளை நேரடியாக உபயோகிக்கக் கூடாது. கீரைகள், பழங்கள்,தானியங்கள், காய்கறிகள், போன்றவற்றில் உண்ண வேண்டும்.
- மதிய உணவில் ஏதாவது ஒரு கீரையை சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிக சூடு, அதிக குளிர்ச்சி தரும் பழங்களைத் தவிர்த்து மற்ற பழங்களைச் சாப்பிடுவது நல்லது. பானமாகச் செய்து கூட அருந்தலாம்.
- கர்ப்பிணிப் பெண்கள் சரியான நேரத்திற்கு உணவு அருந்த வேண்டும். உணவு உண்டவுடன் தூங்கக் கூடாது. சற்று ஓய்வெடுத்தாலே போதுமானது. முடிந்தவரை பகல் தூக்கத்தைத் தவிர்ப்பது நல்லது.
- தொலைக்காட்சியை அதிக நேரம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மனதைப் பாதிக்கும் காட்சிகளைப் பார்ப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- மூச்சுத் திணறும் அளவு மக்கள் நெருக்கடி உள்ள திருவிழா, கடை வீதிகளுக்குச் செல்வது நல்லதல்ல.



- அதிக சத்தம் போட்டு பேசுவதால் வயிற்றில் உள்ள கருவிற்கு சில அதிர்வுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

கரு என்பது மென்மையான பூ போன்றது அதை அழகாக பாதுகாப்பாகப் பெற்றெடுக்க வேண்டியது ஒரு தாயின் கடமை.

## செய்து பார்ப்போமா?

1. கடுக்காய்த்தோல் நெல்லிக்காய் இரண்டையும் கொட்டை நீக்கிக் காயவைத்துப் பொடியாக்கி வைத்துக் கொண்டு தினமும் 3 கிராம் வீதம் சாப்பிட்டு வந்தால் கண் பார்வை சக்தி அத்கரிக்கும். கண் குளிர்ச்சியுடன் சளியினால் ஏற்படும் தலைவலியும் நீங்கும்.
2. வல்லாரை 150 கிராம், வசம்பு 15 கிராம் சேர்த்து பொடியாக்கி தினசரி இரவு தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் ஞாபகசக்தி அதிகமாகும்.
3. பாலில் சிறிது மஞ்சள் பொடி, மிளகுப் பொழி, பனங்கற்கண்டு சேர்த்துக் குடித்து வந்தால் நாள்பட்ட சளி, இருமல் கூட குறைந்து விடும்.
4. சிறிது சீரகம், ஒரு கிராம்பு, இரண்டு மிளகு ஆகியவற்றை பசும்பால் விட்டு அரைத்து நெற்றொயில் பூசிக் கொண்டால் தீராத தலைவலி போய்விடும்.
5. காய்ந்த நெல்லிக்காயைப் பொடியாக்கித் தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து கொதிக்க வைத்து வடிகட்டித் தேய்த்து வந்தால் வெள்ளை முடி கூட கருமையாகிவிடும். முடி உதிர்வதும் இருக்காது.
6. கீழாநெல்லி இலை, கொத்துமல்லி இலை இவற்றைப் பாலில் அரைத்து முகத்தில் சுருக்கம் உள்ள பகுதிகளில் பூசி 30 நிமிடங்கள் கழித்துக் கழுவினால் சுருக்கம் மறையும். தேமல், கரும்புள்ளிகளும் நீங்கும்.




# வெற்றிலையின் புதிய பயன்கள்

வெற்றிலை போடுவது நல்லதல்ல என வைத்தியர்கள் கூறுவர். வெற்றிலை என்பது தனிப்பட்ட முறையில் கெடுதல் அல்ல. அதனுடன் சேர்க்கப்படும் பாக்கும்இ சுண்ணாம்புமே கெடுதலைத் தருகின்றன. வெற்றிலையில் உள்ள செவிகால் என்கிற வேதிப்பொருள் இயற்கை யான 'அன்ட்டிசெப்டிக்' ஆகும். வெற்றிலை செல்களின் சிதைவைத் தடுக்கிறது.

கால்சியம் மாத்திரைகளை விட பால், தயிர், நல்லெண்ணெய், வெற்றிலையில் இருந்து கால்சியத்தை உடல் எளிதாக ஏற்றுக் கொள்கிறது. வயதான பெண்களுக்கு ரத்தத்தில் ஏற்படும் இழப்பை சரி செய்ய எலும்பில் இருந்து கால்சியத்தை உடல் எடுக்கிறது. இதனால் எலும்புகள் பலவீனமடையும். இந்த குறையை நிவர்த்தி செய்ய வெற்றிலையைப் பரிந்துரை செய்கின்றனர்.

வெற்றிலையில் உள்ள யூஜினால் என்னும் வேதிப்பொருள், புற்றுநோயைக் குணப்படுத்தும் இயல்பைப் பெற்றுள்ளது.

குழந்தை பெற்ற பின்னர் தாய்க்கு அதிகமாக பால் சுரக்க வெற்றிலையை சிறிது ஆமணக்கு எண்ணெய் விட்டு வதக்கி மார்பில் வைத்துக் கட்டி வர தாய்பால் அதிகமாகச்சுரக்கும். வெற்றிலைச் சாறு நான்கு துளி காதில் விட எழுச்சியினால் வரும் வலி குணமாகும். விடாது மூக்கில் ஒழுகும் சளிக்கும் வெற்றிலைச்சாற்றை மூக்கில் விட குணமாகும்.



# பால் கொழுக்கட்டை

**தேவையான பொருட்கள்:** இடியப்ப மா1 டம்ளர், பால்2 டம்ளர், தேங்காய்ப் பால்1டம்ளர், சக்கரை1 1/2 டம்ளர், ஏலக்காய்4, உப்பு1ஸ்பூன்

**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் இடியப்ப மா மற்றும் உப்பை போட்டு பிசைந்து. சுடுதண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக ஊத்தி சப்பாத்தி பதத்திற்கு குழைத்து ஆற வைக்க வேண்டும். அந்த மாவை சப்பாத்தி பதத்திற்கு பிசைந்து சிறிது சிறிதாக உருண்டைகளாக உருட்ட வேண்டும். இதில் இரண்டு உருண்டைகளை எடுத்து சிறிது தண்ணீர் விட்டு கரைத்து வைக்க வேண்டும்.

பின்னர் உறுட்டி வைத்த உறுண்டைகளை இட்டலிசட்டியில் இட்டு அவித்தெடுக்க வேண்டும். சக்கரையில் அரை ரம்ளர் தண்ணி விட்டு கரைச்சு காய்ச்சி வடிகட்டி எடுக்க வேண்டும். ஒரு பாத்திரத்தில் பாலை விட்டு நன்கு காய்ச்ச வேண்டும். பால் பொங்கியதும் ஏழக்காயையும் சேர்த்து காய்ச்ச வேண்டும்.


பின்னர் கரைத்து வைத்திருந்த 2உருண்டைமா கூலை பாலுடன் ஊத்தி காய்ச்சினால் கட்டியாகவும் சுவையாகவும் இருக்கம். பின்னர் கொழுக்கட்டைகளை பாலில் போட்டு வேக வைத்து பால் கட்டியானதும் அடுப்பை, நிப்பாட்டி அந்த வெப்பத்தில் தேங்காய் பாலை ஊற்றி நன்றாக கலக்க வேண்டும். ஆறிய பின் பரிமாறுங்கள் சுவையோ சுவை.



# எறும்புகளின் அதிசய உலகம்



நட்சத்திரா ஐயாத்துரை




இதுவரை எத்தனையோ முறை எறும்புகளை பார்த்திருந்தாலும் ஆவலோடும், அதிசயத்தோடும் அவற்றை உற்றுநோக்கத் தொடங்கியது சமீப காலமாகத்தான். அதற்குக் காரணம் நான் கண்ட ஒரு வித்தியாசமான காட்சி. காட்டின் ஓரிடத்தில் முசுறு எறும்புகள் மரத்தில் ஏறிக்கொண்டிருந்த போது அவற்றை கமரா மூலம் படமெடுத்துக் கொண்டிருந்தேன். இரு எறும்புகள் எதிரெதிரே சந்திக்கும்போது தங்களது உணர்நீட்சிகளைத் ஒற்றிவிட்டுக் கடந்து செல்வது, தம்மைவிட உருவத்தில் பெரிய பூச்சிகளை கூட்டமாகச் சேர்ந்து மெல்லமெல்ல கூட்டுக்கு நகர்த்திச் செல்வது, தங்களது முட்டைகளை கவ்வியவாறே தூக்கிச் செல்வது போன்ற வழக்கமான காட்சிகளைப் பார்த்ததுண்டு. ஆனால் அன்று நான் கண்ட காட்சி வியப்பில் ஆழ்த்தியது. ஒரு எறும்பு மற்றொரு எறும்பை தூக்கிச் சென்றது. ஒரு வேளை இறந்து போன எறும்பை அது தூக்கிச் செல்கிறதா என்ற சந்தேகத்துடன் உற்றுநோக்கியபோது, தூக்கிச் செல்லப்படும் எறும்பு தனது உணர்நீட்சியை எதிரில் வந்த எறும்புகளுடன் தட்டிய வண்ணம் சென்றது. இதுவரை இப்படி ஒரு காட்சியை பார்த்திராத எனது மனதில் இது ஆழமாகப் பதிந்தது.

காட்டைவிட்டு ஊருக்குள் வந்தவுடன் Piotr Naskrecki எழுதிய The Smaller Majority என்ற பூச்சிகளைப் பற்றிய புகைப்பட புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தபோது நான் பார்த்த புகைப்படமெடுத்த அதே காட்சி அந்தப் புத்தகத்திலும் இடம்பெற்றிருந்தது என்னை மேலும் வியப்பில் ஆழ்த்தியது. ஆர்வம் மேலோங்க எறும்புளைப் பற்றிய புத்தகங்களைப் படித்தபோது, நான் பார்த்த காட்சிக்கான விடை தெரிந்தது. அடிபட்டு நடக்க முடியாமல் போன ஓர் எறும்பை மற்றொரு எறும்பு கூட்டுக்கு தூக்கிக்கொண்டு சென்றிருக்கிறது.

இயற்கை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் நமக்கு புதிய சங்கதிகளை வழங்கிக் கொண்டே இருக்கிறது. நம்மில் சிலருக்கு ஒரு எறும்பு மற்றொரு எறும்பைத் தூக்கிச் செல்வது மிகச்சாதாரணமான காட்சி அல்லது செய்தியாக இருக்கலாம். ஆனால் இதுவே சிலருக்கு ஆச்சரியத்தையும், அது ஏன் அப்படிச் செய்கிறது என்ற புதிருக்கான விடையை அறிந்துகொள்ளும் ஆர்வத்தையும் தூண்டுகிறது. இந்த வகையான ஆர்வமும் ஆச்சர்யமும்தான் இயற்கையை நேசிக்கவும் பாதுகாக்கவும் வைக்கிறது.

சிறு வயது முதல் நாம் சாதாரணமாகப் பார்த்து பழக்கப்பட்டவைதான் எறும்புகள். எறும்பால் கடிபட்டிருக்கிறோம், அதனால் ஏற்படும் எரிச்சலில், கடித்த எறும்பை உடனே நசுக்கிச் சாகடித்தும் இருக்கிறோம். உணவுப் பண்டங்களில் அவை ஏறிவிடாமலிருக்க எறும்பு மருந்து வாங்கி, அவை இருக்கும் இடங்களில் தூவி இருக்கிறோம். அதேவேளையில் தன் உருவத்தைவிட பன்மடங்கு பெரிதாக உள்ளவற்றை பற்களால் கடித்து எறும்புகள் தூக்கிச் செல்வதையும், படைவீரர்களைப் போல சாரைசாரையாக அவை நடந்து செல்லும் அழகையும் பார்த்தும் வியப்புற்றிருக்கிறோம்.



சிவப்பு நிற சிறிய நெருப்பெறும்பு, உருவத்தில் சற்று பெரிய கரிய கட்டெறும்பு, மரத்திலிருக்கும் வெளிர் சிகப்பு நிற சூவை எறும்பு, சிறிய நுள்ளான் எறும்பு இவைதான் நமக்குத் தெரிந்த எறும்பு வகைகள். ஆனால் உலகில் 11,931 வகையான எறும்புகள் உள்ளன.

இந்த பூமிப் பந்தில் எறும்புகள் இல்லாத இடம் மிகக் குறைவு. எறும்புகள் சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றின. அண்டார்டிகா போன்ற துந்திர பிரதேசங்களைத் தவிர பூமியின் பல இடங்களில் எறும்புகள் பரவி காணப்படுகின்றன. ஆயினும் எறும்பு வகைகள் அதிகமாக இருப்பது பூமத்திய ரேகைக்கு அருகாமையிலுள்ள வெப்ப மண்டலப் பகுதிகளில்தான். இப்பகுதிகளில் உள்ள யானை, புலி, ஒட்டகச் சிவிங்கி இன்னும் பல தரைவாழ் விலங்குகள் அனைத்தையும் ஒரு தராசுத் தட்டில் வைத்து, மற்றொரு தட்டில் எறும்புகள் அனைத்தையும் வைத்தால், எறும்புகள் உள்ள தட்டுதான் எடை தாங்காமல் கீழே இறங்கும்! உருவத்தில் சிறியதாக இருந்தாலும். எண்ணிக்கையில் அபரிமிதமாக இருப்பவை எறும்பினங்கள்.

நம் வீடுகளில், தோட்டங்களில், காடுகளில் என எறும்புகள் எங்கெங்கும் வியாபித்துள்ளன. காட்டில் தரைப்பகுதியிலும், மரங்களிலும், மர விதானங்களிலும் வாழ்கின்றன. பெரும்பாலும் சர்க்கரை உள்ள பொருள்களை எறும்புகள் உணவாகக் கொண்டாலும், பல வேளைகளில் மற்ற சிறிய உயிரினங்களை வேட்டையாடவும், இறந்து போன உயிரினங்களையும், விதைகளையும், மற்ற தாவர உறுப்புகளையும் சாப்பிட்டு வாழ்கின்றன. எறும்புகள் உணவுச் சங்கிலியின் முக்கியமான அங்கம். பறவைகள், சில பாலூட்டிகளுக்கு எறும்பு ஒரு முக்கிய உணவாக இருக்கிறது.

### சமூக வாழ்க்கை

எறும்புகள் கூட்டமாக ஒன்று சேர்ந்து வாழ்பவை. இவற்றின் சமூக வாழ்வு வியக்கத்தக்கது. ஒவ்வொரு எறும்புக்கூட்டமும் ஒன்றாகக் கூடி கூட்டைப் பராமரிப்பது, உணவு தேடுவது, முட்டையிடுவது, இனப்பெருக்கம் செய்வது, கூட்டை சுத்தம் செய்வது, எதிரிகளிடமிருந்து பாதுகாப்பது என வேலைகளை பகிர்ந்து கொள்கின்றன. அவை செய்யும் வேலையை வைத்து வேலைக்கார எறும்பு, இனப்பெருக்கம் செய்ய முடியாத பெண் எறும்பு, எதிரிகளிடமிருந்து கூட்டை காக்கும் சிப்பாய் எறும்பு, முட்டையிடும் பெண் எறும்பு அல்லது ராணி, இறக்கையுள்ள ஆண் எறும்பு என இனம் பிரிக்கலாம்.

நாம் வெளியில் காணும் எறும்புகள் அனைத்தும் வேலைக்கார எறும்புகள்தான். இவற்றில் சில உருவத்தில் வேறுபட்டு காணப்படும். உருவத்தை வைத்து அவை செய்யும் வேலைகளையும் அறிந்துகொள்ள முடியும். உருவத்தில் மிகச் சிறிய வேலைக்கார எறும்புகள் பெரும்பாலும் கூட்டைவிட்டு வெளியே வருவதில்லை. ராணிக்கு சேவை செய்வது, முட்டைகளையும், வேற்றிளரிகளையும் (லார்வா) பராமரிப்பதே இவற்றின் வேலை. ராணியை காண்பது அரிது. அது கூட்டுக்குள்ளேயே இருக்கும். அதேநேரம், இனப்பெருக்க காலங்களில் இறக்கையுள்ள ஆண் எறும்புகள் கூட்டைவிட்டு வெளியில் பறந்து செல்லும்போது பார்த்திருக்கலாம்.

### இனப்பெருக்கம் மற்றும் கூடமைத்தல்

நன்கு முதிர்ந்த எறும்புக் கூட்டம், இனப்பெருக்கம் செய்யும் திறனைக் கொண்ட இறக்கையுள்ள ராணி மற்றும் ஆண் எறும்புகளை வளர்க்கிறது. இவை முழு வளர்ச்சியடைந்தவுடன் புதிதாக தமக்கென ஒரு குடும்பத்தை அமைக்க வளர்ந்த கூட்டைவிட்டு வெகுதூரம் பறந்து செல்கின்றன. இதற்கு கலவிப் பறப்பு (Nuptial flight) என்று பெயர். அதேவேளையில் ஆண் எறும்பை கவர்வதற்காக ராணி எறும்பு ஒருவித இனஈர்ப்புச் சுரப்பை (Pheromone) தனது உடலிலிருந்து வெளியிடுகிறது. இது ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண் எறும்புகளைக் கவரும். இவை தமக்குள் சண்டையிட்டு, வலுவான ஆண் எறும்புகள் ராணியுடன் இணைசேர்கின்றன. இணைசேர்ந்த பின் ஆண் எறும்புகள் இறந்து போகின்றன.

எறும்பின் முட்டை வெள்ளை நிறத்தில், நீள்வட்ட வடிவத்தில் இருக்கும். வீடுகளில் அம்மியையோ அல்லது பெரிய பாத்திரத்தையோ நகர்த்தும்போது அவற்றின் கீழ் கருப்பு நிற எறும்பு கூடமைத்து இருந்தால், வெள்ளை நிறத்தில் இருக்கும் முட்டைகளை வாயில் கவ்விக்கொண்டு அவை வேறு இடத்துக்குச் செல்வதை பார்த்திருக்கலாம்.

முட்டையிலிருந்து இரண்டு நாள்களில் வேற்றிளரி (லார்வா) வெளிவரும். இவற்றுக்கு ஊட்டச்சத்து மிகுந்த எச்சில் போன்ற திரவத்தை ஊட்டி ராணி வளர்க்கும். இவை கூட்டுப்புழுவாகி முழு வளர்ச்சியடைந்த வேலைக்கார எறும்பாக பிறக்கும். இதன்பின் ராணிக்கு எந்த வேலையும் வைக்காமல், அவை வெளியே சென்று உணவு தேட ஆரம்பிப்பது, கூட்டை பராமரிப்பது முதலான எல்லா வேலைகளையும் பகிர்ந்து செய்யத் தொடங்குகின்றன. ராணியின் ஒரே வேலை முட்டையிட்டு தனது குடும்பத்தை விரிவாக்குவது மட்டுமே.

வேலைக்கார எறும்புகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க மண்ணுக்கு அடியில் படிப்படியாக அவை கூட்டை விரிவுபடுத்தத் தொடங்குகின்றன. முட்டைகளை வைத்துப் பாதுகாக்க, அதிலிருந்து வரும் வேற்றிளரிகளையும், கூட்டுப்புழுக்களையும் வைக்க, உணவை சேமித்து வைக்க என தனித்தனி அறைகளை அவை உருவாக்குகின்றன. இவ்வாறு கூடு பெரிதான பிறகு சில ஆண்டுகளில் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இறக்கையுள்ள ஆணும், பெண்ணும் அக்கூட்டில் வளர்க்கப்பட்டு, முதிர்ச்சியடைந்த பின் அவை வெளியே பறந்து சென்று வேவ்வேறு இடங்களில் தங்களுக்கென ஒரு புதிய கூட்டை உருவாக்கிக் கொள்கின்றன.

### தகவல் பரிமாற்றம்

நாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஒருசில உணவுத்துகள்கள் கீழே சிந்திவிட்டால், சற்று நேரத்தில் அங்கு ஒரு எறும்புக் கூட்டம் வந்து சேர்வதைக் காணலாம். இது எப்படிச் சாத்தியமாகிறது? உணவு இருப்பதைப் பார்க்கும் ஓர் எறும்பு அத்துகளின் அருகில் வந்து தனது உணர்நீட்சிகளால் (Antenna) அதை தொட்டுப் பார்த்துவிட்டு, அங்கிருந்து செல்லும்போது தனது உடலின் பின்பகுதியிலிருந்து ஒருவித வேதிப்பொருளை தரையில் கோடு போல் தனது கூடு வரை ஆங்காங்கே இட்டுச் செல்கிறது. இதை மோப்பம் பிடிக்கும் மற்ற எறும்புகளும் அந்தத் தடத்தைப் பின்பற்றி உணவு இருக்குமிடத்தை அடைகின்றன. இந்தத் தடம் எப்போதும் வளைந்து வளைந்துதான் இருக்கும்.

எறும்புகள் இயற்கையின் ஓர் முக்கிய அங்கம். அவை எங்கெங்கும் வியாபித்திருக்கின்றன. கட்டுரையின் தொடக்கத்தில் விவரித்த அந்த வித்தியாசமான காட்சியை பார்த்த பிறகு, போகும் இடங்களில் எல்லாம் முசுறு எறும்புகளை தேடிக் கொண்டிருக்கிறேன். அவற்றின் செயல்பாடுகளைப் பார்த்து அதிசயிக்கிறேன். இப்படி பார்க்கும் போதோ, புகைப்படம் எடுக்கும் போதோ அவற்றை தொந்தரவு செய்வதில்லை. அப்படிச் செய்தால் அவை கடித்துவிடக் கூடுமே!

# தொன்மைத் தமிழர் நிலம் தென்னன் மரபடி

## (தென்னமரவாடி)



பா.சுகுமார்

திருகோணமலை மாவட்டத்தின் வடக் கெல்லையாக உள்ள இக் கிராமம் வரலாற்றுத் தொன்மையும் கலசார சிறப்பும் செழிப்பான வனப்பும் நிறைந்தது.

தென்னன் மரபடி என்பதே தென்னமரவாடியாக திரிபடைந்ததாகவும் தென்னன் என்கிற மன்னன் இப் பிரதேசத்தை ஆண்டதாகவும் அவன் வழி வந்தவர்கள் தாம் என இம் மக்கள் தம் வரலாற்று பழமையயை நினைவு கொள்கின்றனர்.

இங்கு கிடைக்கும் எஞ்சியிருக்கும் அழிபாடுகளுடனான தொன்மை எச்சங்கள் இக் கிராமத்தின் வரலாற்றை நமக்கு சொல்கின்றன.

தென்னமரபடி சில தனித்துவமான பண்பாட்டு அம்சங்கள் கொண்ட கிராமம்.

1982ல் என்னுடைய நண்பன் உறவினன் கிளியனுடன் கடைசியாக சென்று வந்த நினைவுகள் அப்போது எல்லா வளமும் கொண்ட ஒரு கிராமமாய் இருந்தது.

இங்கு பேசப்படும் வழக்கு மொழி ஈழத்தமிழர்களின் ஏனைய பிரதேசங்களிலிருந்து வேறுபட்டது. தமிழின் அழகு இவர்கள் மொழியில் கேட்பது ஒரு அற்புத அனுபவம். அவ்வளவு அழகு இவர்கள் தமிழுக்கு.

வருடம் தோறும் காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து என்பன ஆடப்பட்டது. அத்தோடு திருவிழாக் காலங்களில் வேதாள ஆட்டம் ஆடப்பட்டு வந்தது. இலங்கையில் இங்கு மட்டுமே இந்த ஆட்டமுறை காணப்பட்டது. இந்த ஆட்ட முறையயை நாம் மீட்டுருவாக்க வேண்டும்.

இக்கிராமமக்கள் தம் திருமண காரியங்களில் திருகோணமலை, தம்பலகாமம், சேனையூர், கட்டைபறிச்சான் ஆகியவற்றோடு நெருக்கமான உறவை பேணி வந்தனர்.

வரலாற்றில் ஒரு காலத்தில் அடங்காப்பற்று வன்னிபங்களில் ஒன்றாய் தென்னபரபடி விளங்கி வந்திருக்கிறது.

கொழும்பில் உள்ள ஆவணச்சுவடிகள் நிலையத்தில் பேணப்படும் கொம்பனி அசாங்கத்துக்கும் வன்னிபங்களுக்குமான உடன்படிக்கை.

1. இருமாபுந்துய்ய மாப்பாண வன்னியனார். 1722ம் ஆண்டு
2. சண்முகப் பெருமாள் சேதுகாவல வன்னியனார். 1738ம் ஆண்டு
3. சேதுகாவல மாப்பாண வன்னியனார். 1745ம் ஆண்டு

ஆக தென்னமரபடிப் பிரதேசம் தமிழர்களின் தொன்மை நிலங்களில் ஒன்று.







இன்று இம் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வாழுகின்றனர்.ஒரு காலத்தில் மிக வசதியாக வாழ்ந்த இவர்கள் இன்று வாழ்வாதாரத்துக்கு வழியற்றவர்களாக உள்ளனர்.

தென்னமரபடி பிள்ளையார் கோயில் பற்றி திருக்கோணமலை திருக்கோயில்கள் எனும் நூலில் பின்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன.

"இக்கோவில் கிழக்கு மாகாணத்தின் வடக்கெல்லையில் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைப்பட்டினத்திலிருந்து 73 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. இவ்வாலயத்திற்கு கிழக்குத் திசையில் கடற்கரையோரமாகவுள்ள மலையொன்றில் ஒரு சிவன் கோவில் இருந்ததற்குரிய இடிபாடுகளும் சிதைவுருவங்களும் காணப்படுகின்றன. இக்கோவில் கருங்கற் திருப்பணியாய் இருந்த தற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

தென்னமரவாடிப் பிள்ளையார் கோவிலுக்கு தென்மேற்கே பறையன் ஆற்றுக்கு அப்பால் மணற்கேணி எனும் இடமுள்ளது. அங்கு சைவ ஆலயமொன்று இருந்து சிதைந்து போன இடிபாடுகளும் காணப்படுகின்றன. தென்னமாவாடி பண்டைக்காலத்தில் தென்னன்மரபு அடி என்பது தென்னன் மரபுஅடி ஆக இருந்தது தென்னமரவாடியாக திரிந்து வழங்கி வருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் பாண்டிய மன்னர்களின் ஆட்சி நடைபெற்று வந்தமைக்கு வரலாறு காணப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டு மீன் இலட்சினை பொறிக்கப்பட்ட கற்தூண்கள் இதற்கு நான்றாக அமைகின்றது. செம்பயனாறு எனும் ஊர்ப் பெயரும் பாண்டிய மரபு வழிப் பெயராகும். தென்னமரவாடி ஆலயம் கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், தரிசன மண்டபம் கொண்டதாக இருக்கின்றது. கருவறையில் சுமார் 3 அடி உயரமான பிள்ளையார் சிலை பீடத்துடன் காணப்படுகின்றது. அர்த்த மண்டபத்தில் தாமிரத்தாலான பிள்ளையார் விக்கிரகம் வெள்ளி வேலும் அம்மன் சிலாவிக்கிரகமும், மூஷிகம் பலிபீடம் என்பனவுண்டு.1935ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்று சிறப்பாக பூசை விழாக்கள் நடைபெற்று வந்ததாம். மாதசதுர்த்தி பிள்ளையார்கதை முதலிய அலங்காரப்பூசைகளும் சித்திரை மாதத் தொடக்கத்தில் கந்தபுராணப்படிப்பு ஆரம்பித்து நிறைவேற்றுவதும் இங்கு நடைபெற்று வந்ததாம். 1941ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பெற்று இன்னும் திருப்பணி வேலைகள் நடைபெறாமலிருந்து வருகின்றது. இதனால் அலங்கார பூசைகளொன்றும் இப்போது நடைபெறுவதில்லை. ஒரு நாளுக்கு ஒரு பூசை மாத்திரம் நடைபெற்று வருகின்றது. சைவக்குருக்கள்மாரே தொடர்ந்து இவ்வாலயத்திற்கு பூசைசெய்து வருகின்றார்கள்.

தென்னமரவாடியைச் சுற்றியுள்ள இடங்களைப்பற்றிய வரலாறுகள் காலத்தால் மறைந்தும்மறைந்து கொண்டுமிருக்கின்றன. தமிழ் மக்களும் சைவசமயமும் இங்கெல்லாம் பரவியிருந்ததென்பதை நினைவு கூர்வது சாலவும் பொருத்தமாயிருக்குமெனக் கருதுகின்றேன்.

தென்னமரவாடியைச் சுற்றிப் பறையன் குளம்,பறையனாறு,பறையன்வெளி, பறையனோடை எனும் இடங்கள் பழைய வரலாறொன்றைக் கூறுகின்றது. பறையனாறு பதவியா குளத்திலிருந்து உற்பத்தியாகிக் கிழக்கேயோடித் தென்னமரவாடிக்கருகாமையில் கடலில் சங்கமமாகின்றது. தற்போது பதவியா என்றழைக்கப்படும் இடத்தில் முற்காலத்தில் சைவத்தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். தமிழ் மன்னராட்சிக்குள் அந்தப் பிரதேசம் இருக்கின்றது. 1965ம் ஆண்டு புதைபொருளாராட்சியாளர்கள் அந்தப் பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சி செய்த போது ஒரு தங்கப்பதக்கம் கண்டெடுக்கப்பட்டது. அதனை ஒரு பட்டயமென்றும் கொள்ளலாம். வட்டவடிவமான அந்தப் பதக்கத்தில் நடுவில் நந்தியும்,அதற்கிரு பக்கங்களிலும் இரண்டு குத்து விளக்குகளும் மேற்பக்கம் இரண்டு சாமரைகளும் பொறிக்கப்பட்டு கீழ்ப்பக்கத்தில் "மகேஸ்வரப்பமி பூபதிக்கிராமம் பிராமணர்களுக்கு தானம் செய்யப்பட்டது" என்று எழுதப்பட்டிருந்தது. புதைபொருளாராட்சியாளர்களால் எடுத்து செல்லப்பட்ட இந்தப் பதக்கம் தொல்பொருட்காட்சி சாலையில் இருக்கலாம். இதனை விட சிவலிங்கங்களும்,சிவன், அம்பாள் விக்கிரகங்களும் இங்கு கிடைக்கின்றன.

பதவியாவிலுள்ள மொறக்காவ, நித்தக்கொணவ,காட்டுக்கொல்லாவ, ஏராமடு என்னுமிடங்களில் பிள்ளையார் விக்கிரகங்கள் காணப்படுகின்றன.

இந்தபதவியாவைத்தமிழ்மன்னரொருவன் ஆண்ட காலத்தில் பகையரசனொருவன் படையெடுத்து வந்தானாம். மாற்றரசனுடைய படையெடுப்பைத் தடுக்க நினைத்த மன்னன் பதவியாக் குளத்தின் குளக்கட்டைக் "கொழுமோர்" காய்ச்சி ஊற்றி உடைக்கும் படி ஆணையிட்டானாம். கொழுமோர்ப் பிரயோகம், கற்பாறைகளையும் உடைக்கும் பண்டைக்கால விஞ்ஞானப் பிரயோகம். அதாவது குளக்கட்டில் நெருப்பை எரித்து சூடேற்ற வேண்டும். நன்கு சூடேறிய பின் அந்த இடத்தில் மோரைக்கரைத்து ஊற்ற வேண்டும். அப்படிச் செய்யும்போது குளக்கட்டில் வெடிப்பு ஏற்படும். இப்படி செய்த போது குளக்கட்டு வெடித்து நீர் கசிந்து ஓடத்தொடங்கியது. அது பெரிய குளமாதலால் குளத்திலுள்ள பெரிய மீனொன்று வெடிப்பை அடைத்துக்கொண்டதாம். அந்த மீனை வெட்டி வெளியேற்றும் படி அரசர் ஆணையிட்டாராம். இதனை செய்ய அஞ்சி யாரும் முன்வரவில்லை. ஒரு பறையன் துணிந்து முன் வந்தானாம். அதனைச் செய்யும் போது வெள்ளம் புரண்டு தன்னை அள்ளிக் கொண்டு போகும் என்பதை உணர்ந்த அவன் தனது அங்கங்கள் எங்கெங்கு கிடக்கின்றனவோ அங்கெல்லாம் தன் பெயர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பறையன் அந்த மீனை வெட்டி குளத்தை திறந்தான். வெள்ளம் புரண்டு பறையனை அள்ளிக் கொண்டு சென்று சிதைத்துத் தள்ளியது. மாற்றான் படையும் சிதைந்து அழிந்ததாம். பறையன் கேட்டுக் கொண்டபடி அவனுடைய அங்கங்கள் சிதறிக்கிடந்த இடங்களுக்கு பறையன்குளம், பறையன்வெளி, பறையனோடை, பறையனாறு என்று பெயரிடப்பட்டதாக திரியாயில் ஓய்வு பெற்ற கிராமத்தலைவர் திரு.சி.பூ.பொன்னம்பலமவர்கள் தகவல் தந்துதவினார்கள். இந்தப் பறையனாறுதான் தென்னமரவாடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சமமாக ஓடுகின்றது. இதுவே கிழக்கு மாகாண எல்லையாகும்."

1984ல் இக் கிராமம் அடித்து நொருக்கப்பட இங்கு வாழ்ந்த முன்னூறு குடும்பங்கள் உயிருக்கு பயந்து தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த தம் வாழ்விடத்தை விட்டு தங்கள் உறவினர்கள் வாழும் முள்ளியவளை, தண்ணீரூற்று,செம்மலை ஆகிய கிராமங்களுக்கு பெருமளவிலும் திருகோணமலை தம்பலகாமம் போன்ற இடங்களுக்கும் இடம் பெயர்ந்தனர். 26 வருடங்களுக்குப் பின்பு ஐநா உதவித் திட்டத்தின் கீழ் மீள் குடியேறினர் இன்றுவரை சரியான அடிப்படை வசதிகள் இல்லாமலேயே இம் மக்கள் வாழ்கின்றனர்.

## ஆன்றோர் சொல்

கற்றறிந்த மனிதன் என்று யாருமில்லை, கற்கும் மனிதர்கள்தான் உள்ளனர்.
- மரேஷால்

உயிருள்ளவரை உழைத்து வாழ விரும்புகிறேன். உழைக்க உழைக்க எனக்கு உயிர் வாழும் விருப்பம் அதிகமாகிறது. - ஜார்ஜ் பெர்னாட்ஷா

சிறந்த செயல்களே சிறந்த வழிபாடு.
- குரு நானக்

வாழ்க்கை ஒரு போர்க்களம். நம்பிக்கைதான் ஆயுதம்.
- மகாவீரர்

எவரால் மனித இனத்திற்கு நன்மை ஏற்படுகிறதோ அவரே மனிதரில் சிறந்தவர். - நபிகள் நாயகம்

உலகமே என் கோவில். நன்மை செய்வதே என் மதம். - ஹீன்

என் மனம் விரும்பும் நூல்களைக் கொடுங்கள். நான் வாழ்நாள் முழுவதும் சிறையில் வாழச் சம்மதிப்பேன். - மாஜினி

சமுதாயம் என்பது மனிதர்களின் ஒற்றுமைதான். - ரூசோ

நம்பிக்கை இழந்தவன் பிணத்துக்கு ஒப்பாவான். - வைட் டியர்

நம்பிக்கை பயத்தைப் போக்கும் ஒரு சாதனம். - வில்லியம் ஜேம்ஸ்

பசித்தோருக்கு உணவிடுவதே என் மதம். வறியவரிடமும் பாமரரிடமும் அன்புடன் பழகுபவரே என் கடவுள்.
- விவேகானந்தர்

நம்பிக்கை உண்டானால் வெற்றியும் உண்டு. - மகாகவி பாரதியார்

நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.
- வள்ளலார்

தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பத்தைவிட வேறு அவமானமில்லை. - காந்தியடிகள

கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று. ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும். - ரஸ்கின்

சான்றோன் ஆக்காத கல்வி, சாமர்த்தியமாய்க் கழித்த சோம்பலேயாகும். - போலிங் புரூக்

உண்மையை நேசி, பிழையை மன்னித்துவிடு. - வால்டேர்

விடுதலை பெறும்போதுதான் உண்மையைக் காண முடிகிறது.
- தாகூர்

நல்ல செயலுக்கு நல்ல வட்டி கிடைக்கும். - மில்டன்


மௌனம் என்ற மரத்தில் அமைதி எனும் கனி தொங்கும். - பாஸ்கல்

நேர்மையான உழைப்பில் கௌரவம் இருக்கிறது. - க்ளீவ் லாண்ட்

கடன் வாங்குதல் பிச்சையெடுப்பதைவிடக் கீழானது.
- லெஸ்ஸிங்

அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை - அரவிந்தர்

# சிவப்பு மலையின் கதை



பல வருடங்களுக்கு முன்பு சிங்கப்பூரை சுற்றியுள்ள கடல்பகுதியில் பயங்கரமான வாள் மீன்கள் நிரம்பியிருந்தன. இவற்றின் மூக்குப் பகுதி நீளமாக வாள் போல இருக்கும். மீன் பிடிக்கக் கடலுக்குள் செல்லும் மீனவர்களையும் படகுகளையும் வாள் மூக்கால் குத்தி, கடலில் இருந்து விரட்டும். கடற்கரைகளில் அமரும் மக்களையும் சும்மா விடாது.

அந்த நேரத்தில் சிங்கபுரத்தின் அரசராக இருந்த ராஜா தனது படைவீரர்களிடம் வாள் மீன்களைக் கொல்லும்படி உத்தரவிட்டார். பெரிதாக வந்த ஓர் அலையில் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட வீரர்கள், ஈட்டியால் வாள் மீன்களைக் கொல்ல முயன்றனர்.

ஆனால், ஜெயித்தது என்னவோ வாள் மீன்கள்தான். பல வீரர்களைத் தங்கள் வாள் முக்கால் காயப்படுத்தி துரத்தி அடித்தன.

வீரர்களின் ரத்தத்தால் கடல் செந்நிறமாக மாறியது. போர்வீரர்களில் பலர் இறந்ததால் பயந்து போனார் அரசர். சோகமாகக் கடற்கரை மணலில் நடந்து கொண்டு இருந்தார். இந்தப் பயங்கரமான வாள் மீன்களை எப்படிக் கொல்வேன்? என்று கத்தினார்.

அப்போது, வழி இருக்கிறது என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தார் அரசர். அருகில் இருந்த பாறையில் ஒரு சிறுவன் அமர்ந்து இருந்தான். அவனே தொடர்ந்து, நீரில் வாழை மரங்களால் ஒரு சுவர் எழுப்புங்கள். அலையில் வாள் மீன்கள் வரும்போது அவற்றின் வாள் மூக்கு கூர்மையாக இருப்பதால் வாழை மரத்தில் குத்தி மீன்கள் சிக்கிவிடும் என்றான்.

அதன்படியே நாடு முழுவதும் இருந்து வாழை மரங்களை எடுத்து வந்து கடலில் சுவர் எழுப்பினார்கள். அடுத்து வந்த பெரிய அலையில் வாள் மீன்கள் வாழை மரத்தில் சிக்கிக் கொண்டன. அவற்றை அரசர் அனுப்பிய வீரர்கள் கொன்று குவித்தனர். ஒரு வீரன்கூட இறக்கவில்லை. அதே நேரம், ஒரு வாள் மீன்கூட தப்பிக்கவில்லை! இறந்து கிடந்த மீன்களை எடுத்து சமைத்துப் பெரிய திருவிழாவாகவே கொண்டாடினர்.


ஆனால், அரசருக்கு ஒரு வருத்தம் இருந்தது. தனது தளபதியிடம் அந்த சிறுவன் மிகவும் புத்திசாலி. என்னைவிட சக்தி வாய்ந்தவனாக ஒரு நாள் வருவான் என்றார்.

அன்று இரவு, அந்தச் சிறுவனைக் கொல்ல நான்கு வீரர்களை அனுப்பினான் தளபதி. அவர்கள் அந்த மலைக்குச் சென்றனர்.

அங்கே பயங்கர உருவத்தோடு ஒரு கிழவி நின்றிருந்தாள், ஏமாற்றுக்காரர்களே என்று கத்திய அவள், உங்களுக்கு உதவி செய்த சிறுவனையே கொல்லப் போகிறீர்களா? நான் உங்களுக்குத் தண்டனை தருவேன் என்றாள்.

பயந்துபோன வீரர்கள் ஓட்டம் பிடித்தார்கள். திடீரென அவர்கள் முன் இருந்த தரைப் பகுதி பிளந்தது. அதில் விழுந்து இறந்து போனார்கள் வீரர்கள். அவர்களது ரத்தம் ஆறாக ஓடி மலையையே ரத்த நிறமாகியது. அதிலிருந்து அதற்கு சிவப்பு மலை என்று பெயர் வந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அந்தக் கிழவியோ, சிறுவனோ காணப்படவில்லை. எப்போது அந்தச் சிறுவன் திரும்பி வருகிறானோ அது வரை மலை சிவப்பாகத்தான் இருக்கும். பல உயிர்களைக் காப்பாற்றிய அப்பாவி சிறுவனைக் கொல்வதற்காகப் போட்ட வஞ்சகத் திட்டத்தை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.



# முயல் பற்றி அறிவீர்களா?

முயல் உலகின் பல பகுதிகளிலும் காணப்படும் ஒரு பாலூட்டி விலங்காகும். குடும்பமாக வாழும் இவை தாவர உண்ணிகளாகும். இவை நான்கு முதல் பத்து ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன. இறைச்சிக்காகப் பண்ணைகளிலும், செல்ல விலங்காக வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் காதுகள் இவற்றை குளிர்மையாக வைத்திருக்க உதவுகின்றன.

முயல்கள் சமவெளி காடுகள் சதுப்பு நிலங்கள் புல்வெளிகள் மற்றும் பாலை நிலங்களில் வாழும் விலங்கினமாகும். முயல்கள் கூட்டமாக வாழ்பவை. வட அமெரிக்கவில் முயல்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றன.

முயல்கள் மிக வேகமாக இனப்பெருக்கம் செய்பவை என்பதால் இவை பல நாடுகளில் வேளாண்மைக்கு அச்சுறுத்தலாக உள்ளன. முயல்களின் ஒருநாள் சராசரி உறங்கும் நேரம் 8.5 மணிநேரம்.

# தொடர் மொழிக்கு ஒரு மொழி


1. அகராதி - அகர வரிசை படி பொருளை தெரிவிக்கும் நூல்
2. அகால மரணம் - எதிர்பாராத மரணம்
3. அங்கதம் - வெளிப்படையாக புகழ்ந்தும் மறைமுகமாக இகழ்ந்தும் கூறுவது.
4. அட்டவதானி - ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்க கூடியவன்.
5. அட்டில் சாலை - உணவு சமைக்கும் இடம்
6. அணிந்துரை - ஒரு நூலிற்க நூலாசிரியர் தவிர்ந்து பிறிதொருவர் வழங்கும் சிறப்புரை
7. அனுபந்தம் - ஒரு நூலின் இறுதியில் சேர்க்கப்டுவது.
8. அந்தாதி - ஒரு பாடலின் முடிவு அடுத்த பாடலின் தொடக்கமாக அமையப் பெறுவது.
9. அம்பலம் - பயணிகள் தங்கி செல்லும் இடம்
10. ஆதீனம் - சமயப் பணி செய்யும் இடம்.
11. ஈமைச் சடங்கு - மயானத்தில் செய்யப்பாடும் இறுதி சடங்கு.
12. ஊதாரி - வீணாக பணம் செலவு செய்பவன்
13. எப்பில் வைப்பு - முதுமைக்கால தேவைக்காக சேமிக்கும் பணம்.
14 ஏக போகம் - தனக்கே உரிமையாக முழு பொருளையும் அனுபவித்தல்
15. ஏட்டு சுரக்காய் - அனுபவம் சேரா கல்வி
16. கண் காணி - தொழிளாலரை மேற்பார்வை செய்பவர்.
17. கருத்தரங்கு - ஒர பொருள் பற்றி பலர் வழங்கும் கருத்துரை
18. சகபாடி - ஒரே பாடசாலையில் ஒன்றாக படித்தவர்
19. சங்கமம் - ஆறு கடலோடு கலக்குமிடம்
20. சதுக்கம் - நான்னு தெருக்கல் ஒன்று கூடும் இடம்.

தி.தனகஸ்தன்
தரம் 8
நியூட்டன் அக்கடமி

## விடுகதை

1. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?
2. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?
3. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன், பள்ளநீரைக் கண்டு பதைபதைக்கிறான். அது என்ன?
4. கலர்ப்பூ கொண்டைக்காரி, காலையில் எழுப்பிவிடுவாள். அது என்ன?
5. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அது என்ன?
6. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?
7. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு, வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன?
8. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை. அது என்ன?
9. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?
10. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்?

(1. மின்விசிறி 2. தொலைபேசி 3. நெருப்பு 4. சேவல் 5. சோளக்கதிர் 6. உப்பு 7. உளுந்து 8. ஈ 9. ஈசல் 10. எறும்பு)





பொஸ்டனில் வசிக்கும் இசபெல்லா, வளர்க்கும் கிளி இறகுகள் முழுவதும் உதிர்ந்து, வெற்றுத் தோலுடன் பரிதாபமாக இருக்கிறது. "என் நாய் வாசலுக்கு அழைத்தது. அங்கே மசாலாவுக்குத் தயாராக இருக்கும் இறைச்சி போல இந்தக் கிளி இருந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. சட்டென்று என்னிடம் ஒட்டிக்கொண்டது. மருத்துவரிடம் காட்டியபோது, வைரஸ் பாதிப்பால் இறகுகள் கொட்டிவிட்டன என்றார். இந்த நோய்க்கு மருத்துவம் இல்லை. வாழ்நாள் முழுவதும் கிளி இப்படித்தான் இருக்கப் போகிறது. இறகுகள் இல்லாததால், குளிரைத் தாங்க முடியவில்லை. இரவெல்லாம் கம்பளிக்குள் வைத்திருப்பேன். பகலில் ஸ்வெட்டர்களை அணிவிக்கிறேன்" என்கிறார். இறகுகள் உதிர்ந்தாலும் கிளிதானே? மனிதர்கள் இதை வெறுத்தாலும், மனிதர்களின் அன்புக்காக மிகவும் ஏங்குகிறது. இணையத்தில் படங்களை வெளியிட்ட பிறகு, உலகம் முழுவதிலுமிருந்து கிளிக்கு கடிதங்கள், வாழ்த்து அட்டைகள், உணவுகள், ஸ்வெட்டர்கள் என்று வந்துகொண்டே இருக்கின்றன. நோய் பாதிப்பு குறைவாக இருப்பதால், அதன் உயிருக்கு உடனே எந்த ஆபத்தும் இல்லை. கிளி வாழும் வரை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும்" என்கிறார் இசபெல்லா.



இங்கிலாந்தில் நாய்களுக்கான ஆடை அலங்கார போட்டியில் லாங்ஷர் பகுதியை சேர்ந்த ஸ்புட் என்ற 3 வயது பாக்சர் இன நாய் டொனால்டு டிரம்ப் போன்று உடை அணிந்து இருந்ததால் பரிசை தட்டிச் சென்றது.



கண்டியில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கப்பாதை. நிலத்தின் கீழ் 30 அடி ஆழத்தில் நீண்டு செல்கிறது. நீர்வழங்கல் பணிகளிற்காக நிலத்தை அகழ்ந்தபோது சுரங்கம் கண்டறியப்பட்டுள்ளது. சுரங்கப்பாதை இரு கிளைப்பாதைகளாக பிரிவதாகவும், 300 மீற்றர் வரை நடந்து செல்ல முடிவதாகவும் பிரதேசவாசிகள் கூறுகின்றனர். இருள், வெப்பம், சுவாசிப்பதில் சிக்கல் காரணமாக யாரும் அதிக தூரம் செல்லவில்லை. கண்டி யுகத்தில் ஹிங்குராங்கெத்த வரையிருந்ததாக கூறப்பட்ட இரகசியப்பாதையாக இது இருக்கலாமென கூறப்படுகிறது.



கேரள முன்னாள் முதல்வர் உம்மன் சாண்டி ரெயிலில் எந்தவித பாதுகாப்பும் இன்றி 160 கி.மீ தூரம் சாதாரண பயணியைப் போல் ரெயிலில் பயணம் செய்துள்ளார். அப்போது பயணி ஒருவரால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.


BRIGHT INN
பிறையிட் இன் ஹோட்டல்



அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

BRIGHT INN

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
0112 329664, 0117 242233, 0117 242244
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel.: 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933



தீபம் குடும்பத்துடன் இணைந்து பணியாற்ற உங்களுக்கு விருப்பமா?
பின்வரும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்கள் இன்றே விண்ணப்பியுங்கள்

HURRY UP
விரையுங்கள்



உடன் வேலை வாய்ப்பு...

நாடு முழுவதும் வெளியாகும் தீபம் வாரமலர் பத்திரிகைக்கு
சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர் (விளம்பரம்)
நேரடி விற்பனையாளர்கள்
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களுக்கு தேவைப்படுகின்றார்கள்...


தொடர்புகளுக்கு : 076 825 5560, 021 492 7561










இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 16.10.2016 அன்று வெளியிடப்பட்டது.